
# பொருளியல் நோக்கு

ஜூன் – ஆகஸ்ட் 2000

## சுற்றுலா கைத்தொழில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் இலங்கை



கேளிக்கை





கைவினைப்பொருட்கள்








வனவிலங்குகள்



உள்ளூர் உணவு







சுற்றுச்சூழல் மற்றும் உயிரினவியல் சூழல் சுற்றுலா

உண்ணாட்டு மருத்துவம்



மரபுரிமை



கலாச்சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# பொருளியல் நோக்கு

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர்
மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.

[illegible]

இணையாசிரியர் : தமிழ் பதிப்பு -
பொருளியல் நோக்கு
[illegible]

[illegible]

மலர் 26 இதழ்கள் 03/04/05 ஜூன்/ஆகஸ்ட் 2000

## மாணவர் பொருளியல்

ஏ. கொலன்சுரியப்பெரும 30 சிறு தொழிலாளரின் பரவல் மற்றும் சந்தையாற்றல் ஊடாக வறுமை நிலைதிருத்திக் கொள்வதற்கு அவசியமான சந்தைப்படுத்தல் திறன்

## சுற்றுலாத் துறை

ஜே. எம். ஏ. ஜயவிக்ரம 02 இலங்கையில் சுற்றுலாத்துறை: அண்மைக் கால போக்குகள்

கே.ஏ.டி. ஜோதி மாலிகா 08 அரசாங்க தலையீட்டுடன் கூடிய விருத்தியில் சுற்றுலாத் துறையிலான நிலையான வளர்ச்சி

சுற்றுலாத் துறை அமைச்சருடன் நேர்காணல் 17 சுற்றுலாத் துறை : வளர்ச்சி வாய்ப்புக்கள்

ஜே.பீ. கிரியெல்ல 20 உலக சுற்றுலா தாபனம் : ஒரு விளக்கம்

ஹரேந்திர டி. சில்வா 22 சிறுவர் பாலியல் சுற்றுலாத் துறை

டப்ளிவ். ஏ. அதுல குணபால, எம்.எஸ்.எம். அஸ்லம் 26 இலங்கையில் சுற்றுலா கைத்தொழில் தற்போதைய போக்குகளும் பொருளாதாரத்துக்கான பங்களிப்பும்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

அடுத்த இதழ்

போட்டித் திறன்

அட்டைப் படம் : நவரத்ன விஜயதிலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] புத்தகசாலை
[illegible] ஆஸ்பத்திரி வீதி

# இலங்கையின் சுற்றுலாத் துறை
## அண்மைக் கால போக்குகள்

ஜே. எம். ஜயவிக்ரம
(விரிவுரையாளர், புவியியல் துறை,
பேராதனை பல்கலைக்கழகம்)

சுற்றுலாத் துறை அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் காணப்படும் வளர்ச்சிப் பெறுமதிக்கு [illegible] ஒழுங்கமைந்த வழிமுறைகளைக் கொண்டிருக்கும் ஒரு துறையாக இருந்து வருகின்றது. அது அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றது. சுற்றுலா என்பது மக்கள் தமது வழமையான வேலையிடங்களிலிருந்தும் இருப்பிடங்களிலிருந்தும் வேறு இடங்களுக்கு தற்காலிகமாக நகர்ந்து செல்வதாகும் என மத்தீசன் மற்றும் வோல் (1982) ஆகியோர் குறிப்பிடுகின்றனர். மேலும், தாம் செல்லும் இடங்களில் அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும், அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கென உருவாக்கப்படும் வசதிகளையும் அவர்கள் சுற்றுலாத் துறையினுள் உள்ளடக்குகின்றனர். சர்வதேச சுற்றுலாத் துறை என்பது, வளர்முக நாடுகளில் அபிவிருத்திக்கு வாய்ப்புக்களைக் கொண்டதும், சிக்கலானதும், மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டதுமான ஒரு கைத்தொழிலாக இருந்து வருவதாக [illegible] (1976) எடுத்து விளக்கியுள்ளார். இந்த வகையில் சுற்றுலாத் துறை உலகில் மிகப் பெரிய கைத்தொழிலாக பரவலாக கருதப்பட்டு வருகின்றது. சுற்றுலாத் துறை இன்று பொருளாதார முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் சமூக முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் கணிசமான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த பல தசாப்தங்களின் போது பெரும்பாலான வளர்ச்சியடைந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரத் துறையாக அது இருந்து வந்துள்ளது. எனவே, சேவைப் பொருளாதாரத்தின் ஒரு மிகப் பெரிய கூறாக சுற்றுலாத் துறை உருவாகி வந்துள்ளது.

சுற்றுலாத் துறை என்பது ஒரு புராதன நிகழ்வாகும். கடந்த காலத்தின் சுற்றுலாப் பயணிகள் வணிகர்களாக, யாத்திரிகர்களாக, புராதன கலாசாரங்களைத் தேடிச் செல்லும் அறிஞர்களாக, புதிய பரவசம் மிக்க அனுபவங்களை நாடிச் செல்லும் பயணிகளாக இருந்து வந்துள்ளனர் (பட்டியா, 1992:1). வரலாறு நெடுகிலும் மக்கள் வணிகம், சமய நம்பிக்கைகள், பொருளாதார ஆதாயம், போர், குடிபெயர்வு மற்றும் பல்வேறு வகைப்பட்ட மனித அபிலாசைகள் என்பவற்றின் காரணமாக பயணங்களை மேற்கொண்டு வந்துள்ளனர் (திரிபோவெல், 1994:3). நவீன சுற்றுலாத்துறை தெளிவாகவே இருபதாம் நூற்றாண்டின் ஒரு தோற்றப்பாடாகும். "கைத்தொழில் புரட்சியின் தோற்றத்துடன் மத்திய தர வர்க்கத்தின் எழுச்சியும், [illegible] நிதியில் செலவு குறைந்த போக்குவரத்து வசதிகளும் உருவாகின. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி காலத்தின் போதே பாரிய சுற்றுலாத் துறை தோற்றம் பெற்றது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இரண்டாவது உலக போரையடுத்து ஏற்பட்ட [illegible] விமானப் போக்குவரத்துச் சேவையின் செயற்பாடும், 1950 களில் ஜெட் விமானங்களின் அறிமுகமும் சர்வதேச பிரயாணத்தின் துரித வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் மேலும் தூண்டிவிட்டன" (திரிபோவெல், 1994:3). இரண்டாவது உலகப் போரின் பின்னர் சுற்றுலாக் கைத்தொழிலின் செயலாற்றுகையானது பெருமளவுக்கு கவர்ச்சிகரமானதாக இருந்து வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு, சம்பாதிக்கப்பட்ட அந்நியச் செலாவணி, கட்டப்பட்ட ஹோட்டல்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றில் அதனைக் காணமுடிகிறது.

பிரயாணத்துக்கான உளத்தூண்டுதல் தொடர்பான கோட்பாட்டு ரீதியான ஆய்வுகளில் பொதுவாக வலியுறுத்தப்படும் கருப்பொருள், அன்றாட நாளாந்த வேலை வழக்கங்களிலிருந்தும் வீட்டுச் சூழலிலிருந்தும் விடுபட்டு புதிய அனுபவங்களை தேடிச் செல்லும் மனிதனின் உள்ளார்ந்த நாட்டமாகும். [illegible] (1970) இரண்டு வகையான சுற்றுலாப் பயணிகளை வகைப்படுத்துகிறார்: (1) "அலைந்து திரிய விரும்புவோர்கள்" - இருக்கும் இடத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கான விருப்பம் (2) "சூரியனுக்கான விருப்பம்" அதாவது, வீட்டுச் சூழலில் அனுபவிக்க முடியாத ஒரு அனுபவம். பிரயாணத்துக்கான பல்வகையான உளத் தூண்டுதல்களை நெறிப்படுத்தி வருவதாக விவாதிக்கப்படுகின்றது. கலை, வரலாறு, சமூக கலாசாரம், புதுமைத்தன்மை, விளையாட்டு மற்றும் களிப்பு, வெளிநாட்டு மக்கள், இடங்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த ஆர்வம், உறவினர்களை, நண்பர்களை சென்று பார்த்தல், ஒரு மாற்றத்துக்கான விருப்பம், விமானத்தில் பறத்தல், கடலில் செல்லல் போன்ற அதனோடுடன் கூடிய பொழுதுபோக்குகள், கல்வி மற்றும் வணிகம் என்பன ([illegible] 1988, பட்டியா, 1992). இந்த உளத் தூண்டுதல்களின் அடிப்படையில், சுற்றுலாப் பயணிகள் புறப்படும் நாடுகளின் வாழ்க்கைக் காலமும் சுற்றுலாத் துறைக்கான கேள்வியை நிர்ணயம் செய்கின்றன.

எவ்வாறிருப்பினும், சுற்றுலாத் துறைக்கான பொருள் வழங்கல் என்பது ஒரு சிக்கலான பணியாக இருந்து வருகின்றது. ஏனெனில், இந்தப் பண்டத்தின் இடப் பரப்பு அசைக்க முடியாததாக இருப்பதுடன், அதனை இடம்பெயர்க்க முடியாதுள்ளது. கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதனைப் பரிசீலனை செய்து பார்க்க முடியாது. அதனை நுகர்வதற்காக பிரயாணம் மேற்கொள்வது அவசியமாகும். இயற்கை வளங்களிலும் மனிதனால் உருவாக்கப்பட்ட மூல வளங்களிலும் அது பெருமளவுக்குத் தங்கியிருக்கின்றது. சுற்றுலாத் துறைக்கான வழங்கல் பல கூறுகளைக் கொண்டதாக அமைகின்றது. இயற்கைக் காட்சிகள், தாவரங்கள், விலங்குகள் (போன்ற) இயற்கைக் கவர்ச்சி, (மனிதனால் உருவாக்கப்பட்ட) மனிதனால் உருவாக்கப்பட்ட வசதிகள், கலாசார நிகழ்வுகள், தங்குமிட வசதி, உணவு வழங்கல், கேளிக்கை, போக்குவரத்து, பயணிகள் முகவர்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் போன்றவர்களால் வழங்கப்படும் இணைந்த சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை [illegible] (1997, பட்டியா, 1982, [illegible] 1988).

சர்வதேச சுற்றுலாத் துறையிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் பெரும்பாலான நாடுகளுக்கு போக்குவரத்து பெறுமதி மிக்க ஒரு வருமான மார்க்கத்தை வழங்க முடியும். பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகளுக்கு அவர்கள் சேவை செய்யும் தொழில்துறை சுற்றுலாப் பயணிகள் சென்றடையும் நாடுகளின் வருமானம், வேலைவாய்ப்பு, அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாய், சென்மதி நிலுவை, சுற்றுச் சூழல் மற்றும் கலாச்சாரம் என்பவற்றின் மீது கணிசமான அளவிலான தாக்கங்களை எடுத்து வருகின்றன (சின்க்லயார் மற்றும் ஸ்டேப்லர், 1997). அரசாங்கங்கள் தமது தேசிய பொருளாதாரங்களை வளர்த்தெடுப்பதற்கும், அன்னியச் செலாவணி நிலையை விருத்தி செய்து கொள்வதற்கும் என சர்வதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சுற்றுலாத் துறைக்கான கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி வாழ்க்கைத் தரங்களை சீர்குலைத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்க முடியும். சுற்றுலாத் துறையில் ஏற்படும் பெருக்கத்தின் விளைவாக வேலை வாய்ப்புக்கள், வருமானங்கள், வெளியீடு என்பவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்படுவதுடன். பணவீக்கமும் உயர்ந்து செல்ல முடியும். மேலும், சுற்றுச் சூழலின் தரம் மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை என்பவற்றுக்கு அது அச்சுறுத்தல்களை எடுத்து வரவும் முடியும். எனவே, சுற்றுலாத் துறைக்கான கேள்வி தனிநபர்கள், குடும்பங்கள், தனியார் வர்த்தகங்கள் மற்றும் பொதுத் துறை போன்ற பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகள் மீதும் தாக்கங்களை எடுத்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், பொருளாதாரத்தின் மீதான சுற்றுலாத் துறையின் தாக்கம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் காலம், நடவடிக்கைகள் போக்குவரத்து முறை, பிரயாண ஏற்பாடுகள் முதலிய ஏனைய அம்சங்களிலும் தங்கியுள்ளது. சுற்றுலா பயணிகளைப் பெற்றுக் கொள்ளும் ஒரு நாட்டுக்கு சுற்றுலாத்துறையின் மூலம் கிட்டும் உண்மையான அனுகூலங்கள் சுற்றுலாப் பயணிகள் செலவு செய்யும் அளவை விடவும் பெருமளவுக்கு குறைந்து வருகின்றன என சிலர் வாதிடுகின்றனர். சுற்றுலாப் பயணிகள் செலவு செய்யும் பணத் தொகைகளின் ஒரு பாகம் பயணிகளுக்கான உணவுக் பொருட்களையும் அவர்களுடைய ஏனைய தேவைகளையும் இறக்குமதி செய்வதற்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்நியச் செலாவணியை சம்பாதிக்கக் கூடிய ஒரு மூலம் என்ற முறையிலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய ஒரு முறையென்ற முறையிலும் 1960 களின் நடுப் பகுதி வரையில் இலங்கை சுற்றுலாத் துறையின் உள்ளார்ந்த ஆற்றல் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை என கூறப்படுகின்றது. எனினும், 1966 இல் சுற்றுலாச் சபை ஸ்தாபிக்கப்பட்டதனை அடுத்தும் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக் கென அரசாங்கங்களினால் கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதனை அடுத்தும் 1960 களின் பிற்பகுதி தொடக்கம் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகையில் துரிதமான ஒரு அதிகரிப்பு ஏற்பட்டது (சந்தரத்ன, 1995). மேலும், அன்னியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வங்கித் தொழில் வசதிகள் என்பவற்றுடன் தொடர்பான 1977 இன் கொள்கைச் சீர்திருத்தங்கள் சுற்றுலாக் கைத்தொழிலின் செயற்பாடுகளை தாராளமயமாக்கியது. நிலையான செலாவணி விகித முறைக்குப் பதிலாக மிதக்கும் செலாவணி முறை பின்பற்றப்பட்டதும், அன்னியச் செலாவணி வங்கி அலகுகளின் ஸ்தாபிதமும் வெளிநாட்டவர்களின் கொடுக்கல் வாங்கல்களை மேலும் இலகுபடுத்தின. ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் என்பவற்றின் நிர்மாணம் மற்றும் இயக்குதல் என்பவற்றுக்கு ஐந்து வருட வரி விடுமுறை, பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் என்பவற்றுக்கென மூலதனக் கொடுப்பனவு, சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை வழங்கும் கட்டடங்களுக்கு தொகையாக பெறுமானத் தேய்வு கொடுப்பனவு போன்ற நிதி வழிமுறை களுக்கூடாக அரசாங்கம் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஊக்குவிப்புக் களை வழங்கியுள்ளது. இந்த முயற்சிகள் இக் கைத்தொழிலை துரித வளர்ச்சிக் கட்டமொன்றுக்கு உயர்த்தியதுடன், இதனையடுத்து 1970 களின் பிற்பகுதியிலும் 1980 களின் தொடக்கத்திலும் சுற்றுலாப் பயணிகளின் அளவிலும் அத்துறை மூலமான சம்பாத்தியங்களிலும் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவிலான அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

### சுற்றுலாத் துறையின் ஆற்றல்

நாட்டுக்குள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, அவர்கள் செலவிட்ட இரவுகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் இங்கு தங்கியிருந்த கால அளவு என்பவற்றைக் கொண்டு சுற்றுலாத் துறையின் பரிமாணத்தை மதிப்பிட்டுக் கொள்ள முடியும். 1978 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 192,592 ஆகும். இது 1997 இல் 366,165 நபர்களாக அதிகரித்திருந்தது. பயணிகள் வருகையில் வருடாந்தம் சராசரி 6.3 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. எனினும், பயணிகளின் வருகையில் காலத்துக்குக் காலம் குறிப்பிடத்தக்க அளவிலான வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. மேலும், இலங்கையில் செலவிடப்படும் மொத்த சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை 1978 இல் 2,061 ஆயிரத்திலிருந்து 1997 இல்

**அட்டவணை 1**

**சுற்றலாத்துறையின் அளவு மறறும் பெறுமதி (1978-97)**

| வருடம் | வந்த பயணிகளின எண்ணிக்கை | தங்கிய இரவுகள் (000) | சுற்றுலாத் துறையின் மூலம் உத்தியோகபூர்வ ரீதியாக கிடைத்த வருமானம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் (ரு.மில்.) | பயணி ஒருவருக்கு (ரு. ) | சேவையின் % | மொஉஉ வின் % ஆக |
| 1978 | 192,592<br>(25.3) | 2061<br>(25.3) | 1589.0<br>(113.7) | 8251<br>(70.5) | 3.89 | 2.10 |
| 1980 | 321,780<br>(28.6) | 3548<br>(27.7) | 2393.4<br>(20.0) | 7488<br>(-6.7) | 4.91 | 2.81 |
| 1985 | 257,456<br>(-20.0) | 2365<br>(-17.5) | 1656.9<br>(-17.5) | 6432<br>(1.7) | 2.65 | 1.51 |
| 1990 | 297,888<br>(61.0) | 3225<br>(59.3) | 2187.9<br>(59.3) | 7345<br>(-1.8) | 3.20 | 1.69 |
| 1995 | 403,101<br>(-1.1) | 4024<br>(-5.9) | 2922.7<br>(-5.9) | 7251<br>(-4.9) | 3.05 | 1.74 |
| 1996 | 302,265<br>(-25.0) | 2947<br>(-28.6) | 2086.1<br>(-28.6) | 6901<br>(-4.8) | 2.06 | 1.20 |
| 1997 | 366,165<br>(21.1) | 2680<br>(24.9) | 2490.9<br>(19.4) | 6803<br>(1.4) | 2.31 | 1.34 |

(அ) 1982 இன் விலைகளில். அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிகள் முன்னைய வருடத்திலும் பார்க்க ஏற்பட்டுள்ள வளர்ச்சியை காட்டுகின்றன.

*ஆதாரம்* : இலங்கை சுற்றுலா சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3,680 ஆயிரமாக அதிகரித்திருந்தது. இக்காலப் பிரிவின் போது அது சராசரியாக 6.8 சத வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. எனினும், 1990 களின் நடுப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை 1997 இன் அளவிலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வானதாக இருந்து வந்தது. 1978-82 காலப் பிரிவும் 1990-94 காலப் பிரிவும் சுற்றுலாத் துறையில் செழிப்பு நிலை நிலவி வந்த காலப் பிரிவுகளாக இருந்து வந்தன. 1983-1989 மற்றும் 1995-96 காலப் பிரிவுகள் சுற்றுலாத் துறையில் பின்னடைவு ஏற்பட்டிருந்த காலப் பிரிவுகளாகும். செழிப்பு நிலை நிலவி வந்த காலப் பிரிவுகளின் போது பயணிகளின் வருகை 400,000 அளவுக்கு உச்ச மட்டத்தில் இருந்து வந்துள்ளது.

அட்டவணை 2 சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, மொத்த சுற்றுலா இரவுகள் என்பவற்றை எடுத்துக் காட்டுகின்றது. 1978-82 காலப் பிரிவின்போது இதில் முன்னெப்பொழுதும் இருந்திராத விதத்திலான 22 வீத வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. 1978-82 காலப் பிரிவின்போது சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 192,000 இருந்து 407,000 வரையில் அதிகரித்துச் சென்றது.

தங்குமிட வசதி, போக்குவரத்து மற்றும் அன்னியச் செலாவணி சந்தையில் ஒழுங்குவிதி தளர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் சுற்றுலா பயணிகளுக்கான வசதியில் ஏற்பட்ட விருத்தியின் காரணமாகவே பிரதானமாக இந்த வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆனால், 1970 களின் பிற் பகுதியிலும் 1980 களின் தொடக்கத்திலும் சுற்றுலா துறையில் நிலவி வந்த செழிப்பு நிலை 1983 இல் தோன்றிய இனக் கலவரங்களை அடுத்து வீழ்ச்சி கண்டது. வரலாற்றில் கறுப்பு ஜுலை என்றழைக்கப் படும் நாடளாவிய ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த இந்த வன்செயல்கள் குறிப்பாக மேற்கைரோப்பிய நாடுகளில் இலங்கையின் நற்பெயருக்கு பெருமளவுக்கு களங்கம் விளைவித்திருந்தது. இதன் விளைவாக 1983-87 காலப் பிரிவின்போது சுற்றுலாப் பயணிகளின் வருகையில் செங்குத்தான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இந்த மந்த நிலை சுற்றுலா பயணிகள் தங்கியிருக்கும் கால அளவு மற்றும் சம்பாத்தியங்களின் இழப்பு என்பவற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது மிக மோசமான ஒரு காலப் பிரிவாக இருந்து வந்தது. இது சுமார் 7 வருடங்கள் வரையில் நீடித்ததுடன், அக் காலப்பிரிவின்பேது வருடாந்தம் நாட்டுக்குள் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 200,000 க்கும் குறைவாக வீழ்ச்சி அடைந்திருந்தது.

பயணிகளின் வருகை யில் சராசரியாக 15 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 1983 தொடக்கம் சீர்குலைந்து வந்துள்ள பாதுகாப்பு நிலைமையின் விளைவாக மிகவும் மோசமான விதத்தில் பாதிக்கப்பட்ட கைத் தொழில்களில் சுற்றுலா கைத்தொழிலும் ஒன்றாகும்.

கடன்களை மீள அட்டவணைப்படுத்துதல், அபராத வட்டி விதிப்பினை இடைநிறுத்தம் செய்தல், மிக மோசமாக பாதிக்கப்பட் டிருந்த ஹோட்டல்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றுக்கான தொழில்படு மூலதன தேவைகளுக்கென வட்டியில்லா கடன்களை வழங்குதல் போன்ற ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் 1980 களின் நடுப் பகுதிகளின் போது அரசாங்கம் சுற்றுலாத் துறைக்கு ஊக்க மளித்து வந்தது. மேலும், இலங்கை தொடர்பாக வெளிநாடுகளில் நிலவி வந்த மோசமான அபிப்பிராயத்தை மாற்றியமைப் பதற்கு இலங்கை சுற்றுலா சபை மேற்கொண்டு வந்த முயற்சிகள் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா ஆகிய பிரதேசங்களில் நல்ல விளைவுகளை எடுத்து வந்திருந்தன. இதன் காரணமாக 1980 களின் பிற்பகுதியில் நாட்டுக்குள் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை யிலும் அவர்கள் இங்கு செலவிடும் இரவுகளின் எண்ணிக்கையிலும் கணிசமான அளவில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. 1988-92 காலப் பிரிவின் போது சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த சுற்றுலா இரவுகள் என்பவற்றில் சராசரியாக முறையே 19 சதவீத வளர்ச்சியும் 14 சதவீத வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தன. இந்த சாதகமான நிலைமைகள் 1994 இல் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை சாதனை மட்டமான 407,511 பயணிகள் என்ற அளவுக்கு உயர்த்தியிருந்தன.

எவ்வாறிருப்பினும், மீண்டும் 1995 மற்றும் 1996 ஆகிய வருடங்களின் போது சுற்றுலா கைத்தொழில் மீண்டும் ஒருமுறை ஒரு வீழ்ச்சி நிலையை எதிர்கொண்டது. இந்த வருடங்களின் போது பயணிகளின் வருகையில் முறையே 01 சதவீத வீழ்ச்சியும் 25 சதவீத வீழ்ச்சியும ஏற்பட்டிருந்ததுடன், மொத்த சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கையில் முறையே 5 சதவீத வீழ்ச்சியும் 27 சதவீத வீழ்ச்சியும் ஏற்பட்டிருந்தது. இக்காலப் பிரிவின்போது தலைநகர் கொழும்பில் தொடராக இடம் பெற்று வந்த பல பயங்கரவாத சம்பவங்களின் மோசமான தாக்கத்தின் விளைவாகவே இந்த வீழ்ச்சி ஏற்பட் டிருந்தது எனக் கூறப்பட்டது. எனினும், 1997 இல் சுற்றுலா கைத்தொழிலில் ஏற்பட்ட துரித வளர்ச்சி 1993-97 காலப் பிரிவின்போது இடம்பெற்று வந்த மோசமான வளர்ச்சியை ஈடு செய்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்பொழுது 1997 இல்

**அட்டவணை 2**

**சுற்றுலா துறையின் சராசரி வளர்ச்சி விகிதங்கள் (1978-97)**

| காலம் | பயணிகளின் வருகை | சுற்றுலா இரவுகள் | சுற்றுலா துறையிலிருந்து வருமானம் | | | | மொ.உ.உ வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வளர்ச்சி % | வளர்ச்சி வீச்சு | வெளியீட்டின் நிறையேற்றப் பட்ட வளர்ச்சி | பயணி ஒருவருக்கு | |
| **1978-82** | **21.8** | **20.1** | **27.0** | **6.2** | **0.60 (10.0)** | **12.2** | **6.0** |
| **1983-87** | **-14.8** | **-9.2** | **-12.2** | **-2.6** | **-0.30 (-7.1)** | **3.1** | **4.2** |
| **1988-92** | **18.6** | **13.8** | **15.9** | **2.6** | **0.21 (5.2)** | **-2.4** | **4.0** |
| **1993-97** | **-0.3** | **-0.5** | **-1.7** | **-0.9** | **-0.05 (-0.9)** | **-1.6** | **5.6** |
| **1978-97** | **6.3** | **6.1** | **9.8** | **1.4** | **0.12 (2.4)** | **2.8** | **5.0** |

*குறிப்பு* : அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்துக்கான பங்களிப்பு வீதத்தைக் காட்டுகின்றன.

வளர்ச்சி வீச்சு மெய்வளர்ச்சி நெகிழ்ச்சித் தன்மையை காட்டுகின்றது. இது சுற்றுலாத் துறை மூலமான வருமான வளர்ச்சியின் சதவீதத்தை மொ.உ.உ. வளர்ச்சி வீதத்தினால் வகுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

வெளியீட்டின் நிறையேற்றப்பட்ட வளர்ச்சி மொ.உ.உ. வளர்ச்சி சுற்றுலாத் துறையின் மூலம் எந்த அளவுக்கு எடுத்து வரப்படுகின்றது என்பதனை அளவிடுகின்றது.

*ஆதாரம்* : **இலங்கை சுற்றுலா சபை, வருடாந்த புள்ளிவிபர அறிக்கை-1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலா பயணிகளின் வருகையிலும் சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கையிலும் முறையே 21 சதவீத வளர்ச்சியும் 31 சதவீத வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, கடந்த 20 வருட காலத்தின்போது (1978-97) சுற்றுலாத் தொழில் பயணிகளின் வருகை அடிப்படையில் சுமார் 6.3 சதவீதத்தினாலும், சுற்றுலா இரவுகளின் அடிப்படையில் சுமார் 6.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

சுற்றுலா பயணிகள் நாட்டில் தங்கியிருக்கும் காலம் சுற்றுலாத் துறையின் பரிமாணத்தை அளவிடுவதற்கான மற்றொரு அளவு கோலாகும். 1978-97 காலப்பிரிவின் போது பயணிகளின் சராசரி தங்கியிருக்கும் காலம் 10.6 இரவுகளாக இருந்து வந்துள்ளது. இது 1978-87 மற்றும் 1992-97 ஆகிய காலப் பிரிவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஓர் உயர் மட்டமாக இருந்து வருகின்றது ஆனால், 1985-91 காலப் பிரிவின் அளவிலும் பார்க்க குறைவாக காணப்படுகிறது. 1978-84 மற்றும் 1992-97 ஆகிய காலப் பிரிவுகளின்போது இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்கள் இங்கு நீண்ட காலம் தங்குவதற்கு தயக்கம் காட்டினர். இது சுற்றுலா துறையிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் அளவை நேரடியாக பாதித்தது. சுற்றுலா பயணிகள் இங்கு மிக குறைந்த அளவிலான இரவுகளை செலவிடும் பொழுது அவர்கள் செலவுசெய்யும் பணத்தொகைகளும் குறைவடைகின்றன. நாட்டுக்குள் வந்த சுற்றுலா பயணிகளில் 2 அல்லது 3 சத வீதத்தினர் மட்டுமே ஒரு மாதகாலத் துக்கும் கூடுதலாக தங்கியிருந்தனர். சுமார் 80 சதவீதமான பயணிகள் 2 வார காலப் பிரிவுக்கும் குறைவாகவே இங்கு தங்கியிருந்தனர்.

எனினும், 1985-91 காலப் பிரிவின்போது இப்போக்கு மாற்றமடைந்திருந்தது. குறுகிய காலம் மட்டும் தங்கியிருக்கும் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன், 32 சதவீதத்துக்கும் மேற்பட்ட பயணிகள் 3 வார காலத்துக்கு மேற்பட்ட காலத்தை இங்கு செலவிட்டனர். சுமார் 17 சதவீதமான பயணிகள் ஒரு மாத காலத்துக்கும் மேலாக இங்கு தங்கியிருந்தனர். இதன் விளைவாக இக்காலப் பிரிவின்போது பயணி ஒருவரின் சராசரி தங்கியிருக்கும் காலம் 11.3 இரவுகளாக அதிகரித்திருந்தது. 1978-97 கால கட்டம் முழுவதிலும் குறுகிய காலம் மட்டும் தங்கியிருப்பதற்கென பெருந் தொகையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். மொத்த பயணிகளில் சுமார் 7 சதவீதத்தினர் மட்டுமே ஒரு மாத காலத்துக்கும் மேலாக இங்கு தங்கியிருந்தனர். சுமார் 15 சதவீதமான பயணிகள் 3 வார காலம் தங்கினர்.

இலங்கையின் சுற்றுலா கைத்தொழில் பிரதானமாக மேற்கைரோப்பியாவிலிருந்தும் ஆசிய நாடுகளிலிருந்தும் வரும் சுற்றுலா பயணிகளிலேயே தங்கியுள்ளது. இலங்கைக் கான மொத்த சுற்றுலா பயணிகளில் சுமார் மூன்றில் ஐந்து பங்கினர் மேற்கைரோப்பிய நாடுகளிலிருந்தே வந்தனர். எனினும், இலங்கைக்கான மேற்கைரோப்பிய சுற்றுலா பயணிகளின் வருகை 1991 இல் 61 சதவீதமாக இருந்து 1997 இல் 59 சதவீதமாக சிறிதளவுக்கு வீழ்ச்சி கண்டிருந்தது. வட அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகள் என்பவற்றிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கைகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தமையே இதற்கான காரணமாகும். ஏனைய நாடுகளிலிருந்து வரும் பயணிகளின் அதிகரிப்புக்கு பிரதானமாக தென்னாபிரிக்காவே பங்களிப்பு வழங்கி யுள்ளது. எவ்வாறிருப்பினும், மேற்கைரோப் பிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1991 இல் 192,054 ஆக இருந்து 1997 இல் 212,052 ஆக அதிகரித்திருந்தது. அதே வேளையில் அண்மைக் காலத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் சுமார் 30 சதவீதத்தினர் ஆசிய நாடுகளிலிருந்தே வந்தனர். ஆசிய பிராந்தியத்தில் நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்த போதிலும் 1991 இல் 96,654 ஆக இருந்து வந்த ஆசிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1997 இல் 113,565 ஆக அதிகரித்திருந்தது. இப்பிராந்தியத்தில் அண்மையில் ஏற்பட்டிருந்த பொருளாதார மந்தம் ஏற்படாதிருந்தால் ஆசிய சுற்றுலா பயணிகளின் வருகையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்க முடியும்.

அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து மற்றும் அப்பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1991 இல் 9,747 ஆக இருந்து 1997 இல் 11,712 நபர்களாக சிறிதளவு அதிகரித் திருந்தது. ஆனால், இதில் சார்புரீதியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. மேலும், சந்தை வளர்ச்சி குறிகாட்டிகளின் பிரகாரம் அனைத்து பிராந்தியங்களி லிருந்தும் இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத் தக்க அளவிலா அதிகரிப்புகள் ஏற்பட்டுள்ளன. 1987-97 காலப் பிரிவின் போது மேற்கைரோப்பிய பயணிகளின் வருகையில் ஆகக்கூடிய அதிகரிப்பும் (11.3 வீதம்) வட அமெரிக்க பயணிகளன் வருகையில் ஆகக் குறைந்த அதிகரிப்பும் (5.1 வீதம்) ஏற்பட்டிருந்தது. கடந்த 10 வருட காலப் பிரிவின்போது ஆசியா, அவுஸ்திரேலியா மற்றும் ஏனைய நாடுகள் என்பவற்றிலிருந்து இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையிலும் உயர் மட்டத்திலான அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

முக்கியமாக விடுமுறையை கழிக்கும் நோக்கத்துடனும் உல்லாசமாக பொழுது போக்கும் நோக்கத்துடனும் பெரும்பாலான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகின்றார்கள். 1987 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளில் 87 சத வீதத்தினர் களிப்புடன் அனுபவித்து மகிழும் நோக்கத்துடனேயே இங்கு வந்தனர். இத்தகைய பயணிகளின் சதவீதம் 1997 இல் 95 சதவீதமாக அதிகரித்திருந்தது. 1987 இல் சுமார் 7.4 சதவீதமான சுற்றுலா பயணிகள் வர்த்தக நேக்கங்களுக்காக இங்கு வந்தனர். ஆனால், 1997 இன் முடிவின்போது இத்தகைய பயணிகளின் அளவு 3 சதவீதம் வரையில் வீழ்ச்சி கண்டுள்ளது. சமய மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கென இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் இருந்து வரவில்லை.

### சுற்றுலாதுறை மூலமான வருமானம்

ஒரு சில கால கட்டங்களில் கடுமையான தளம்பல் நிலைமைகள் இருந்து வந்த போதிலும் பொதுவாக பல தசாப்த காலமாக சுற்றுலாத் துறை மூலமான அன்னியச் செலாவணி சம்பாத்தியங்கள் அதிகரித்து வந்துள்ளன. சுற்றுலா துறையின் மூலம் கிடைத்த அதிகார பூர்வமான வருமானங்களின் (1982 விலைகளில்) மெய்ப் பெறுமதி 1978 இல் ரூ.1,589 மில்லியனாக இருந்து 1997 இல்

**அட்டவணை 3**

**சுற்றுலா பயணிகள் தங்கும் காலத்தின் சதவீத பகிர்வு (1978-97)**

| காலப் பிரிவு | இரவுகள் | | | | | | மொத்தம் | தங்கியிருக்கும் சராசரி காலம் (இரவுகள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1-3 | 4-7 | 8-14 | 15-21 | 22-30 | 31 மேல் | | |
| 1978-84 | 20.5 | 32.4 | 27.1 | 11.8 | 5.5 | 3.1 | 100.0 | 10.3 |
| 1985-91 | 4.3 | 13.7 | 27.3 | 23.1 | 14.6 | 17.0 | 100.0 | 11.3 |
| 1992-97 | 23.2 | 29.7 | 29.2 | 11.7 | 4.2 | 2.0 | 100.0 | 10.2 |
| 1978.97 | 16.0 | 25.3 | 27.7 | 15.5 | 8.1 | 7.4 | 100.0 | 10.6 |

ஆதாரம் : இலங்கை சுற்றுலா சபை, வருடாந்த புள்ளிவிபர அறிக்கை-1997.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூ.2,491 மில்லியனாக அதிகரித்திருந்தது. எவ்வாறிருப்பினும், வருமானங்களில் காணப்பட்ட காலப்பிரிவு அடிப்படையிலான வளர்ச்சிப் போக்குகள் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன. 1978-82 மற்றும் 1988-92 ஆகிய காலப் பிரிவுகளின் போது மொத்த வருமானம் முறையே 39 சதவீதத்தினாலும் 16 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட துரித விரிவாக்கம் காரணமாக சுற்றுலா துறையின் மூலமான வருமானங்களும் வேகமாக அதிகரித்துச் சென்றன.1983-87 மற்றும் 1993-97 ஆகிய காலப் பிரிவுகளின் போது சுற்றுலா கைத்தொழில் முறையே 12 சதவீத வீழ்ச்சியையும் 2 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்திருந்தது, எனினும், இத்துறையில் ஒரு மீட்சி இடம் பெற்று வருவதனை பிரதிபலிக்கும் விதத்தில் சுற்றுலா துறையின் மூலமான வருமானம் 1997 இல் முன்னைய வருடத்தைப் பார்க்கிலும் 19 சதவீதத்தினால் அதிகரித் திருந்தது. ஒட்டுமொத்த அடிப்படையில் 1978-97 காலப் பிரிவின்போது சுற்றுலா துறை மூலமான சம்பாத்தியங்கள் சராசரியாக 10 சதவீதத் தினால் அதிகரித்திருந்தன. சுற்றுலா துறையின் மூலமான வருமானம் பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சியலும் பார்க்க உயர்ந்த மட்டத்தில் வளர்ச்சி கண்டதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்துக்கு (1978-97) 20 வருட காலபிரிவின் போது 2.4 சதவிகித பங்களிப்பினை அது வழங்கியிருந்தது. எவ்வாறிருப்பினும், செழிப்பு நிலை நிலவி வந்த கால கட்டங்களின்போது இத்துறையின் வளர்ச்சி விகிதமும் மொஉஉ க்கான பங்களிப்பும் கணிசமான அளவில் உயர்வானதாக இருந்து வந்துள்ளது.

சேவைத் துறையின் வருமானத்துக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் பங்களிப்புச் செய்யப்பட்ட சுற்றுலாத் துறை மூலமான வருமானத்தின் சதவீதப் பங்கு கடந்த 20 வருட காலத்தின்போது முறையே 2-5 சதவீத வீச்சுக்குள்ளும் 1-3 சதவீத வீச்சுக்குள்ளும் இருந்து வந்துள்ளது. எனினும், சுற்றுலா கைத்தொழில் துறையில் செழிப்பு நிலை நிலவி வந்த 1970 களின் பிற்பகுதிகளிலும் 1980 களின் தொடக்கத்திலும் இந்த பங்களிப்புகள் பெருமளவுக்கு உயர் மட்டத்தில் இருந்து வந்துள்ளன. இதே வேளையில் பயணி ஒருவரிடமிருந்து கிடைக்கும் வருமானத்தின் மெய்ப்பெறுமதி 1978 இல் ரூ.8,251 ஆக இருந்து 1997 இல் ரூ.6,803 ஆக வீழ்ச்சி அடைந்திருந்தது. அது 1978 இல் முன்னைய வருடத்திலும் பார்க்க சுமார் 70 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந் திருந்தது. அதன் பின்னர் வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் மந்தமடையத் தொடங்கியது. பயணி ஒருவருக்கான வருமானம் தொடர்பான காலப்பிரிவு அடிப்படையிலான வளர்ச்சிப் போக்கின் பிரகாரம் கொள்கை சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட முதல் 5 வருடங்களின் போது இவ்வருமானம் சராசரியாக 12 சதவீதத்தினால் அதிகரித் திருந்தது. அடுத்த 5 ஆண்டு காலத்தின் போது (1983-87) அது சராசரியாக மூன்று சதவிகிதமாக அதிகரித்துச் சென்றிருந்தது. அதன் பின்னர் பயணி ஒருவருக்கான வருமானத் தொகை சுமார் 2 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது. சுற்றுலா பயணி ஒருவருக்கான வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை இது பிரதிபலிக்கின்றது. பயணிகள் குறுகிய காலம் மட்டும் தங்கியிருப்பதனாலேயே இந்த வருமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனக் கூறலாம். இந்த வகையில் நாட்டுக்குள் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் கணிசமான அளவில் அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும் வருமான உருவாக்க செயன்முறைக்கு அது தாக்கமான விதத்தில் பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லை.

சுற்றுலாத் துறை மூலமான வருமானம் பிரதானமாக ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் என்பவற்றுக்கு கிடைக்கும் வருமானம், இலங்கையில் வந்து இறங்குவதற்கான வரி, கலாச்சார முக்கோணத்துக்கு கிடைக்கும் வருமானம் மற்றும் ஏனைய வருமான மூலங்கள் என்பவற்றிலிருந்தே வருகின்றது. பயண முகவர் நிலையங்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான கடைகள் என்பவற்றின் சம்பாத்தியப் பங்கு 1997 இல் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. தாவரவியல் பூங்காக்கள், விலங்கியல் பூங்காக்கள் மற்றும் தேசிய பூங்காக்கள் என்பவற்றிலிருந்து உயர் அளவில் வருமானங்கள் கிடைத்தமையினால் ஏனைய வருமான வகைகளின் சார்புரீதியான பங்கு உயர்ந்து செல்வதற்கு அது பங்களிப்புச் செய்திருந்தது. 1988-97 காலப்பிரிவின் போது இந்த மூலங்களிலிருந்து கிடைத்த வருமானம் சராசரியாக 50 சத வீதத்தினால் அதிகரித்துச் சென்றுள்ளது.

### தங்குமிட வசதிகள்

சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கென அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் நாடெங்கிலும் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகளின் விரிவாக்கத்துக்கு உதவின. நாட்டில் 1997 இல் 7 ஐந்து நட்சத்திர ஹோட்டல்களையும், 2 நான்கு நட்சத்திர ஹோட்டல்களையும், 3 மூன்று நட்சத்திர ஹோட்டல்களையும், 30 இரண்டு நட்சத்திர ஹோட்டல்களையும் 86 வகைப்படுத்தப்படாத ஹோட்டல்களையும், 222 குறைநிரப்பு ஸ்தாபனங்களையும் கொண்ட 143 தரப்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் இருந்து வந்தன. நாடெங்கிலும் பரவலாக அமைந்திருந்த இந்த ஹோட்டல்கள் சுற்றுலா பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கி வந்தன. 1978 இல் தரப்படுத்திய ஹோட்டல்களில் இருந்து வந்த அறைகளின் எண்ணிக்கை 5,347 ஆகும். இது 1997 இல் 12,370 அறைகளாக அதிகரித் திருந்தது. இதே காலப் பிரிவில் கட்டில்களின் எண்ணிக்கை 10,431 இலிருந்து 22,944 அலகுகளாக அதிகரித்திருந்தது. இக் காலப்பிரிவின் போது தரப்படுத்தப்பட்ட ஸ்தாபனங்களில் இருந்து வந்த அறைகளின் எண்ணிக்கையிலும் கட்டில்களின் எண்ணிக்கையிலும் 5 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அறைகளைப் பயன்படுத்தும் விகிதம் சராசரியாக சுமார் 45 சதவீதமாக இருந்து வந்துள்ளதுடன், இக்காலப்பிரிவின் போது இது சராசரியாக இரண்டு சதவீதத்தினால் வளர்ச்சி கண்டு வந்துள்ளது.

குறைநிரப்பு ஸ்தாபனங்களில் இருந்து வந்த அறைகளின் எண்ணிக்கையும் கட்டில்களின் எண்ணிக்கையும் 1988 இல் முறையே 1936 ஆகவும் 1893 ஆகவும் இருந்து வந்து 1997 இல் 2,635 ஆகவும் 4,584 ஆகவும் அதிகரித்திருந்தன. இத்தகைய ஹோட்டல்களில் சுற்றுலா பயணிகள் செலவிட்ட இரவுகளின் சதவீதம் வருமாறு: 1988- தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள் 63.7, குறைநிரப்பு ஹோட்டல்கள் 2.5 மற்றும் ஏனையன 33.8, 1997 தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்கள் 79.8, குறைநிரப்பு ஹோட்டல்கள் 5.0 ஏனையவை 15.2. தங்குமிட வசதிகளின் (அறைகளின் எண்ணிக்கை) பூகோள ரீதியிலான பகிர்வின் பிரகாகம் தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களின் அடிப்படையில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்ட தங்குமிட வசதி கொழும்பிலும் தென்கரையோரப் பகுதியிலுமே ஒன்று திரண்டு காணப்படுகின்றது. எனினும் கொழும்பில் உள்ள தங்குமிட வசதிகளில் 1987 க்கும் 1997 க்கும் இடைப்பட்ட காலத்தின் போது 46 சதவீதத்திலிருந்து 39 சதவீதமாக சார்புரீதியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. தங்குமிட வசதிகளில் சுமார் 18 சதவிகிதம் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை போன்ற புராதன நகரங்களில் காணப்படுகிறது. மத்திய மலை நாட்டில் இருக்கும் தரப்படுத்தப்பட்ட ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கை 1987 இல் 293 ஆக இருந்து 1997 இல் 469 ஆக அதிகரித்திருந்தது. அதே வேளையில், 1997 இன் முடிவின்போது கிழக்கு கரையோரப் பிரதேசத்தின் தரப்படுத்தப்பட்ட ஹோட்டல் களில் சுமார் 114 அறைகளுடன் கூடிய தங்குமிட வசதி (அதாவது தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களின் மொத்த தங்குமிட வசதியின் 1 வீதம்) இருந்து வந்தது. எனினும், 1980 களின் நடுப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளின் பெருக்கம் காரணமாக இப் பிரதேசத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் கணிசமான அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது (இலங்கை சுற்றுலா சபை, 1997).

**சுற்றுலா துறையில் வேலைவாய்ப்புக்கள்**

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் சுற்றுலாவுடன் சம்பந்தப்பட்ட சேவை நிறுவனங்களின் எண்ணிக்கையிலும் விரிவாக்கம் ஏற்படும் பொழுது சுற்றுலா துறையுடன் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்புக் களின் அளவும் அதிகரிக்க முடியும். சுற்றுலாத் துறை நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. ஹோட்டல்கள், உண வகங்கள் முதலிய நிறுவனங்கள் மூலம் சுற்றுலா பயணிகளுக்கு பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்தல், சுற்றுலா முகவர் நிலையங்கள், சுற்றுலா பயணிகளுக்கான கடைகள், பொழுது போக்கு நிலையங்கள், விமானச் சேவைகள், தேசிய சுற்றுலாத் துறை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்கள் என்பவற்றுடன் சம்பந்தப் பட்ட நடவடிக்கைகளின் மூலம் நேரடி வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப் படுகின்றன. மறுபுறத்தில், இத்தகைய சுற்றுலா ஸ்தாபனங்களுக்கு பொருட்களை யும் சேவைகளையும் வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் மறைமுக வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

கடந்த 20 வருட காலத்தின்போது சுற்றுலா துறை மூலமான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் துரிதமாக அதிகரித்துச் சென்றுள்ளது. நேரடி வேலைவாய்ப்புக்கள் 1978 இல் 15,404 ஆக இருந்து 1997 இல் 34,006 ஆகவும், மறைமுக வேலைவாய்ப் புக்கள் 1978 இல் 20,795 இலிருந்து 1997 இல் 47,608 ஆகவும் அதிகரித்திருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், 1978-97 20 வருட காலப்பிரிவின் போது நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்கள் சராசரியாக 5 சதவீதத்தினால் அதிகரித்துச் சென்றுள்ளன. மறைமுக வேலைவாய்ப்புக் களின் எண்ணிக்கை இக்காலப் பிரிவு முழுவதிலும் நேரடி வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையிலும் பார்க்க கணிசமான அளவில் உயர் மட்டத்தில் இருந்து வந்துள்ளது. சுற்றுலா துறையின் மூலம் உருவாக்கப்பட்ட மொத்த வேலைவாய்ப் புக்கள் 1978 இல் 36,199 ஆக இருந்து 1997 இல் 81,614 ஆக அதிகரித்திருந்தது. எவ்வாறிருப்பினும், இக் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட செழிப்பு நிலை மற்றும் மந்தம் என்பவற்றுக்கேற்ப சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வந்த ஏற்றதாழ்வுகளை அடியொற்றி வேலை வாய்ப்புக்களின் அளவும் வேறுபட்டுச் சென்றுள்ளது.

1997 இல் சுற்றுலா துறையில் நேரடி வேலை வாய்ப்புக்களின் தொகுப்பு பின்வருமாறு அமைந்திருந்தது: (1) தொழில்சார் குழுக்கள், தொழில்நுட்ப, இலிகிதர் மற்றும் கண்காணிப்பு சம்பந்தப்பட்ட வேலைகள் - 53.4 வீதம், உடலுழைப்பு மற்றும் இயக்குதல் தொடர்பான வேலைகள் 33.5 விகிதம், முகாமைத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில் சார் வேலைகள் 13.1 விகிதம்; (2) நிறுவன அமைப்புக்கள்: ஹோட்டல்கள், உணவகங்கள் 62.9 விகிதம், பயண முகவரகங்கள் மற்றும் சுற்றுலா இயக்குபவர்கள் 12.6 வீதம், விமான சேவைகள் 12.5 விகிதம், சுற்றுலா பயணிகளுக்கான கடைகள் 4.7 விகிதம், அரச நிறுவனங்கள் 4.2 விகிதம், பொழுது போக்கு வசதிகளை வழங்கும் நிலையங்கள், வழிகாட்டிகள் மற்றும் தேசிய சுற்றுலா நிறுவனங்கள் 3.0 வீதம். ஹோட்டல்கள், உணவகங்கள், பிரயாண முகவரகங்கள், சுற்றுலா முகவரகங்கள் மற்றும் விமானச் சேவைகள் என்பனவே சுற்றுலாத் துறையில் பெரும்பாலான வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

**அட்டவணை 4**

**தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் தங்குமிடவசதி (1978-97)**

| வருடம் | அறைகளின் எண்ணிக்கை | | கட்டில்களின் எண்ணிக்கை | | அறைகள் பயன்படுத்தப் பட்ட விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| 1978 | 5347 | (10.2) | 1432 | (10.4) | 47.7 | (13.6) |
| 1980 | 6042 | (7.9) | 11790 | (5.2) | 57.8 | (9.5) |
| 1985 | 9826 | (2.1) | 19352 | (2.0) | 32.7 | (-8.1) |
| 1990 | 9556 | (1.0) | 18669 | (1.0) | 47.2 | (51.9) |
| 1995 | 11255 | (4.8) | 21680 | (3.6) | 52.6 | (-7.1) |
| 1997 | 12370 | (6.6) | 22944 | (4.1) | 49.1 | (21.8) |
| சராசரி 1978-97 | 9233 | (4.9) | 18000 | (4.9) | 44.9 | (2.0) |

*குறிப்பு* : அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள புள்ளிகள் முன்னைய வருடத்துக்கு எதிரான வளர்ச்சி வீதத்தை காட்டுகின்றன.

*ஆதாரம்:* இலங்கை சுற்றுலாசபை வருடாந்த புள்ளிவிபர அறிக்கை 1997.

**சாராம்சம்**

சுற்றுலா துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சி செயன்முறையில் மிக முக்கியமான ஓர் அனுகூல தாக்கத்தைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகும். அந்நியச் செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் வேலைவாய்ப்புக்களை உருவாக் குவதன் மூலமும் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கடந்த 20 வருட காலத்தின்போது இந்தப் பங்களிப்பு மிகவும் கணிசமான அளவில் இடம்பெற்று வந்துள்ளது. பிரதானமாக மேற்கு ஐரோப்பாவிலிருந்தும் ஆசிய நாடுகளி லிருந்துமே இலங்கைக்கு அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள். மேலும், இலங்கைக்கு வரும் பெரும்பாலான பயணிகள் குறுகிய கால உல்லாச பயணத்துக்காகவே வருகின்றனர். கடந்த 20 வருட காலத்தின்போது நாடெங்கிலும் உள்ள தரப்படுத்தப்பட்ட ஹோட்டல்களில் தங்குமிட வசதிகளில் துரித அதிகரிப்பு ஏற்பட்டு வந்திருக்கிறது.

எவ்வாறிருப்பினும், இலங்கையில் சுற்றுலா கைத்தொழிலின் வளர்ச்சி ஒரே சீரான விதத்தில் தங்குதடையற்ற முறையில் இடம் பெற்று வந்திருக்கவில்லை. இத்தொழில் துறையின் செயல்பாடு கடந்த காலப் பிரிவின்போது கடுமையான பல தளம்பல் நிலைகளை எதிர்கொண்டிருந்தது. இக் காலப் பிரிவின் போது சுற்றுலா கைத்தொழில் செழிப்பு நிலைகளைக் கொண்ட பல போக்குகளையும் அதேபோல மந்த நிலைகளையும் அனுபவித்து வந்துள்ளது. 1977 இல் கொள்கை சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வந்ததனை அடுத்து இத்தொழில் துறையில் ஒரு பாரிய விரிவாக்கம் ஏற்பட்டது. ஆனால், 1980 களின் நடுப் பகுதிகளில் நாட்டில் உருவாகிய வன்செயல்கள் இந்த வளர்ச்சிக்கு இடையூறாக இருந்து வந்தன. இதே மாதிரியான ஒரு பின்னடைவுப் போக்கு 1980 களின் பிற்பகுதியிலும் 1990 களின் தொடக்கதிலும் மீண்டும் 1990 களின் நடுப்பகுதிகளிலும் தோன்றியிருந்தது. நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் காரணமாக சுற்றுலா கைத்தொழிலின் செயற்பாடுகள் பெருமளவுக்கு பாதிப்படைந்து வந்துள்ளன.

எனினும், பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் சுற்றுலா துறைக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுவது அவசிய மாகும். சுற்றுலா

(16ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் தலையீட்டுடன் கூடிய விதத்தில் சுற்றுலாத் துறையிலான நிலையான வளர்ச்சி

கே. ஏ. டீ. ஜோர்ஜ் மைக்கல்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமானப்
போக்குவரத்து அமைச்சு)

## சுற்றுலாத் துறை குறித்த ஒரு மீளாய்வு

இன்றைய சூழ்நிலையில் சுற்றுலாத் துறை முறைமையான அரச அனுசரணையுடன் இடம் பெற்று வரும் ஒரு நடவடிக்கையாக வளர்ச்சி கண்டுள்ளது. 1966 அளவில் சுற்றுலாத் துறைக்கு தேவையான உள்ளீடுகளை வழங்கும் விடயத்தில் தனியார் துறை அநேகமாக ஈடுபட்டிருந்து வந்த ஒரு பின்னணியிலே இந்த நிலைமை தோன்றியது எனக் கூறலாம். அந்நியச் செலாவணி உழைப்பு, தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம், வெளிநாட்டு முதலீடு மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பவற்றுக்கு பெருமளவு பங்களிப்புக்களை வழங்குவதில் சுற்றுலாத்துறை கொண்டிருந்த உள்ளார்ந்த ஆற்றலை கவனத்தில் எடுத்த அரசாங்கம் திட்டமிட்ட ஒரு அடிப்படையில் இத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் முதலாவது கட்டமாக 1966 இல் 10 ஆம் இலக்க சுற்றுலாச் சபை சட்டமூலம் உருவாக்கப்பட்டது. இச் சட்டவாக்கத்தின் கட்டமைப்புக்குள் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்து மேம்படுத்தும் பணியைப் பொறுப்பேற்கவென இலங்கை சுற்றுலா சபை உருவாக்கப்பட்டது. தனியார் துறையின் செயற்பாடுகளுக்கூடாக உருவாகிய பொருத்தமான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி, கட்டுப்படுத்தும் நோக்குடன் 1968 இன் 14 ஆம் இலக்கச் சுற்றுலா அபிவிருத்திச் சட்டமூலம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சுற்றுலா துறையுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்களையும் நடவடிக்கைகளையும் ஒழுங்குபடுத்தும் வகையில் இலங்கை சுற்றுலா சபைக்கு அதிக அளவில் அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

1968 அளவில் சுற்றுலாத் துறை தொடர்பான அரசின் பங்களிப்பில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஹோட்டல்கள், சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் அதனோடிணைந்த சேவைகள் என்பவற்றில் முதலீடுகளை மேற்கொள்ளத் தனியார் துறையை தூண்டும் அதேவேளை வழிகாட்டுதலை வழங்கும் உதவுபவரின் - தூண்டுபவரின் ஒரு பாத்திரத்தை அரசாங்கம் ஏற்றிருந்தது. அதனை அடுத்து சுற்றுலாத் துறைக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் சேவைகளை அரசாங்கம் மேற்கொண்டது. அதே வேளையில் விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட துணைச் சேவைகள் என்பவற்றை மேற்கொள்ளும் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றது. 1967-1976 காலப் பிரிவை உள்ளடக்கும் விதத்தில் சுற்றுலா அபிவிருத்திக்கான முதலாவது பெருந் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், சுற்றுலா துறையை திட்டமிடல், வலயங்களின் அடிப்படையில் அபிவிருத்தியை மேற் கொள்ளல், சமூக கலாச்சார விடயங்கள் மற்றும் ஹோட்டல் சேவைகள் என்பவற்றின் மேம்பாடு போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் பிரதான நான்கு சந்தைப் பிரதேசங்களாக வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, ஆசியா மற்றும் பசுபிக் பிரதேசம் ஆகிய நான்கு சந்தைகளை இந்த பெருந்திட்டத்தில் இனங்காணப்பட்டிருந்தது.

அரச கொள்கை சிறந்த முறையில் திட்டமிடப்பட்டிருந்தமையினாலும் அதற்கேற்ற விதத்தில் சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தமையினாலும் சுற்றுலா துறை அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டதுடன், சக்தி வாய்ந்த தனியார் துறை ஒன்றின் தோற்றத்தை ஏற்படுத்துவதில் ஒரு வசதியளிப்பை அது குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்தது. 1967 வரையிலான முந்திய வருட கால பிரிவின்போது சுற்றுலா பயணிகளின் வருகை சுமார் 20,000 வரையில் இருந்து வந்தது. ஆனால், 1970 இல் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க ஒரு அதிகரிப்பு ஏற்பட்டதுடன் மொத்த பயணிகளின் எண்ணிக்கை 46,000 வரையில் உயர்ந்து சென்றது. மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனி, சுவிற்சலாந்து மற்றும் ஸ்கண்டினேவிய நாடுகள் என்பவற்றில் இலங்கை சூரிய ஒளியை அனுபவிக்கக் கூடிய ஒரு நாடாகவும் விடுமுறையை அனுபவிப்பதற்கு போக வேண்டிய ஒரு நாடாகவும் நன்கு பிரபல்யம் பெற்றிருந்தது.

1971 இல் தோன்றிய உள்நாட்டு கலவரத்தின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலை காரணமாக சுற்றுலாத் துறையின் அபிவிருத்தி சிறிது காலம் தடைப்பட்டிருந்ததைக் காண முடிந்தது. எனினும், 1977 இல் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் திறந்த பொருளாதார கொள்கைகள் காரணமாக சுற்றுலா துறைக்குள் ஒரு புதிய வளர்ச்சி உருவாகியது. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் புதிய நாணயக் கொள்கை என்பவற்றின் விளைவாக சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் வணிக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட பிரயாணங்களின் வளர்ச்சிக்கும் கதவுகள் திறந்து விடப்பட்டன. சாதனைகளை நிலைநாட்டக்கூடிய விதத்தில் 1981 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதுவரை கால அதி உயர் மட்டமான 370,000 வரையில் உயர்ந்து சென்றிருந்தது. சுற்றுலா துறை மூலமான சம்பாத்தியங்களும் 132 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால், 1981 இன் பின்னர் வந்த காலப் பகுதியின்போது சுற்றுலாத் துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத விதத்தில் பல தடங்கல்களை எதிர்கொண்டது. கொழும்பு நகரை ஒரு போர்க் களமாக உருமாற்றிய 1983 இன் இனக் கலவரங்கள் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களில் பரப்பப்பட்டிருந்த பிரச்சாரங்கள் காரணமாக சுற்றுலா துறையில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டு வந்தது.

இத்துறை மீண்டும் சகஜ நிலைக்கு திரும்பியதுடன் 1988 இல் நாட்டில் ஒரு புதிய அரசியல் தலைமைத்துவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. இதனையடுத்து வடக்கின் இனமோதல்கள் காரணமாக அவ்வப்பொழுது தோன்றக் கூடிய நெருக்கடி நிலைமைகளை சமாளிப்பதற்கு நாடு ஒரு பெருந்திட்டத்தை கொண்டிருக்க வேண்டும் என அரசாங்கம் முடிவு செய்தது. அதன் பிரகாரம் ஐநா அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டம் (UNDP) மற்றும் உலக சுற்றுலா ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் தேசிய மற்றும் சர்வதேசிய சுற்றுலாத் துறை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கென பத்தாண்டு கால உபாய ரீதியிலான பெருந்திட்டமொன்று தயாரிக்கப் பட்டது.

1994 இல் தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதனை அடுத்து, இலங்கையில் சுற்றுலாத் துறை ஆரம்பிக்கப் பட்ட காலப் பிரிவில் சுற்றுலா சபையின் தலைவராக செயற்பட்டு வந்திருந்ததுடன், உலக சுற்றுலா துறையுடன் நெருங்கிய தொடர்புகளையும் கொண்டிருந்த நன்கு அனுபவம் வாய்ந்த ஒருவரின் பொறுப்பின் கீழ் சுற்றுலாத் துறை அமைச்சு எடுத்து வரப்பட்டது. 1996 இல் சுற்றுலாத் துறை நடவடிக்கைகள் முன்னுரிமை கைத்தொழிலொன்றாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன், 1999 இல் சுற்றுலாத் துறை தொடர்பான கொள்கையொன்றும் உருவாக்கப்பட்டது. இன்று பாரம்பரிய ஏற்றுமதி பண்டங்கள், ஆடை கைத்தொழில் மற்றும் மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்கள் என்பவற்றுக்கு அடுத்ததாக நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் நான்காவது மிகப் பெரிய பொருளாதார நடவடிக்கையாக சுற்றுலாத் துறை இருந்து வருகின்றது.

சுற்றுலாத் துறை நடவடிக்கைகளையும் உள் நாட்டு விமானச் சேவை நடவடிக்கைகளையும் ஓர் அமைச்சின் கீழ் எடுத்து வந்தமை மிக முக்கியமான ஒரு முன்னேற்றமாக இருந்து வந்துள்ளது. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் புதிய இடங்களுக்கான சேவைகளை ஆரம்பித்து வைத்தமை மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வெளிநாட்டு விமானங்கள் அதிக அளவிலான புதிய சேவைகளை ஆரம்பித்து வைத்தமை என்பவற்றின் விளைவாக 1999 இல் சுற்றுலா துறைக்கு ஒரு புதிய தெம்பு ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அவ்வருடத்தில் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்பொழுது ஆகக்கூடிய அளவில் 436,440 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். இது இதுவரை காலமும் இலங்கைக்குள் வந்த ஆகக்கூடிய சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையாக இருந்து வருவதுடன், 1998 இன் அளவிலும் பார்க்க 14.5 வீத அதிகரிப்பினையும் காட்டுகிறது.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கீழே குறிப்பிடப்படும் விதத்தில் பருவ காலங்களின் அடிப்படையில் வருகை தருவது குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சமாகும்.

முக்கிய காலப் பிரிவு
நவம்பர் - மார்ச் - ஏப்ரல்
டிசம்பர் மாதத்தின் போது பயணிகள் வருகையில் உச்ச மட்ட அதிகரிப்பு ஏற்படுகின்றது.

இடைப்பட்ட காலம்
ஜுலை - ஆகஸ்ட்

நடுத்தர காலம்
செப்டம்பர் - அக்டோபர்

பயணிகள் வருகை குறைவான காலம்
மே - ஜுன்

இலங்கை சுற்றுலா சபையின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் சுற்றுலா பயணி ஒருவர் சாசரியாக 10-11 இரவுகள் இலங்கையில் தங்கியிருக்கின்றார். பொழுதுபோக்கு, விடுமுறையை கழித்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பனவே சுற்றுலாவுக்கான பிரதான நோக்கங்களாக இருந்து வருகின்றன. ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், இத்தாலி, நெதர்லாந்து, ஸ்கன்டினேவியா, ஜப்பான், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தே பிரதானமாக இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள்.

உள்நாட்டு சுற்றுலா துறை

சுற்றுலாத் துறையில் இன்று குறிப்பாக காணப்படும் ஒரு சிறப்பம்சம் உள்நாட்டு சுற்றுலா துறை மிக வேகமாக வளர்ச்சி கண்டு வருவதாகும். ஒரு நாள் உல்லாசப் பயணங்கள் மற்றும் ஓர் இரவை வெளியில் கழிக்கும் பயணங்கள் என்பவை இப்பொழுது பெருமளவுக்கு வழமையான நடவடிக்கைகளாக உருவாகியுள்ளன. உள்நாட்டு சுற்றுலா பயணிகள் பொதுவாக யாத்திரிகர் தங்குமிடங்கள், தனியார் வீடுகள் மற்றும் பதிவு செய்யப்படாத சுற்றுலா இல்லங்கள் என்பவற்றில் தங்குகின்றனர். இவை முறையான புள்ளிவிவரங்களுக்குள் உள்ளடக்கப்படுவதில்லை. ஆகவே, உள்நாட்டு சுற்றுலா பயணிகள் கழிக்கும் இரவுகளின் எண்ணிககை தொடர்பான தரவுகளை சரியாக பெற்றுகொள்ள முடியாதுள்ளது.

ஓய்வு நேரத்தை கழித்தல், யாத்திரைகளில் ஈடுபடுதல் மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பனவே உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் முக்கிய நோக்கங்களாக இருந்து வருகின்றன. சமய வழிபாட்டுத் தலங்கள், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் கடற்கரைகள் என்பன முக்கியமான சுற்றுலா கவர்ச்சி மையங்களாக இருந்து வருகின்றன. உள்நாட்டு சுற்றுலாத் துறை நாட்டின் சுற்றுலாத் துறை அபிவிருத்தியில் மிக முக்கியமான ஒரு செல்வாக்கினை கொண்டுள்ளது.

**சுற்றுலாத் துறையின் நிலையான வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

சுற்றுலா துறையின் இருப்பு மற்றும் வளர்ச்சி என்பவற்றில் மிக முக்கியமாக செல்வாக்கு செலுத்தி வரும் காரணி நாட்டின் உயிர் பன்முகத்தன்மையாகும். எனவே, உயிர் பன்முகத்தன்மையின் மீது செல்வாக்குச் செலுத்தி வரும் விடயங்களைக் குறிப்பிடாமல் சுற்றுலாத்துறை குறித்து கலந்துரையாட முடியாது. உயிர் பன்முகத்தன்மையின் அடிப்படையில் நோக்கும்பொழுது இலங்கை 2000 வருடங்களுக்கும் மேற்பட்ட நீண்ட நெடிய வரலாற்று பாரம்பரியத்தை கொண்டிருக்கும் பெருமிதமிக்க ஒரு நாடாக இருந்து வருகின்றது. எமது முன்னோர்கள் உயிர் பன்முகத்தன்மை போன்ற நவீன வார்த்தை பிரயோகங்களை அறிந்திருக்கவில்லை என்பது உண்மை தான். ஆனால், அவர்கள் தமது வாழ்வுக்கும் அதேபோல அடுத்து வரவிருக்கும் தலைமுறையினரின் வாழ்வுக்கும் மிக முக்கியமானதாக இருந்து வரும் வாழ்வின் ஒரு பாகமான உயிர் பன்முகத்தன்மையை பாதுகாத்து பேணி வர வேண்டிய முக்கியத்துவத்தை தெளிவாக உணர்ந்து கொண்டிருந்தனர். தேவநம்பியதிஸ்ஸ மன்னரால் கி.மு. 240 இல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட நாட்டின் மிகப் பழைய வனவிலங்கு சரணாலயம் குறித்த குறிப்புக்கள் வரலாற்றில் காணப்படுகின்றன. பிற்காலத்தில் அரசுக்கு சொந்தமான காடுகளை பாதுகாக்கும் பொறுப்பு 'காட்டு கோரளை அதிகாரி'யிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் இலங்கையில் ஒரு பாரம்பரிய கிராமம் ஒரு காட்டையும் குளத்தையும் வயல் வெளியொன்றையும் முக்கிய அங்கங்களாக கொண்டிருந்தது. ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்பட்ட காடும் நீரும் கிராம மக்களின் உயிர் நாடியாக இருந்து வந்தன. மிகவும் செழுமையான உயிர் பன்முகதன்மையை கொண்டிருக்கும் காடு வரட்சிக் காலங்களின் போது சாகுபடிக்கான நீரை குளத்துக்கு வழங்கும் நீரேந்து பரப்பாகவும் இருந்து வந்தது. புராதன காலத்தில் மன்னர்கள் தமது இராச்சியங்களை நாட்டின் உட்பாகத்தில் இருக்கும் உலர் வலயத்திலேயே ஸ்தாபித்துக் கொண்டிருந்தனர். இன்றும் கூட அப்பிரதேசத்தில் பெருந்தொகையான பெரிய மற்றும் சிறிய குளங்கள் இருந்து வருவதனை காண முடிகிறது.

குடித்தொகை பெருக்கத்துடன் இணைந்த விதத்தில் இயற்கை வளங்களின் நுகர்வு தீவிரமடைந்ததுடன், அதன் விளைவாக கேள்விக்கு ஏற்ற விதத்தில் நிரம்பல் இல்லாத ஒரு நிலை தோன்றியது. இந்த பின்னணியில் வளங்கள் பெருமளவில் நுகரப்பட்டதுடன், உயிர் பன்முகத்தன்மையின் மீதும் பாரிய தாக்கம் ஏற்பட்டது. இது தவிர சுற்றுலா கைத்தொழில் அந்த சுற்றுசூழலில் தங்கியிருக்கும் உயிர் பன்முகத்தன்மையின் சீரழிவின் மீது பெருமளவுக்குத் தாக்கத்தை எடுத்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

## கடலரிப்பும் கரையோரப் பிரதேசத்தின் உயிர் பன்முகத்தன்மை சீரழிவும்

மணல் நிறைந்த நீண்ட கடற்கரைகளும் பிரகாசமான சூரிய ஒளியுடன் கூடிய சுவாத்திய நிலையும் வரலாற்று ரீதியாக இலங்கையின் முதன்மையான சுற்றுலா கவர்ச்சிக் கூறுகளாக இருந்து வந்துள்ளன. குளிர் காலத்தின் போது பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் மற்றும் இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகை தருவதானது இதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதன் காரணமாக சுற்றலாத் துறை அபிவிருத்தியின் ஆரம்ப கட்டத்தின்போது சுற்றுலா நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டி வந்த தனியார் துறை தொழில் முயற்சியாளர்கள் கரையோரம் நெடுகிலும் நவீன ஹோட்டல்களை நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபட்டனர். இலங்கையின் பழைய சுற்றலா மையங்களான நீர்கொழும்பு மற்றும் ஹிக்கடுவை ஆகியவற்றை இதற்கான உதாரணங்களாக காட்ட முடியும்.

கரையோரப் பிரதேசம் நெடுகிலும் ஒன்றன்பின் ஒன்றாக அவ்விதம் பெருந்தொகையான ஹோட்டல்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக இத்தொழில் துறையின் நிலையான வளர்ச்சியின் மீது மோசமான தாக்கங்களை எடுத்து வரக்கூடிய பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. கடலரிப்பு இயற்கையில் இடம்பெற்று வரும் ஒன்றாக இருந்து வந்தபோதிலும் ஒரு சில கரையோரப் பிரதேசங்களில் இது ஒரு தீவிர பிரச்சினையாக உருவாவதற்கு கடலுக்கு அருகில் பாரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டமை காரணமாக இருந்து வந்துள்ளது. இந்த கட்டட நிர்மாண நடவடிக்கைகள் காரணமாக கடலரிப்புக்கு பொதுவாக பாதுகாப்பு வழங்கும் கரையோரத் தாவரங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. தற்காலிக நிவாரணங்களாக உருவாக்கப்பட்டிருக்கும் நீர் தடுப்புக்கள் மற்றும் உயரமான மதில்கள் என்பவற்றின் மூலம் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. சுற்றுலா பயணிகளை ஆகர்ஷித்து வந்த மணல் பாங்கான பல கரையோரப் பிரதேசங்களை இப்பொழுது காண முடியவில்லை. பவளப் பாறைகளை உடைத்தெடுத்தல், மணல் அள்ளுதல் மற்றும் விறகுக்கென கரையோரத் தாவரங்களை அவசியமற்ற விதத்தில் அழித்தல் முதலியவற்றின் காரணமாகவும் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

## கரையோர மற்றும் கடல் நீர் தூய்மைக்கேடு

அடிப்படையில் உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் அதேபோல வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் கடற்கரையோரங்களில் பெருமளவுக்கு நடமாடுவதனால் கரையோரம் நெடுகிலும் கடற்கரைகள் பரவலாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை அவதானிக்க முடிகிறது. முறையான ஒரு ஒழுங்கில் குப்பைகளை அப்புறப்படுத்தும் விடயத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் போதிய அளவில் அக்கறை காட்டாதிருக்கும் பிரதேசங்களில் இந்நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகிறது. மேலும், அவ்வப் பிரதேசத்தை சூழ வாழும் சாதாரண குடிமக்களும் எஞ்சிய உணவு பொருட்கள், பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் போத்தல்கள் போன்ற குப்பைகளை கொட்டிக் குவிக்கும் இடங்களாக இக்கடற்கரைகளை சுதந்திரமான விதத்தில் உபயோகித்து வருகின்றனர். அதுமட்டுமன்றி, கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்கள் என்பவற்றை வெளியேற்றுவதற்கு முறையான அமைப்புக்களை கொண்டிராத ஒரு சில ஹோட்டல்கள் வெளியேற்றும் கழிவுகள் காரணமாக கடல் நீர் மாசடைந்து வருகின்றது. கரையோர உயிர் பன்முகத் தன்மை மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றின் மீது ஏற்படக்கூடிய சேதங்களை பொருட்படுத்தாமல் செலவை மிச்சம் பிடிக்கக் கூடிய ஒரு வழிமுறையாக கழிவுப் பொருட்கள் கடலில் கொட்டப்பட்டு வருகின்றன.

## கரையோரச் சிறுவர்கள், தரகர்கள் மற்றும் வியாபாரிகள்

ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பன சார்பு ரீதியில் பெருமளவுக்கு செறிந்து காணப்படும் கரையோர பிரதேசத்தின் ஒரு சில கடற்கரைகளில் காணப்படும் கரையோரச் சிறுவர்கள் இக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர். இவர்கள் பெருமளவுக்கு பள்ளிக் கல்வியை இடையில் விட்டுவிட்ட வேலையற்ற புத்திசாலி சிறுவர்களாக இருந்து வருகின்றனர். இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் கருத்து பரிமாற்றங்களைச் செய்து கொள்ளும் அளவுக்கு இச்சிறுவர்களில் சிலர் வெளிநாட்டு மொழியொன்றையும் நன்கு அறிந்தவர்களாக இருந்து வருகின்றனர். இத்தகையவர்களில் ஒரு சில சிறுவர்கள் வழிகாட்டிகளாகவும் கடைகளுக்கு பொருட்களை வாங்கச் செல்லும் போது சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுபவர்களாகவும் நல்லவிதத்தில் செயற்பட்டு வருகின்றார்கள். வேறு சிலர் கொள்ளை அடிப்பவர்களாகவும் பணம் மற்றும் பெறுமதிமிக்க பொருட்களை கேட்டு பயணிகளுக்கு தொல்லை கொடுப்பவர்களாகவும் இருந்து வருவதனால் பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலைமை உள்ளது. சுறறுலாப் பயணிகள் அவசியமற்ற பொருட்களை வாங்க வேண்டும் என அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் அரும்பொருட்களின் விற்பனையாளர்களும் ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒரு தலையிடியாக இருந்து வருகின்றனர்.

## சிறுவர் பாலியல் சுற்றுலாத் துறை

ஒரு சில தரப்பினரால் பிரசாரம் செய்யப்பட்டுவரும் சிறுவர் பாலியல் சுற்றுலாத் துறை நாட்டில் வாழும் சாதாரண குடிமக்களை பொறுத்தவரையில் வெறுக்கத்தக்க ஒரு சூழ்நிலையை தோற்றுவித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. இலங்கையில் சுற்றுலா பயணங்களை மேற்கொள்பவர்கள் சிறுவர்களை தமது இச்சைகளுக்கு நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற வகையில் இணையத்துக் கூடாகவும் கூட பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அத்தகைய பிரச்சாரங்கள் சுற்றுலா துறையின் வளர்ச்சியின் மீது பாதகமான விடயங்களை எடுத்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. சுற்றுலா துறையின் மூலம் பாலியல் சுற்றுலா தடையற்ற விதத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு இடமளிக்கப் பட்டால் அதன் விளைவாக நீண்டகால ரீதியில் ஏற்படக்கூடிய சமூக தாக்கங்கள் வருங்காலத் தலைமுறையினரின் மீது நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு மிக மோசமான விளைவுகளை எடுத்து வர முடியும். இவ்விதம் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் ஒருசில நபர்கள் கடந்த காலத்தில் கைதுசெய்யப்பட்டிருப்ப துடன் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும், இந்த கொடூரச் செயல்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க விதத்தில் அழுத்தத்தை பிரயோகிப்பதற்கு சட்டத்தை அமுல்செய்யும் தரப்பினர் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என்பதனை அவதானிக்க முடிகிறது.

### குப்பைகளை கொட்டுதல்

ஓரளவுக்கு முறையான மத்திய திட்டமிடல் செயன்முறையொன்று இல்லாதிருந்து வருவதன் காரணமாக குப்பைகளை கொட்டும் நடவடிக்கை சுற்றுச்சூழலின் மீதும் இறுதியில் சுற்றுலா கைத்தொழிலின் வளர்ச்சியின் மீதும் மிக மோசமான தாக்கத்தை எடுத்து வரக்கூடிய ஒரு பிரச்சினையாக இப்பொழுது உருவாகி யுள்ளது. குறிப்பாக நகர் மையங்களிலும் பாரிய ஹோட்டல்கள், சுற்றுலா விடுதிகள் என்பன காணப்படும் பகுதிகளிலும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களிலும் ஆங்காங்கே பெரும் குவியல்களாக குப்பைகள் கொட்டப்பட்டிருப்பது ஒரு சாதாரண காட்சியாக இன்று இருந்து வருகின்றது. உள்நாட்டு பத்திரிகைகளுக் கூடாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் அதனை சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த மிக முக்கியமான விடயம் குறித்து அலட்சிய மனோபாவத்தை காட்டி வரும் ஒருசில ஹோட்டல் உரிமையாளர்கள் குப்பை மேடுகளை தமது எல்லைகளி லிருந்து அப்பால் எடுத்துச் செல்வதன் மூலம் மட்டும் திருப்தி அடைந்து விடுகின்றார்கள். குப்பைகளை அகற்று வதற்கென ஹோட்டல்களினால் அமர்த்தப் பட்டிருக்கும் ஒப்பந்தகாரர்களும் பொதுக்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எளிதில் தென்படாத இடங்களில் அக்குப்பைகளைக் கொட்டிவிட்டு செல்கிறார்கள். இது குப்பைகளை அகற்று வதற்கு பொறுப்பாக இருந்து வரும் உள்ளூராட்சி அதிகாரிகளின் ஒரு குறைபாடாக இருந்து வருவதாக ஹோட்டல் உரிமையாளர்கள் கருதுகின்றார்கள். பொறுப்பற்ற சுற்றுலா பயணிகள் இயற்கை பூங்காக்களிலும் வனவிலங்கு சரணாலயங் களிலும் வீசிவிட்டுச் செல்லும் குப்பைகளும் மிக முக்கியமான ஒரு பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன. வீசி எறியப்படும் உணவுப் பொருட்களுடன் காணப்பட்ட பொலித்தீன் துண்டுகளுடன் சேர்த்து அவ்வுணவை உட்கொண்ட ஒரு சில வனவிலங்குகள் மரணமடைந்த சம்பவங்களும் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் தொகுதியினால் தாங்கிக் கொள்ளமுடியாத அளவுக்கு மிதமிஞ்சிய அளவில் குப்பைகள் சேர்வது அநேகமாக அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருவதன் காரணமாக ஏற்படுவதாக இருக்கலாம்.

### தாங்கும் திறனையும் விஞ்சிய நிலை

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இன்னமும் 500,000 மட்டத்தை எட்டவில்லை. ஆனால், ஒரு சில தொல்லியல் நினைவுச் சின்னங்கள் காணப்படுமிடங்கள், இயற்கைக் காட்சிகள் காணப்படுமிடங்கள், சமய புனித தலங்கள் போன்ற இடங்களில் மிதமிஞ்சிய அளவில் பயணிகளின் நடமாட்டம் இருந்து வருகின்றது. உரிய விதத்தில் முன்கூட்டிய திட்டமிடல் இல்லாமை காரணமாக நீர்கொழும்பு, பெந்தோட்டை, ஹிக்கடுவ, பேருவல போன்ற கரையோர நகர் மையங்கள் மீதான நெருக்குதல் இப்பொழுது அவற்றின் தாங்கும் திறனையும் தாண்டிச் சென்றுள்ளது. ஹோட்டல்கள், கட்டடங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகள், சுற்றுலா கடைகள் மற்றும் அதனோடிணைந்த வசதிகள் என்பன தேவைக்கும் அதிகமான விதத்தில் ஓரிடத்தில் செறிந்து காணப்படுவதனால் இந்த நெருக்குதல் நிலை தோன்றியுள்ளது. இந்த நெருக்குதல்களுடன் இணைந்த விதத்தில் சமூக ரீதியிலான பல பிரச்சினைகளும் சுற்றுச்சூழல் ரீதியான பல பிரச்சினைகளும் தோன்றுவது தவிர்க்க முடியாததொன்றாகும்.

சுற்றுலா கைத்தொழில் தொட்டுணரக்கூடிய பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு கைத்தொழிலாக பெரும்பாலும் இருந்து வருவதில்லை. அது சேவையை அடிப் படையாக கொண்ட ஒரு கைத்தொழி லாகவே உள்ளது. எனவே, எதிர்பார்க் கப்படும் தரச் சிறப்பினை எட்டும் பொருட்டு சேவைகள் வழங்கப்பட்டு வரும் பல்வேறு சந்தர்ப்பங்களை நிறைவு செய்துவைப்பது சிரமமான ஒரு காரியமாக இருந்து வருகின்றது. ஆனால், அத்தகைய தரநிர்ணயங்கள் பேணப்படுவது அவசிய மாகும். இலங்கை சுற்றுலா சபையினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள தரநிர்ணயங்களை நிறைவு செய்து வைப்பதற்கு இத்தொழில் துறை பல சந்தர்ப்பங்களில் தவறி யிருப்பதனால் சேவையின் தரம் தானாகவே கிட்டும் என எதிர்பார்க்க முடியாது. சூழலின் சுத்தமான நிலை, விருந்தினர் களுக்கு வழங்கப்படும் விருந்தின் தரம் மற்றும் துணைச் சேவைகளின் தரம் என்பன இங்கு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

### சுற்றுலா துறையை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் வகிக்க வேண்டியிருக்கும் பங்கு

இலங்கை மிகவும் வளமார்ந்த ஒரு கலாச்சாரத்தை பாரம்பரியமாக பெற்றுக் கொண்டுள்ளது. இக்கலாச்சாரம் பௌத்த மதத்தினால் போஷித்து வளர்க்கப்பட்டு வந்திருப்பதுடன், மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள நெறிமுறைகள், பாரம்பரி யங்கள் மற்றும் வாழ்க்கை மாதிரிகள் என்பவற்றினால் கணிசமான அளவுக்கு வலுவூட்டப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு கலாச்சார பின்புலம் காரணமாக சுற்றுலாத் துறை அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களின் போது சிவில் சமூகம் அதற்கு மிகுந்த எச்சரிக்கையுடன் எதிர்விளைவு காட்டியது. அதாவது, பல தலைமுறை காலமாக பாதுகாக்கப்பட்டு வந்திருக்கும் உண்ணாட்டு கலாச்சாரத்துடன் மோது வதற்கு வெளிச் சக்திகளுக்கு இடமளிக் காத விதத்தில் அவர்கள் அதற்கு எதிர் விளைவு காட்டினார்கள். ஓரளவுக்கு மக்களின் உணர்வுகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த அரசாங்கங்கள் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்ட சில அளவுகோல்களின் அடிப்படையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான ஒரு கட்டுகோப்பினை உருவாக்கிக் கொள்வ திலேயே கவனம் செலுத்தி வந்தன.

அவ்வப்பொழுது அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவாக்கங் களும் ஒழுங்குவிதிகளும் இந்த எச்சரிக்கை மனோபாவத்தை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இது தொடர்பான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சட்ட ஏற்பாடான 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா துறை சட்ட மூலம் அடிப்படை சுற்றுலாத் துறை அபிவிருத்தி செயற்பாட்டினை முறைப் படுத்தி கண்காணிக்கும் அதிகாரத்தினையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினையும் இலங்கை சுற்றுலா சபைக்கு வழங்கியது. சுற்றுலா நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்கென காணிகளை கையகப்படுத்தும் அதிகாரம் சுற்றுலா சபைக்கு வழங்கப்பட்டமை இதற்கான சிறந்த உதாரணமாகும். இலங்கை சுற்றுலா சபை தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாட்டின் கரையோரப் பிரதேசங்களிலும் உட் பிரதேசங்களிலும் அமைந்திருந்த ஒரு சில இயற்கை வனப்புடன் அமைந்திருந்த பிரதேசங்கள் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கை களில் முறையற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்ளப்படுவதனை தடைசெய்து, அப் பிரதேசங்களை கையகப் படுத்திக் கொள்வதற்கென நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கின்றது. இது இந் நாட்டின் பெறுமதிமிக்க காணிகளை திட்டமிட்ட அடிப்படையிலான சுற்றுலா நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கென பாதுகாத்துக் கொள்வதற்கென முன் கூட்டியே செயற்படுத்திய சிறப்பு வழிமுறை களில் ஒன்றாகும். அத்தகைய காணிகள் பயன்படுத்திக் கொள்ளப்படும் நோக்கத் தினை மிகுந்த அவதானத்துடன் கவனத்தில் எடுத்து, அதன் மூலம் உயிர் பன்முகத் தன்மையில் ஏற்படக் கூடிய தாக்கத்தை கவனத்தில் கொண்டு அக் காணிகளை சுற்றுலா அபிவிருத்தி செய்திட்டங்களுக்கென சபை குத்தகைக்கு விட்டு வருகின்றது. சுற்றுலாக் கைத்தொழில் துரித வளர்ச்சி கண்டுவரும் பிரதேசங் களைச் சேர்ந்த காணிகளில் பெரும் பகுதி சுற்றுலா சபைக்கு சொந்தமாக இருந்து வரும் பிரதேசங்களில் அத்தகைய இடங்களை தேசிய விடுமுறை தலங்களாக பிரகடனம் செய்யும் அதிகாரத்தை இச்சட்ட மூலம் சுற்றுலா துறைக்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கியுள்ளது. அத்தகைய ஒரு பிரதேசம் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்தை நிர்வகித்து கட்டுப்படுத்தும் பொறுப்பு சுற்றுலா சபைக்கு வழங்கப்படும். பெந்தோட்டை அத்தகைய ஒரு விடுமுறை தலமாகும். விடுமுறை தலங்கள் தொடர்பாக சுற்றுலாச் சபைக்கு பின்வரும் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன:

(அ) பொது மக்களின் ஆரோக்கியத்துக்கு தேவையான நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

(ஆ) அத்தகைய விடுமுறை தலங்களைச் சேர்ந்த பிரதேசங்களில் வாழ்ந்து வரும் அல்லது அங்கு வருகை தரும் பொது மக்களின் உபயோகத்துக்கென பொது வசதிகள் பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை என்பவற்றுக்கான வசதிகள் மற்றும் கலாச்சார செயற்பாடுகள் என்பவற்றை அங்கு ஸ்தாபித்து பராமரித்து வருதல்.

(இ) அத்தகைய விடுமுறை தலங்களை சூழ உள்ள இடங்களில் வசித்து வருபவர்கள் மற்றும் அவற்றில் சுற்றுலா பயணங்களை மேற்கொள்பவர்கள் ஆகி யோரின் வசதியை அல்லது நலனை முன்னிட்டு எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கையினையும் மேம்பாட்டு நடவடிக்கையினையும் மேற்கொள் வதும் சபை அவசியமானவை எனக் கருதும் அனைத்து விதமான வசதி களையும் வழங்குவதும்.

(ஈ) சபையினால் வழங்கப்பட்டு வரும் வசதிகள் மற்றும் சேவைகள் என்பவை தொடர்பாக தேவைப்படும் விதத்தில் கட்டணங்கள் முதலியவற்றை விதித்தல்.

மேலும், தேசிய விடுமுறைத் தலம் ஒன்றுக்குள் விடுமுறைத் தல அதிகார சபை ஒன்றை உருவாக்கும் அதிகாரத்தையும் இச்சட்டம் அமைச்சருக்கு வழங்கியுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் கடமை, பொறுப்புக்களில் அல்லது காரியங்களில் எவற்றையும் அவ்வப்பொழுது பணிப்புரை ஒன்றின் மூலம் அதிகார சபையிடம் விடும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அத்தகைய பிரதேசங்களில் தோன்றக் கூடிய புதிய போக்குகளை கவனத் தில் எடுத்து சபையின் அதிகாரங்களை செயற்படுத்தும் அதேவேளையில், அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கும் வேலையும அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுவான சுற்றுலாத் துறை நடவடிக்கை களிலும் இயற்கை எழிலுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்கு மதிப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கும் சட்ட மூலத்தின் 74(1) உறுப்புரையின் மூலம் ஒழுங்கு விதிகளை உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் எழில் மிக்க நெடுஞ்சாலைகளை கொண்டிருக்கும் இடங்களைப் பாதுகாப்பதற் கென 1968 இன் 14ஆம் இலக்கம் கொண்ட சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் 1969 இல் விரிவான விதத்தில் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டன. நெடுஞ்சாலைகளின் கண்ணைக் கவரும் தோற்றத்தினை பாதுகாத்துக் கொள்வதற்கென இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் உரிய அதிகாரி களுக்கு பின்வரும் முறையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன:

" பாதுகாக்கப்பட்ட நெடுஞ்சாலை ஒன்றின் நடுப் பாகத்திலிருந்து 660 அடி எல்லை பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அல்லது காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தடை செய்யப்பட்டிருக்காத விளம்பர மொன்று அல்லாத எந்தவொரு விளம்பரத்தையும் பணிப்புரையில் காட்டப்பட்டிருக்கும் தர நிர்ணயங்களுக்கு இணங்கியது என கட்டளை இடும் அதிகாரம் உரிய அதிகாரிக்கு உள்ளது. மேலும், ஒளிபாய்ச்சுதல் அளவு, எழுத்துக்களின் இடைவெளி, சமிக்ஞைகள், சங்கேத குறிகள் மற்றும் பயன்படுத்தக் கூடிய ஏனைய முறைகள் என்பன தொடர்பாக அத்தகைய கட்டளை ஒன்றை செயற்படுத்தல் உசிதமானது என அதிகார சபை கருதினால் அத்தகையவையும் ஏனைய தேவைகளுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளும் அந்த தரநிர்ணயங்களுக்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்".

கொழும்பு-கண்டி வீதியில் கடுகண்ணாவை கண்கவர் நெடுஞ்சாலை பகுதியில் வீதியில் போக்குவரத்து செய்பவர்களுக்கு பழங்களையும் ஏனைய பொருட்களையும் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் முன்னர் பெருகிக் காணப்பட்டனர். இப்பிரதேச நெடுஞ்சாலையின் எழில்மிகு தோற்றத்தை பாதுகாத்துக் கொள்வதற்கென மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கண்கவர் இடங்களை சூழ ஒழுங்குபடுத்தப்படாத விதத்தில் சுற்றுலாத் துறை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதனை தடுக்கும் பொருட்டும், அத்தகைய இடங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தகைய கண்கவர் இடங்களின் எல்லைகளை நிர்ணயித்து, பாதுகாக்கப் பட்ட கண்கவர் இடங்களாக அவற்றை பிரகடனம் செய்வதற்கும் ஒழுங்கு விதிகளின் மூலம் ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. சட்ட விரோதமான முறையில் வர்த்தகம் செய்வதன் மூலம் இந்த ஒழுங்கு விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

நாட்டின் பல்வேறு இடங்களிலும் அமைந்திருக்கும் எழில் மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களையும் கண்கவர் நெடுஞ்சாலைகளையும் கண்டறிந்து கொள்வதற்கென அண்மையில் சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சர் செயலணி குழுவொன்றை நியமனம் செய்தார். இக்குழுவினால் ஒருசில எழில்மிக்க இடங்கள் மற்றும் கண்கவர் நெடுஞ்சாலைகள் என்பன தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டிருப்பதுடன், ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அவை வெகு விரைவில் வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்படும்.

1968 இன் 14ஆம் இலக்க சட்டத்துக்கு 1987 இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தத்தின் பிரகாரம் சுற்றுலா கவர்ச்சி நிலவி வரும் இடமொன்றை சூழவுள்ள பிரதேசத்தை அமைச்சர் ஒரு சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனம் செய்வதற்கு இயலக்கூடிய விதத்தில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டன. விலங்குக் காட்சி சாலைகள், பூங்காக்கள், வன விலங்கு சரணாலயங்கள், நீர் வீழ்ச்சிகள் மற்றும் தொல்பொருள் அமைவிடங்கள் முதலிய சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் இடங்களைச் சூழவும் சூழலை மாசடையச் செய்யக்கூடிய விதத்திலும், உயிர் பன்முகத்தன்மையின் மீது ஊறு ஏற்படத்தக்க விதத்திலும் பல்வேறு விதங்களிலும் திட்டமிடப்படாத முறையில் கட்டடங்கள் முதலியவற்றை அமைக்கும் செயல் முறையே முன்னர் பொதுவாக நிலவி வந்த போக்காக இருந்தது. அத்தகைய ஓர் இடம் சுற்றுலா பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டவுடன் சுற்றுலா சபையின் முன் அனுமதியின்றி சுற்றுலா வசதிகளை அல்லது சேவைகளை வழங்கும் நோக்கத்துடனும் கூட பின்வரும் நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ள முடியாது:

1. எத்தகைய ஒரு கட்டடத்தையோ அல்லது அமைப்பையோ நிர்மாணித்தல் அல்லது கட்டியெழுப்புதல்.

2. தற்போதைய கட்டடமொன்றை அல்லது அமைப்பொன்றை மீண்டும் நிர்மாணித்தல், மாற்றி அமைத்தல் ' அல்லது வேறு விதத்தில் உருவாக்குதல்.

3. எத்தகைய நிறுவனமொன்றையோ அல்லது தொழில் ஒன்றையோ ஆரம்பிப்பது அல்லது நடத்திச் செல்வது.

இந்த விதத்தில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிய விலங்கு காட்சிச்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் யானைகளின் அனாதை இல்லமொன்று அமைந்திருக்கும் பின்னவல பிரதேசமும் சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றாக பிரகனம் செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்**

குறிப்பாக 1985 இன் பின்னர் சுற்றுலாத் துறையில் பெருக்கம் ஏற்படத் தொடங்கியதுடன் இணைந்த விதத்தில் சுற்றுலா துறையில் ஈடுபட்டிருந்த தனியார் துறை தொழில் முயற்சியாளர்கள் சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் என்பவற்றின் நிர்மாண வேலைகளை துரிதப்படுத்தினர். திட்டமிடப்படாத விதத்தில் முறையற்ற ஒழுங்கில் தரம் குன்றிய முறையில் அமைக்கப்பட்ட நிறுவனங்கள் காரணமாகவும், அவற்றினால் வழங்கப்பட்டு வந்த தரம் குன்றிய சுகாதாரமற்ற சேவைகள் காரணமாகவும் சுற்றுலா கைத்தொழிலில் ஏற்படக்கூடிய மிக மோசமான தாக்கங்களை தவிர்க்கும் பொருட்டு ஒழுங்கு விதிகளை உருவாக்க வேண்டிய தேவை இருந்து வருவதனை சுற்றுலா சபை உணர்ந்தது. திட்டமிடப்படாத விதத்தில் ஹோட்டல் கட்டடங்கள் கட்டப்படுவதனை தடுக்கும் விதத்தில் 1968 இல் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் 1999 இல் புதிதாக ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டன. அது பின் வருமாறு குறிப்பிடுகின்றது:

"அது தொடர்பாக சபையினால் நிர்ணயிக்கப்படக் கூடிய ஒரு திகதியன்று அல்லது அதன் பின்னர் சுற்றுலா ஹோட்டல் தொழிலை நடத்திச் செல்வதற்கென எந்த ஒரு இடத்தையும் பயன்படுத்திக் கொள்ள கூடாது. அவ்வாறு செய்வதாக இருந்தால்,

(அ) அத்தகைய இடங்களும் அத்தகைய தொழில்களை நடத்திச் செல்ல எதிர்பார்க்கும் நபர்களும் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டல்களாகவும் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களாகவும் இருந்து வருதல் வேண்டும்.

(ஆ) பிரிவு (அ) வின் கீழ் பதிவு செய்யப்பட்ட 60 நாட்களுக்குள் அத்தகைய தொழிலொன்றை நடத்திச் செல்வதற்கென பதிவு செய்யப்பட்டுள்ள உரிமையாளர் ஓர் உரிமத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்."

எந்த ஒரு இடத்தையும் சுற்றுலா ஹோட்டல் ஒன்றாக பதிவு செய்யும் நோக்கத்துக்கென நிறைவு செய்யப்படவிருக்கும் தேவைகள் மற்றும் நிபந்தனைகள் என்பன இந்த ஒழுங்கு விதிகளில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இடம் மற்றும் கட்டடம், அமைவிடம் மற்றும் சுற்றாடல், கட்டட அமைப்பின் பாதுகாப்புத் தன்மை, கொள்திறன் முதலிய ஹோட்டல் ஒன்றுக்கு அவசியமான அடிப்படை தேவைகள் குறித்த அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதனால் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை பராமரித்து வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

அனைத்து ஹோட்டல்களும் அவை வகைப்படுத்தப்படுவதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டு உரிமங்கள் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய ஹோட்டல்கள் முன்னர் வகைப்படுத்தலுக்கென சுற்றுலா சபையில் தம்மை பதிவு செய்து கொள்ளவோ அல்லது உரிமங்களை பெற்றுக் கொள்வதற்கோ அவசியமிருக்கவில்லை. சட்டத்தை செயற்படுத்துவதில் ஒருமுகத் தன்மையை பேணிவரும் பொருட்டு ஹோட்டல் ஒன்று பதிவு செய்தல் மற்றும் உரிமம் பெற்றுக்கொள்ளல் என்பவற்றை வகைப் படுத்தலுக்கு முன்னர் கட்டாயப்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது முறையான ஒழுங்கில் செயற்படுத்தபடாதிருந்து வந்தமையினால் உணவு மற்றும் பானங்கள் என்பவற்றின் வழங்கல் சேவைகள், நீர் விளையாட்டுகள், நீச்சல் தடாகங்கள், இரத்தினக்கல் மற்றும் ஆபரண கடைகள், வாசனைத் திரவிய கடைகள், சுற்றுலா விடுதிகள், விசேஷ உணவு மற்றும் பானங்களுடன் கூடிய உணவகங்கள் முதலிய சுற்றுலா கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட சேவைகளையும் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் என்பவற்றுக்கு உட்படுத்தக் கூடிய விதத்தில் இவ்வொழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டன. சுற்றுலா கைத் தொழிலின் நிலைத்து நிற்கக்கூடிய இயல்புக்கு அத்தியாவசியமான கூறுகளாக இருந்து வரும் சேவைகளின் தரத்தினையும் இயல்பினையும் பராமரித்து வருவது இதன் நோக்கமாக இருந்து வருகிறது. இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் விசேடமாக எடுத்துக் காட்டப்பட்டிருப்பது போல ஒவ்வொரு நிறுவனமும் தன்னைப் பதிவு செய்து கொள்வதற்கென குறைந்தபட்ச தேவைகளை நிறைவு செய்து வைக்க வேண்டும். சுற்றுலா விடுதிகள் தரம் 'ஏ', தரம் 'பி' மற்றும் தரம் 'சி' என்ற வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்படுத்தப்படுவதுடன், குறிப்பிட்ட தரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு சில தர நிர்ணயங்களை நிறைவு செய்து வைத்தல் வேண்டும். இவ்விதம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கும் பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல் போன்ற விரிவான செயற்பாடுகள் காரணமாக நாடெங்கிலும் வியாபித் திருக்கும் சுற்றுலாத் துறை சேவைகளை காலத்துக்கேற்ற விதத்தில் ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

## அபிவிருத்தித் திட்டங்கள்

குறிப்பாக உள்ளக பாதுகாப்பு நிலைமை களின் காரணமாக அல்லது உலக அளவிலான பொருளாதார மந்தம் காரணமாக காலத்துக்கு காலம் சுற்றுலா கைத்தொழில் பின்னடைவுகளை எதிர்கொண்டு வந்துள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இந்நாட்டு அரசாங்கங்கள் பின்பற்றிய ஒழுங்குபடுத்தல் பொறி முறையில் சுற்றுலா அபிவிருத்தி திட்டங்கள் முதன்மையான கூறாக இருந்து வந்துள்ளன. தற்போதைய பெருந்தொகை யான பொருளாதார நெருக்கடி நிலைமை களுக்கான ஒரு நிவாரணமாக சுற்றுலா கைத்தொழில் கொண்டிருக்கும் ஆற்றலை சரிவர உணர்ந்து இத்தொழில் துறையின் நிலைபேறான தன்மையை பராமரித்து வருவதற்கென அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட காலத்துக்கேற்ற நடை முறைகளை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். அதன் பிரகாரம் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை சுற்றுலா சபையின் தலைவருக்கு விடுக்கப்பட்ட ஓர் அழைப்பின் பிரகாரம் 1967-1976 காலப் பிரிவை உள்ளடக்கக் கூடிய விதத்தில் இலங்கையின் முதலாவது சுற்றுலா துறை பெருந்திட்டம் ஹவாய் நிபுணர்கள் குழுவொன்றினால் 1967 இல் தயாரிக்கப் பட்டது. அந்தப் பெருந்திட்டத்தின் குறிக் கோள்கள் வருமாறு :

- இலங்கைக்குள் சர்வதேச சுற்றுலா வையும் சுற்றுலாக் கைத்தொழிலையும் உச்ச மட்டத்தில் வளர்த்தெடுப்பதற் கென ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- சர்வதேச சுற்றுலா கைத்தொழிலின் சேவைகள் மற்றும் போக்குகள் என்பவற்றை கவனத்தில் எடுத்து முழு நாட்டினதும் கவர்ச்சிகரமான இயல்பி னையும் வாய்ப்புக்களையும் விரிவான முறையில் பயன்படுத்திக் கொள்ளும் சுற்றுலாக் கைத்தொழிலொன்றை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கைக்கு உச்ச மட்டத்திலான பொருளாதார ஆதாயங்களை பெற்றுத் தரும் சுற்றுலா சந்தைகளை மேம்படுத்து வதற்கென நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்தல்.
- இலங்கை வாழ் மக்களுக்கு உள்நாட்டு சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றுக்கென மேலதிக வசதிகளை வழங்குவதும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் உள்ளூர்வாசிகளுக்கு மென சமூகங்களுக்கிடையிலான பரிமாற் றங்களுக்கென வாய்ப்புக்களை அதிகரித்தலும்.
- புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், உற்பத்தி கைத்தொழில் களை விரிவாக்குதல், வெளிநாட்டு நாணயத்தை சேமித்தல் மற்றும் அதிக அளவிலான வெளிநாட்டு சம்பாத்தியத்தின் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல்.
- இலங்கையின் சமூக, கலாச்சார மற்றும் வரலாற்று அம்சங்களை பாதுகாத்து வளர்த்தெடுக்கக் கூடிய விதத்தில் இக்குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல்.

இலங்கையை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் விரும்பித் தெரிவு செய்யும் ஓர் இடமாக வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் ஆற்றலும் இருந்து வருகின்றது என்பதனை 1967 அளவிலேயே நாடு முதன்முதலாக உணரத் தொடங்கியது. அக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்ட இந்த திட்டத்தில் நிலைத்து நிற்கக் கூடிய விதத்திலான சுற்றுலாத் துறையின் அபிவிருத் திக்கு அவசியமான முக்கிய கூறுகள் அனைத்தும் நன்கு திட்டமிடப்பட்ட விதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. நாட்டின் பொருளா தார வளர்ச்சியில் சுற்றுலா கைத்தொழில் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை அரசாங்கம் மற்றும் தனியார் துறை ஆகிய இரு தரப்புக்களும் புரிந்து கொள்ளாமை யினால் அல்லது ஏற்றுக்கொள்ளாமையினால் இக்கைத்தொழில் துறையுடன் சம்பந்தபட்டவர் களிடம் தாம் செல்லவேண்டிய பாதை குறித்த தெளிவோ குறிக்கோளோ முறையான ஒரு திட்டமோ இருந்து வரவில்லை என்றும், அவர்களுக்கு எத்தகைய தூண்டுகோல்களும் இருந்து வரவில்லை என்றும் இத்திட்டம் சரியாக குறிப்பிட்டுள்ளது.

இத்திட்டம் 1961-1969 காலப் பிரிவின்போது சந்தை வலய அடிப்படையில் இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் புள்ளி விபரங்களை பகுப்பாய்வு செய்கின்றது. நாடு பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த சந்தைப் பங்கினை பெற்றுக்கொள்ள முடியாது போனமைக்கு வழிகோலிய முக்கியமான சில காரணங்களை இத்திட்டம் எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையில் சர்வதேச மட்டத்திலான தங்குமிட வசதிகள் இல்லாதிருப்பது இதற்கான முக்கிய காரணமாக குறிப்பிடப் பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் நாட்டில் சுமார் 11,000 ஹோட்டல் அறைகள் மட்டுமே இருந்து வந்ததுடன், அவற்றில் 500 அறைகள் கொழும்பு நகரில் காணப் பட்டன. இத்திட்டத்தின் பகுப்பாய்வின் பிரகாரம் அந்த அறைகளும் கூட பெருமளவுக்கு தரம் குன்றியவையாக இருந்து வந்தன. சர்வதேச தர நிர்ணயங் களைக் கொண்ட புதிய ஹோட்டல் வசதிகள் நாட்டில் ஸ்தாபிக்கப்படும் வரையில் இலங்கைக்குள் பெரும் எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகளின் வருகை இடம் பெற மாட்டாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் அப்போதைய நிலைமையை பகுப்பாய்வு செய்த பின்னர் ஒவ்வொரு முக்கிய சுற்றுலா தலத்திலும் ஹோட்டல்கள் அமைக்கப்பட வேண்டும் என யோசனை தெரிவித்திருந்தது. பல்வேறு இடங்களினதும் சுற்றுலாக் கவர்ச்சி அம்சங்கள் தொடர்பாகவும் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அது தவிர நிலையான சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசிய மான அங்கங்களான பயணிகள் வரும் மூலங்கள், நிலவமைப்பை அலங்காரப் படுத்துதல், எரிபொருள் வழங்குதல், கழிவுப் பொருட்களின் வெளியேற்றம் மற்றும் நீர் வழங்கல் போன்ற கட்டுமான வேலைகள் தொடர்பான ஒரு பொது செயல் திட்டத்தையும் இத்திட்டம் கொண்டிருந்தது. மேலும், இக்கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கென அவசியப்படும் சந்தர்ப்பத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் வரிச் சலுகைகள், பணம், நிலம் முதலிய வற்றை வழங்குவதும் அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்து வருகின்றது என்பதனை இத்திட்டம் சுட்டிக்காட்டி யிருந்தது.

## சுற்றுலாத் துறை அபிவிருத்திக்கான பெருந்திட்டம்

இலங்கை மிக மோசமான உள்நாட்டு பாதுகாப்பு நிலைமைகளிலிருந்து மீண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதுடன் இணைந்த விதத்தில் 1993 இல் சுற்றுலாத் துறை தொடர்பான இரண்டாவது பத்தாண்டு பெருந்திட்டம் உருவாக்கப்பட்டது. உலக சுற்றுலா ஸ்தாபனம் மற்றும் ஐநா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) ஆகிய அமைப்புக்கள் செயற்படுத்திய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பாகமாக இந்த பெருந்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சுற்றுலா கைத்தொழிலிலிருந்து கிட்டும் ஆதாயங்களை உச்சப்படுத்திக் கொள்ளும் பொருட்டு திட்டமிட்ட விதத்திலான ஒரு முயற்சியை மேற்கொள்வது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வந்தது. மேலும், இத்திட்டத்தில் 1992-1996 ஐந்து வருட காலப் பிரிவு தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றும் உள்ளடக்கபட்டிருந்தது. மிக மோசமான சமூக, பொருளாதார நிலைமை மற்றும் தீவிரமான உள்நாட்டு சந்தைப் போட்டி என்பவற்றுக்கு மத்தியில் சுற்றுலா கைத்தொழில் துறையில் நிலையான வளர்ச்சியை சாதித்துக் கொள்வதே இந்நிகழ்ச்சித் திட்டத்தினதும் இறுதிக் குறிக்கோளாக இருந்து வந்தது.

இப்பெருந்திட்டத்தில் சுற்றுலா கைத் தொழிலின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கங்கள் குறித்து சிறப்பாக கவனம் செலுத்தப்பட்டது என்பதனை இங்கு முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும். 1992-2001 சுற்றுலாத் துறை பெருந்திட்டத்தின் பின்னணியில் இருந்த அடிப்படை எடுகோள்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன:

- 2001 ஆவது ஆண்டளவில் விமானச் சேவைகளின் மூலம் இலங்கைக்கு 874,000 பயணிகளை எடுத்து வரவேண்டும் என்ற உச்ச மட்ட இலக்கு. அது 1991 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையான 317,700 இலும் பார்க்க 175 வீத அதிகரிப்பை காட்டுகிறது.
- சுற்றுலாப் பயணி ஒருவரின் நாளாந்த சராசரி செலவினை 43 அமெரிக்க டொலர் அளவிலிருந்து 2001 இல் 86 அ.டொ. களாக இரட்டிப்பாக அதிகரித்தல் (பணவீக்கத்துக்கான சீராக்கங்களை செய்த பின்னர்).
- சுற்றுலாத் துறை மூலமான அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தை 1991 இல் 156 மில்லியன் அ.டொ. விருந்து 2001 இல் 706 மில்லியன் அ.டொ. களாக 350 சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்ளல் அச்சம்பாத்தியங்களில் 70 சதவீதம் நாட்டுக்குள் வைத்திருக்கப்படுவதுடன், ஏனைய துறைகளில் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு அது உதவும்.
- நல்ல தரமான உயர் மற்றும் நடுத்தர அளவு ஹோட்டல்கள் தொடர்பாக சிறப்பு கவனம் செலுத்துதல். ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை 1992 இல் 9,679 இலிருந்து 2001 இல் 18,953 ஆக இரு மடங்கினால் அதிகரித்தல்.
- சுற்றுலா கைத்தொழிலின் விளைவாக வேலை வாய்ப்புக்களை பெற்றிருக்கும் ஆட்களின் எண்ணிக்கையை 1990 இல் 54,000 ஆக இருந்து 2001 இல் 136,000 வரையில் 155 வீதத்தால் அதிகரித்தல்.
- அரசாங்க வரவு செலவுத் திட்டத்துக்கு சுற்றுலா துறையின் மூலம் கிடைக்கும் தேறிய பங்களிப்பினை 1990 இல் 983 மில்லியன் ரூபாவிலிருந்து 2001 இல் 6,171 மில்லியன் ரூபா வரையில் 500 வீத மொத்த அதிகரிப்பினை எடுத்து வருதல்.

நாடு தொடர்பான சுற்றுலா கைத்தொழில் கொள்கையை உருவாக்குவதில் இப்பெருந் திட்டத்தின் மூலம் மிக முனைப்பான ஒரு பங்குப் பணி நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் இலங்கை தொடர்பான நற்பெயரை கட்டியெழுப்புதல், உள்நாட்டு சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் உத்திகள், சுற்றுலா துறை சேவைகளின் சமூக கலாச்சார அம்சங்கள், சுற்றுலா கைத்தொழில் துறையின் பொருளாதார தொடர்புகள் மற்றும் தனியார் துறையின் பங்கேற்பு போன்ற பல்வேறு விடயங்களும் இப்பெருந்திட்டத்தில் விரிவான முறையில் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன், அது கொள்கை உருவாக்கத்துக்கு வாய்ப்பான தாகவும் இருந்து வருகின்றது.

### சுற்றுலாத் துறைக் கொள்கை

1999 இல் சுற்றுலாக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சிக்கான சுற்றுலாக் கொள்கையொன்று பிரகடனம் செய்யப்பட்டது. கட்டுப்பாடற்ற ஏறுமாறான விதத்திலான சுற்றுலாத் துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் தோன்றக் கூடிய மிக மோசமான சமூகத் தாக்கங்கள் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் என்பவற்றை அரசாங்கம் நன்கு கவனத்தில் எடுத்துள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை அபிவிருத்தி திட்டமிடப்பட்ட ஒரு நிலையில் நிலையான ஓர் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தையும் இக் கொள்கை பிரகடனம் வலியுறுத்தியது. நாட்டின் சமூக கலாச்சார மற்றும் சுற்றாடல் உறிஞ்சு திறனை கவனத்தில் எடுத்து 2001 அளவில் சுமார் 875,000 சுற்றுலா பயணிகள் இலக்கொன்றினை சுற்றுலா துறைக்கான பெருந்திட்டம் (1992-2001) வகுத்திருக்கின்றது. 2002 அளவில் சுமார் பத்து இலட்சம் பயணிகள் என்ற இலக்கினை அது கொண்டிருந்தது.

தனியார் துறையை பொருளாதார வளர்ச்சியை முடுக்கி விடும் இயந்திரமாக கருதும் இக்கொள்கை, உள்நாட்டு மற்றும்

**இலங்கை வந்த சுற்றுலா பயணிகள்**

| | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|---|
| மேற்கைரோப்பா | 8,007 | 7,070 | 7,125 | 8,084 | 8,015 | 7,000 |
| இந்திய தவிர்ந்த ஆசியா | 2,817 | 2,760 | 2,173 | 2,529 | 2,349 | 2,485 |
| வட அமெரிக்கா | 4,841 | 4,541 | 4,021 | 3,511 | 3,225 | 3,227 |
| தென் பசுபிக் | 1,189 | 1,080 | 936 | 827 | 752 | 856 |
| கிழக்கைரோப்பா | 343 | 273 | 345 | 489 | 356 | 291 |
| மேற்காசியா | 195 | 160 | 154 | 215 | 180 | 180 |
| ஆபிரிக்கா | 168 | 132 | 216 | 242 | 116 | 166 |
| இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் | 164 | 90 | 133 | 105 | 85 | 80 |
| **இந்தியா தவிர மொத்தம்** | **17,724** | **16,106** | **15,103** | **16,002** | **15,118** | **15,325** |
| இந்தியா | 10,053 | 10,291 | 3,337 | 2,870 | 4,663 | 3,644 |
| **இந்தியாவையும் உள்ளடக்கி மொத்தம்** | **27,777** | **26,397** | **18,440** | **18,872** | **19,781** | **18,951** |

மூலம் : இலங்கை சுற்றுலா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு தனியார் துறை சுற்றுலாத் துறை செய்திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும், அத்துறையின் செயற்பாடுகளை பொறுப்பேற்பதற்கும் அரசாங்கம் அவசியமெனக் கருதும் சந்தர்ப்பங்களில் அதற்கு ஊக்குவிப்புக் களை வழங்கும் என குறிப்பிடுகின்றது. பயங்கரவாத நடவடிக்கைகளின் விளை வாக சுற்றுலாத் துறை எதிர்கொண்டு வரும் சிரமமான நிலைமைகளை தணிப்பதற்கென அரசாங்கம் ஏற்கனவே அத்தகைய ஊக்கு விப்புக்களின் தொகுதியொன்றை வழங்கி யுள்ளது.

சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுக்கும் இக்கொள்கை சுற்றுலாத் துறை தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், குடிவரவு திணைக்களம் முதலிய அரசாங்க முகவரகங்களினால் விதித்துரைக்கப்பட்டிருக்கும் அனைத்து மடங்கிய சுற்றுச்சூழல் தர நியமங்களுக்கு ஏற்ற விதத்திலேயே மேற்கொள்ளப்படும் என்பதனை வலியுறுத்துகின்றது. சுற்றுலா கைத்தொழிலின் வெற்றிகரமான செயற் பாட்டிற்கு மனித வள அபிவிருத்தி மிக முக்கியமான ஒரு தேவையாக இருந்து வருகின்றது என்ற விடயம் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுற்றுலா துறை ஒரு விருந்தோம்பும் கைத்தொழிலாக இருந்து வருவதனால் அதன் வெற்றிகர மான செயற்பாட்டுக்கு நன்கு பயிற்றப்பட்ட ஆளணியினர் அவசியமாகும்.

அரசாங்க முகவரகங்களுக்கிடையிலான அத்தியாவசியமான நிறுவனரீதியான ஒருங்கிணைப்பினை பராமரிப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு பொறிமுறை கள் சுற்றுலாத் துறையின் நிலையான வளர்ச்சிக்கான முறையான ஒரு கட்டமைப் பினை வழங்குகின்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபை ஓர் ஆலோசனை சபையை உருவாக்கியிருப்பதுடன், அதில் சுற்றுலா துறை மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளார். சுற்றுலாத் துறை சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை உள்ளடக்கிய உத்தேச அபிவிருத்தி செய்திட்டங்களுக்கு எதிர்பார்க்கப்படும் மிக மோசமான சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக இந்த ஆலோசனைச் சபை வழிகாட்டுதல்களை வழங்குகின்றது. கரை யோர பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள கரையோரப் பாதுகாப்பு ஆலோசனைக் குழு இத்தகைய ஓர் அமைப்பாக இருந்து வருவதுடன், சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சு இதில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது. சிறுவர் பாலியல் சுற்றுலாத் துறையையும் உள்ளடக்கிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இக்குழுவின் மூலம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன், அவை தொடர்பான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், இக்குழு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செயற்பாட்டு வழிகாட்டுதல் களையும் வழங்குகின்றது.

**தற்போதைய அரசாங்க ஒழுங்குவிதிகளின் தாக்கத் திறன்**

தற்போதைய அரசாங்க ஒழுங்கு விதிகள் சுற்றுலாத் துறையின் நிலையான வளர்ச்சி தொடர்பான முக்கியமான பல அம்சங்களை உள்ளடக்கக்கூடிய அளவுக்கு விரிவானவை யாக இருந்து வந்த போதிலும் அமுலாக்கலில் அவற்றின் தாக்கத்திறன் தொடர்பான சந்தேகங்கள் இருந்து வருகின்றன. சட்ட அமுலாக்க செயன்முறை நாட்டின் குடித்தொகை, மூலவளங்கள், மூல வள பகிர்வுப் போக்கு மற்றும் அதிகார அரசியல் என்பவற்றிலிருந்து தோன்றும் பல்வேறு காரணிகளின் செல்வாக்கினைக் கொண்டுள்ளது. கடற்கரையில் ஓய்வை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு தொல்லை கொடுக்கும் எந்த ஒரு நபரையும் விரட்டி அடிப்பதற்கு பொலிஸாருக்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளது. ஆனால், அத்தகைய நபர்கள் கைது செய்யப்படும் பொழுது அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்வதற்கு அரசியல் அனுசரணையை நாடுகிறார்கள். கடற்கரையில் சுற்றித்திரியும் சிறுவர்களில் ஒருசிலர் தமது குடும்பத்தின் ஒரேயொரு வருமானம் ஈட்டி வருபவர்களாக இருக்கின்றார்கள் என்பது உண்மைதான். அதனால், தமது குடும்பங்களை பராமரிப் பதற்கு எந்த வழியிலும் பணத்தை தேடுவதற்கு அவர்கள் நிர்பந்திக்கப்பட் டுள்ளார்கள். மிக எளிதில் பணம் சம்பாதிக் கக்கூடிய ஒரு வழி கடற்கரையில் சுற்றுலா பயணிகளுக்கு சட்டவிரோதமான வழிகாட்டி களாக செயற்படுவதாகும். இதன் மூலம் நாள் முடிவின் போது அவர்களால் ஓரிரு டொலர்களை சம்பாதித்துக் கொள்ள முடியும். இத்தகைய கடற்கரைப் பையன்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அவர்களுக்கிடையில் பகைமை தோன்றுவ துடன், அது குற்றச் செயல்களின் பெருக்கத் துக்கு வழிகோலுகின்றது. இந்தப் பையன்கள் ஒரு சில சுற்றுலா பயணிகளுக்கு உள ரீதியாகவும் உடல்ரீதியாகவும் தொல்லை கொடுத்து வருகின்றனர். இத்தகைய ஒரு சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக வேறு ஹோட்டல்களுக்கு மாற்றப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிவிக்கப்பட்டன. இவ்விதம் கடற்கரையில் சுற்றித் திரியும் பையன்களுக்கு மாற்று வேலை வாய்ப்புக்களை வழங்குவதன் மூலமே இப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும்.

வீசி எறியப்படும் குப்பைகள், பொலித்தீன் பைகள் மற்றும் உணவு எச்சங்கள் என்பவற்றின் மூலம் தோன்றும் சுற்றாடல் மாசாக்கல் மற்றும் வளி மாசாக்கல் என்பவற்றின் தாக்கங்களை அடிக்கடி பத்திரிகைகள் சுட்டிக்காட்டி வருகின்றன. இப்பிரச்சினை சுற்றுலாக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியின் மீது மிக மோசமான தாக்கத்தை எடுத்து வருகின்றது. எனினும், மத்திய சுற்றால் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள தற்போதைய சட்ட விதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் இது தொடர்பாக போதிய அளவில் அமுல் செய்யப்பட்டு வரவில்லை என்பதனை அவதானிக்க முடிகிறது.

இந்தப் பாதகமான அம்சங்களுக்கு மத்தியில் சுற்றுலாத் துறை தொடர்பான பல வெற்றிக் கதைகளும் இருந்து வருகின்றன. இதற்கு மிகச் சிறந்த உதாரணம் கண்டலம ஹோட்டல் தொகுதியாகும். இது வெறுமனே ஒரு ஹோட்டல் செய்திட்டமாக இருந்து வரவில்லை. மாறாக, அதன் முழுமையில் சுற்றுச் சுழலுக்கு உசிதமான விதத்தில் அது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஹோட்டல் அடர்ந்த காட்டுக்கு மத்தியில் அமைக்கப்பட்ட போதிலும் உயிர் பன்முகத் தன்மைக்கும் இயற்கை சூழலுக்கும் எத்தகைய சேதத்தையும் விளைவிக்காத விதத்தில் அது அமைக்கப்பட்டுள்ளது. அயலில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்யக்கூடிய விதத்தில் பல கசிந்து செல்லும் அனுகூலங்களையும் அது வழங்கியுள்ளது. மேலும், மனித வாழ்வுக்கும் விலங்குகளின் இருப்புக்கும் நாங்கள் சுற்றுச்சூழலை பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அவசியம் குறித்து அது பாடசாலை பிள்ளைகளுக்கு கல்வியூட்டியும் வருகின்றது.

சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கு சட்ட அமுலாக்கல் செயன்முறையில் காணப்படும் வெளி அழுத்தங்கள் களையப்படுதல் வேண்டும். மேலும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் திட்ட அமுலாக்கல் என்பன தொடர்பாக மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தி அவர்களின் முனைப் பான பங்கேற்பினையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

துறையின் விரிவாக்கம் அடுத்த நூற்றாண்டில் பொருளாதார வளர்ச்சிக்கு கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கும். நாட்டில் சமாதானத்தை எடுத்து வருவதன் மூலமும் பயணிகளுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதன் மூலமும் சுற்றுலா துறையை இடையறாது விரிவாக்கம் செய்து வருவதன் மூலமும் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை எடுத்துவர முடியும். உள்நாட்டு தனியார் துறை முதலீட்டாளர் களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இத்துறையில் அதிக அளவில் பங்கேற்பதன் மூலம் பயணிகளுக்கான வசதிகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சருடன் ஒரு நேர்காணல்

**கௌரவ அமைச்சர் அவர்களே! சுற்றுலா துறையின் ஆரம்பம் தொடர்பாக குறிப்பாக நீங்கள் இலங்கை சுற்றுலா சபையில் தலைவராக இருந்த கால கட்டத்தில் இலங்கையில் சுற்றுலா துறையின் ஆரம்பம் குறித்து சற்று விளக்குவீர்களா?**

ஒழுங்கமைந்த சுற்றுலாத் துறை வளர்ச்சி அடைந்த நாடுகளில் குறிப்பாக இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் தனியார் துறையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்முயற்சியாக இருந்து வந்தது என்று கூற வேண்டும். ஆனால் ஒரு மனித நடவடிக்கை என்ற வகையில் பிரயாணம் மனித இனத்தின் தோற்றத்துடன் ஆரம்பித்திருந்தது எனலாம். சுற்றுலாத் துறை துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு சூழ்நிலையில் அதனை தூண்டுகின்ற நோக்கில் அரசாங்க கட்டுப்பாட்டுடன் கூடிய பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வருவதனையும் நாங்கள் பார்க்கிறோம். சுற்றுலாத் துறை செழித்தோங்குவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதே இந்த நிறுவனங்களின் பணியாக இருந்து வருகின்றது. சுற்றுலா மற்றும் பிரயாணத் துறை என்பவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு முகவர்களினதும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து பொருளாதார தேசிய வளங்களின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பகிர்வினை உறுதி செய்யக்கூடிய அரச நிறுவனமொன்றுக்கான தேவை அக்கால கட்டத்தில் உணரப்பட்டிருந்தது. உண்மையிலேயே இது இரு வழிகளிலான ஒரு செயன்முறையாக இருந்து வந்தது. சுற்றுலாக் கைத்தொழிலுக்கு அவசியமான மூலவளங்களை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்த அதே வேளையில், இத்தொழில் துறையின் மூலம் கிட்டும் அனுகூலங்களை அது நாட்டு மக்களிடையே பகிர்ந்தளிக்க வேண்டியும் இருந்தது.

பெரும்பாலான வளர்முக நாடுகளில் சுற்றுலாத் துறை பிரதானமாக தனியார் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு செயற்பாடாக இருந்து வந்துள்ள போதிலும் அது பல்வேறு வடிவங்களைக் கொண்ட அமைப்புகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், சுற்றுலாத் துறையைக் கையாள்வதற்கென ஏராளமான அமைப்பு முறைமைகள் அரசாங்கத் தொடர்பான நிறுவனங்களை ஸ்தாபித்துக் கொள்வதன் மூலம் இத்துறை மீதான தமது கட்டுப்பாட்டினை பலப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையை அரசாங்கங்கள் மிக விரைவில் உணர்ந்து கொண்டன. சுற்றுலா துறையின் நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியை முன்னிட்டு அத்துறை தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைப்பதற்கென இத்தகைய அமைப்புகள் தேவைப்பட்டன. தனியார் துறை முன்முயற்சிகள் மூலம் இப்பணி நிறைவு செய்து வைக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது.

இலங்கையும் கூட அக்கால கட்டத்தில் இதே மாதிரியான அனுபவங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. ஓர் அரை அரசாங்க நிறுவனமாக இலங்கை சுற்றுலா சபையை உருவாக்க வகை செய்யும் 1966 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா சபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் (1965) கௌரவ ஜே.ஆர். ஜெயவர்தன அவர்கள் சுற்றுலா துறைக்கு பொறுப்பாக இருந்து வந்தார். நான் 1970 இல் இலங்கை சுற்றுலா சபையின் தலைமை பொறுப்பை ஏற்றேன். அப்பொழுது நான் ஒரு வழக்கறிஞராக தொழில் புரிந்து வந்ததுடன், அரசியலிலும் ஏராளமாக ஈடுபாட்டைக் கொண்டிருந்தேன். உண்மையிலேயே என்னைப் பொறுத்தவரையில் சுற்றுலாத் துறை ஒரு புதிய விடயமாகவே இருந்தது.

உள்கட்டமைப்பு வசதிகள், ஹோட்டல் அறைகள், உணவு வழங்கும் சேவைகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் என்பன சுற்றுலாத் துறையின் அடிப்படைத் தேவைகளாக இருந்து வருகின்றன. இவற்றை வழங்கக் கூடிய முனைப்பினையும் உள்ளார்ந்த ஆற்றலையும் அக்காலப் பிரிவின் போது தனியார் துறை கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக இலங்கை அரச அனுசரணையுடன் கூடிய ஒரு முயற்சியாக சுற்றுலா துறையை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 1966 இல் ஓர் அரை அரசாங்க நிறுவனமாக இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. சுற்றுலா பயணிகளுக்கான ஹோட்டல் அறை வசதிகள் மற்றும் உணவுச் சேவைகள் என்பவற்றை வழங்குவதில் காணப்பட்ட இடைவெளியை நிரப்பும் குறிக்கோளுடனேயே இக்கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது. 1967 வரையான ஐந்து வருட காலப் பிரிவின் போது சுற்றுலாப் பயணிகளின் வருகை வருடாந்தம் சராசரியாக 20,000 அளவில் தேங்கிக் கிடந்தது. 1970 இல் பயணிகள் வருகையில் ஓர் ஏற்றமான போக்கு ஏற்பட்டிருந்ததுடன், அவ்வருடத்தில் மொத்தம் 46,000 பயணிகள் இலங்கைக்கு வந்தனர். அக்கால கட்டத்தின் போது மேற்கைரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகள் என்பவற்றில் இலங்கை புதிய [illegible] நிறைந்த ஒரு விடுமுறைத் தலமாக நன்கு பிரபல்யம் பெற்றிருந்தது. 1966 இல் இலங்கையில் 770 ஹோட்டல் அறைகள் மட்டுமே இருந்தன. நான் சுற்றுலா சபையின் தலைவராக இருந்த காலத்தின் போது இது 1,000 ஆக அதிகரித்திருந்தது.

**அக்கால கட்டத்தில் இலங்கை உலக சுற்றுலா தாபனத்துடன் எத்தகைய தொடர்புகளை கொண்டிருந்தது?**

உண்மையிலேயே உலக சுற்றுலா தாபனம் 1970 களிலேயே உலகளாவிய சுற்றுலாத் துறை முறையாக கட்டியெழுப்பப்பட்ட ஓர் அமைப்பாக உருவெடுத்தது. அதன் ஆரம்பம் சர்வதேச அரச சார்பற்ற அமைப்பொன்றாகவே இருந்து வந்தது. உத்தியோகபூர்வ பிரயாண நிறுவனங்களின் சர்வதேச சங்கம் என அது அப்போது அழைக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் அது அரசுகளுக்கிடையிலான ஓர் உலக நிறுவனமாக உயர்த்தப்பட்டதுடன், ஐ.நா.வின் முகவர் ஓர் உறுப்பு நிறுவனமாகவும் அது உருவெடுத்தது. இன்று உலக சுற்றுலா தாபனம் உலகளாவிய சுற்றுலா கொள்கைகளை உருவாக்குவதுடன், உறுப்பு நாடுகளின் செயல் திட்டங்களுக்கு வசதி செய்து கொடுக்கும் [illegible] அரசாங்கங்களுக்கான நிறுவனமாக இருந்து வருகின்றது. இத்தாபனத்தில் 138 நாடுகள் முழுமையான அங்கத்துவத்தை பெற்றிருப்பதுடன், ஹோட்டல் மற்றும் பிரயாணத் துறை, விமான சேவைகள், பயிற்சி நிறுவனங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்யும் சுமார் 350 தனியார் துறை நிறுவனங்கள் இணை அங்கத்துவத்தைப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் ஆட்சி மன்றமான நிறைவேற்றுக் குழுவில் 32 உறுப்பினர்கள் இருந்து வருவதுடன், இவர்கள் அங்கத்துவ உறுப்பு நாடுகளிலிருந்து இரண்டு வருடங்களுக் கொரு முறை தெரிவு செய்யப்படுகின்றனர். நிறைவேற்று குழு உறுப்பினர்கள் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட உறுப்பு நாடுகளின் சுற்றுலா துறைக்கு பொறுப்பான அமைச்சர்களாகவே இருந்து வருகின்றனர். எனவே, சுற்றுலா தாபனம் தொடர்பாக முக்கியமான கொள்கை முடிவுகளையும் நிதி தொடர்பான முடிவுகளையும் அதிகார முத்திரையுடன் மேற்கொள்வது சாத்திய மாகியுள்ளது. தற்பொழுது இந்த நிறை வேற்றுக் குழுவின் தலைமைப் பொறுப்பை நான் வகித்து வருகிறேன். இத்தாபனத்தின் செயலகம் செயலாளர் நாயகத்தின் தலைமையில் இயங்கி வருகின்றது. இதில் இலங்கை இப்பொழுது முழுமையான அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டுள்ளது என்பதனையும் இங்கு நான் குறிப்பிட வேண்டும்.

**கௌரவ அமைச்சர் அவர்களே! நீங்கள் இப்பொழுது உலக சுற்றுலா தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவின் தலைவராக செயற்பட்டு வருகின்றீர்கள். இத்தாபனம் உறுப்பு நாடுகளில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கென எத்தகைய புதிய செயல்திட்டங்களை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கின்றது ?**

சுற்றுலாத்துறை இன்றைய உலகைப் பொறுத்தவரையில் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டு வரும் ஒரு கைத்தொழில் துறையாக இருந்து வருகின்றது. வருங் காலத்திலும் கூட அது பாரிய கைத் தொழில்களான மோட்டார் வாகன உற்பத்தி, இரசாயனப் பொருட்கள், உணவு உற்பத்தி, புடவை வகைகள் மற்றும் ஆடைகள். சுரங்க உற்பத்திகள் ஆகிய வற்றை பின்தள்ளிவிட்டு விரைந்து முன்னேறிச் செல்லும் ஒரு பாரிய கைத்தொழில் துறையாக இருந்து வரும். 1999 இல் உலக சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 66.3 கோடியாக இருந்து வந்ததுடன், அவர்கள் மூலமாக கிடைத்த வருமானம் 45,300 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்து வந்தது. உலக சுற்றுலா துறை இன்று தீவிர மாற்றங்களை எதிர்கொண்டு வருவதுடன், சுற்றுலா பயணிகளின் விருப்புக்களிலும் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. சுற்றுலாத் துறை ஒரு நாட்டின் போருளாதார அடித் தளத்துக்கு பெருமளவுக்கு ஆதரவு வழங்கி வந்த போதிலும், அது சமூக கலாச்சார ரீதியிலும் இயற்கை சுற்றுச்சூழல் ரீதியிலும் விரும்பத் தகாத பல விளைவுகளை எடுத்து வருகின்றது என்ற விடயத்தை நாங்கள் இங்கு மறந்துவிட முடியாது. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு இத்துறை மிகவும் கவனத்துடன் கையாளப்படுவது அவசியமாகும். உலக சுற்றுலா தாபனமும் இவ்விடயத்தை மிகவும் தீவிரமாக கவனத்தில் எடுத்துள்ளது. அதன் 2000-2001 வேலைத்திட்டம் இதனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

உலக சுற்றுலா தாபனம் அதன் விவகாரங்களில் தனியார் துறையின் பங்கேற்புக்கு பெருமளவுக்கு வாய்ப்புக்களை அளிக்கின்றது. உறுப்பு நாடுகளில் பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலான மிகப் பொருத்தமான சம நிலையை எடுத்து வரும் நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக உசுதா பல கருத்தரங்கு களையும், செயலமர்வுகளையும் நடத்தி யுள்ளது. மனித வள அபிவிருத்தி உசுதா வின் மற்றொரு முக்கியமான செயல் திட்டமாகும். கடந்த காலத்தின் போது சுற்றுலா துறை தொடர்பான கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றுலா துறையைப் பொறுத்தவரையில் பொருத்தமான பயிற்சி மற்றும் கல்வி என்பன மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. உசுதா பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கூடாகவும் இந்த விடயம் தொடர்பாக மிகவும் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, பயணிகளின் உரிமைகள், உள்ளூர் குடி மக்களின் உரிமைகள், சுற்றுலாப் பயணிகள் சென்றடையும் இடங்களின் கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றை பாதுகாத்தல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கக்கூடிய விடயத்தில் அனைத்தும் அடங்கிய நடத்தை கோவையொன்றை தயாரிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை உசுதா அறிமுகம் செய்து வைக்கின்றது. சுற்றுலா துறையின் தரத்தினை மேம்படுத்துவதே இந்நடத்தைக் கோவையின் குறிக்கோளாகும். நிலைத்து நிற்கக்கூடிய சுற்றுலா அபிவிருத்தி என்ற மிக முக்கியமான நிகழ்ச்சித்திட்டம் வளர்முக நாடுகளுக்கு மிக குறிப்பான விதத்திலும் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு பொதுவான விதத்திலும் பிரயோகிக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டமாக இருந்து வருகின்றது. ஐநா அமைப்பின் நன்கு பிரபல்யம் பெற்றுள்ள பிரன்ட்லான்ட் ஆணைக்குழு அறிக்கை நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்ற பதத்துக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வழங்கியுள்ளது: "வருங்கால தலைமுறையினர் தமது தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஆற்றலினை பங்கப்படுத்தாத விதத்தில் இன்றைய தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்யும் அபிவிருத்தி". இந்த வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள பரிமாணங்களை கவனத்தில் எடுக்கும் உலக சுற்றுலா தாபனம் சுற்றுலா உலகளாவிய ரீதியிலும் ஒவ்வொரு நாட்டிலும் பிராந்தியத்திலும் உள்ளூர் சமூகங்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கக்கூடிய விதத்திலும், இயற்கை சுற்றுலாவின் மீது தோன்றக் கூடிய மோசமான தாக்கங்களை தவிர்ந்து கொள்ளக்கூடிய விதத்திலும் சுற்றுலாத் துறை நிலைத்து நிற்கக்கூடிய ஓர் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்டு நிருவகிக்கப்பட்டு வரவேண்டும் என எதிர்பார்க்கின்றது.

**நீங்கள் இத்துறைக்கு பொறுப்பான அமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பின்னர் அரசாங்கத்தினால் நாட்டின் பிரயாண மற்றும் சுற்றுலா கைத்தொழிலுக்கு எத்தகைய உதவிகள் வழங்கப் பட்டுள்ளன?**

இலங்கையில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி அவ்வப்பொழுது பல ஏற்ற இறக்கங்களை அனுபவித்து வந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்கள். எனினும், கடந்த சில வருடங்களின்போது இத்துறை ஒரு நிரந்தர மீட்சி குறித்த சாதக அடையாளங்களை காட்டி வந்துள்ளது. கடந்த வருடத்தின் போது இலங்கைக்குள் வந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 436,440 ஆகும். இது இதுவரை காலத்திலும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள அதி உச்சமட்ட பயணிகள் வருகையாகும். இந்த வருடத்திலும் கூட உள்ளூர் பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டுள்ள தடங்கல் களுக்கு மத்தியிலும் கூட இதுவரையில் நாங்கள் இதே மாதிரியான ஒரு போக்கினை பராமரித்து வந்துள்ளோம். சுற்றுலாத் துறை 36,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்புக்களை வழங்கியிருப்பதுடன், சுமார் 51,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. நாடு எதிர்கொண்டு வரும் பெரும்பாலான சமூக பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை எடுத்துவரும் விஷயத்தில் சுற்றுலாத் துறை கொண்டிருக்கும் பாரிய உள்ளார்ந்த ஆற்றலை சரிவர உணர்ந்து கொண் டிருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டில் நிலையான சுற்றுலாத் துறை அபிவிருத்தியை எடுத்து வரும் நோக்கில் பல்வேறு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திட்டமிடப்பட்ட சுற்றுலாத் துறை அபிவிருத் திக்கு அவசியமான சுற்றுலாக் கொள்கை யொன்றை உருவாக்கும் பணி இதில் மிக முக்கியமானதாகும். இக்கொள்கை சுற்றுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலை பொருளாதாரத்தை உந்திச் செல்லும் ஒரு கைத்தொழிலாகவும் முதன்மையாக தனியார் துறையினால் தூண்டப்பட்டு வரும் ஒரு கைத்தொழிலாகவும் பிரகடனம் செய்கின்றது. அதே வேளையில் கட்டுப்பாடற்ற ஏறுமாறான சுற்றுலாத் துறை அபிவிருத்தி சமூகத்தின் மீதும் பௌதீக சூழலின் மீதும் எடுத்து வரக்கூடிய மோசமான தாக்கங்களையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துள்ளது. சுற்றுலாக் கைத்தொழில் நம்பிக்கையுடன் இயங்கி வரக்கூடிய பாதுகாப்பான ஆதரவான சூழலொன்றை வழங்கும் பொறுப்பினை அரசாங்கம் கொண்டுள்ளது என இக்கொள்கை குறிப்பிடுகின்றது. சுற்றுலாத் துறை சிரமங்களை எதிர் கொண்ட காலப் பிரிவுகளின் போது பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான விதி விலக்குகள், மென்கடன் வசதிகள், வரிக் கழிவுகள், தீர்வையற்ற சலுகைகள் போன்ற பாதுகாப்பு வழிமுறைகளை அறிமுகம் செய்து வைத்து சுற்றுலாத் துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருந்தது என்பதனையும் நீங்கள் அறிவீர்கள்.

நிதித் துறை தொடர்பாக அனைத்து விதமான இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் கூட சுற்றுலாத் துறை மேம்பாட்டுக்கான அரசாங்கத்தின் ஆதரவு மிகவும விரிவான முறையில் வழங்கப்பட்டு வந்துள்ளது. சுற்றுலாத் துறை தொடர்பான சந்தைப் படுத்தல் மற்றும் மேம்பாட்டு திட்டமொன்றுக்கென 2000-2001 காலப் பிரிவின் போது ரூ.35 கோடியை இரு கட்டங்களில் ஒதுக்கிக் கொடுப்பதற்கு அண்மையில் அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதே போல பிரயாண மற்றும் ஹோட்டல் தொழில் துறையும் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு இதற்கு இணையான விதத்திலான ஒரு பங்களிப்பினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இது அரச துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலான கூட்டு முயற்சி குறித்த வரவேற்கத்தக்க ஆரோக்கியமான ஒரு நடவடிக்கையாக இருந்து வருவதாக நான் கருதுகிறேன். சுற்றுலாத் துறை பயிற்சி மற்றும் கல்வி என்பவற்றிலான அரசாங்கத்தின் முன்முயற்சிகளை இங்கு மிக முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த அடிப்படை தேவையை கவனத்தில் எடுத்துள்ள அரசாங்கம் கொழும்பு நகர் மையத்தில் 24 கோடி ரூபா முதலீட்டில் முழுமையான ஹோட்டல் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு முன்வந்துள்ளது.

சுற்றுலா தொடர்பான பெருந்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பயணிகள் வருகை தொடர்பான இலக்குகள் அடிப்படையில் ஹோட்டல் அறைகளின் நிர்மாணத்துக்கு அரசாங்கம் சாத்தியமான அனைத்து விதமான ஊக்குவிப்புக்களையும் வழங்கியுள்ளது. இதன் விளைவாக 1994-1999 காலப் பிரிவின் போது 1789 அறை வசதிகளைக் கொண்ட 39 ஹோட்டல்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. மேலும் 1059 அறை வசதிகளைக் கொண்ட ஹோட்டல்களின் கட்டுமான வேலைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பின்னவலையில் சுமார் 10 கோடி ரூபா செலவில் விலங்குக் காட்சிச் சாலை ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதுடன், அது சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும் முக்கியமான ஒரு மையமாக உருவாகும்.

**இலங்கையில் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கு ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் எத்தகைய பங்களிப்பினை வழங்கி வருகின்றது?**

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் இப்பொழுது 6 புதிய எயார் பஸ்களை புதிதாக சேவையில் அமர்த்தியுள்ளது. இவ்வருட முடிவின் போது இவ்வெண்ணிக்கை 9 ஆக அதிகரிக்கப்படும். விமானப் போக்குவரத்து சுற்றுலா மேம்பாட்டுக்கு கிடைக்கும் மிகத் துரிதமான போக்குவரத்து முறையாக இருந்து வருகிறது எனக் கருதும் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் பாரிய சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றை செயல்படுத்து வதற்கு திட்டமிட்டிருப்பதுடன், இதன் ஒரு பாகமாக சிட்னி, சவுதி அரேபியா மற்றும் டாக்கா போன்ற இடங்களுக்கு சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படும். அதேவேளையில் லண்டன், பிராங்பேர்ட், டோக்கியோ, டுபாய், மஸ்கட் மற்றும் ரியாத் ஆகிய இடங்களுக்கான விமானச் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மேலும், பல புதிய இடங்களுக்கான சேவைகளை ஆரம்பிக்கும் பொருட்டு அது இத்தாலிய விமானச் சேவையான யுரோப்பலை விமானச் சேவை நிறுவனத்துடனும் எமிரேட்ஸ் நிறுவனத்துடனும் கைகோர்த்துள்ளது.

**உள்நாட்டு சுற்றுலாத் துறையும் இப்பொழுது வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது. இத்துறையின் மேம்பாட்டுக்கென உங்கள் அமைச்சு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது ?**

உள்நாட்டு சுற்றுலாத் துறையின் வளர்ச்சி மட்டத்தை துல்லியமாக எடுத்து விளக்கக் கூடிய தரவுகள் எம்மிடம் இல்லை. ஆனால், துரித நகர்மயமாக்கல் காரணமாகவும் வாழ்க்கைப் பாணிகள், பொழுதுபோக்குகள் என்பவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் காரணமாகவும் புனித தலங்களுக்கு யாத்திரைகளை மேற்கொள்ளும் விருப்பு காரணமாகவும் உள்நாட்டு சுற்றலாத் துறை தூண்டப்பட்டிருக்க முடியும். விடுமுறையை கழிப்பவர்களுக்கு செலவு குறைந்த தங்குமிட வசதிகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தனியார் துறை ஹோட்டல்கள், உணவகங்கள் மற்றும் விருந்தினர் விடுதிகள் என்பவற்றை அமைக்கும் செய் திட்டங்களை மேற்கொள்வதற்கு நாங்கள் ஊக்கமளித்து வருகின்றோம். ஆனால், அதே வேளையில் இந் நிறுவனங்கள் இலங்கை சுற்றுலா சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருச்கும் தரம் தொடர்பிலான அளவுகோல்களையும் நிறைவு செய்து வைக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் தரம் குன்றுவதற்கு நாங்கள் இடம் கொடுக்க முடியாது. ஒரு திட்டமிட்ட முறையில் சுற்றுலா கவர்ச்சியை அபிவிருத்தி செய்வது நாங்கள் கவனம் செலுத்த வேண்டியிருக்கும் மற்றொரு முக்கியமான துறையாகும். இன்று இயற்கை எழில் மிக்க இடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொல்லியல் அமைவிடங்கள் என்பவற்றைச் சூழவுள்ள பிரதேசங்களில் குப்பைகள் வீசப்பட்டு வருவதனால் பாரிய அளவில் சுற்றாடல் தூய்மைக்கேடு இடம்பெற்று வருவதை நாங்கள் பார்க்கிறோம். இது எமது தீவிர அக்கறைக்குரிய ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்கு நாங்கள் சுற்றுலாப் பயணிகளை மட்டும் குறை கூற முடியாது என்று நான் சொன்னால் நீங்கள் அதனை ஏற்றுக் கொள்வீர்கள். சுற்றுலா பயணிகளின் உபயோகத்துக்கென உணவருந்தும் இடங்கள், நீர் அருந்தும் வசதிகள், கழிவறை வசதிகள், குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்தக் கூடிய வசதிகள் என்பவற்றை வழங்கக்கூடிய முறைகளை நிர்வாக மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் வழங்க வேண்டிய அவசியம் இருந்து வருகின்றது. பிரபல்யமான சுற்றுலா கவர்ச்சி மையங்கள் மீதான மிதமிஞ்சிய அழுத்தத்தை தவிர்க்கும் நோக்கத்துடன் ஹூம்மானய, மதுனாகல சுடு நீர் ஊற்றுக்கள், முலன்னடுவ பறவைகள் சரணாலயம் மற்றும் மெதிரிகிரிய பறவைகள் சரணாலயம் போன்ற பெருமளவுக்கு அறியப்படாத புதிய சுற்றுலா கவர்ச்சி மையங்களை அபிவிருத்தி செய்வதற்கென நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றுலா தாபனம்: அதன் பணிகளும் இலங்கையும்

எம். பி. கிரிஸல்ல

உலக சுற்றுலா தாபனம் (உ.சு.தா) சுற்றுலாத் துறையில் இருந்து வரும் முன்னணி சர்வதேச நிறுவனமாகும். இதன் தலைமை அலுவலகம் மாட்ரிட் நகரில் அமைந்துள்ளது. சுற்றுலாத் துறையின் மேம்பாடு, அபிவிருத்தியின் மையமான பொறுப்பினை ஐநா அமைப்பு இந்த அரசாங்கங்களுக்கிடையிலான அமைவினைக்கு வழங்கியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச புரிந்துணர்வு, சமாதானம், செழிப்புநிலை, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் என்பவற்றுக்கான அக்கறை தழுவிய அங்கீகாரம் என்பவற்றிற்கு பங்களிப்பினை வழங்கும் குறிக்கோளுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதே உ.சு.தா வின் அடிப்படை நோக்கமாகும். இத்தாபனம் இந் நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு சுற்றுலாத் துறையில் வளர்முக நாடுகளின் அக்கறையின் மீது குறிப்பாக கவனம் செலுத்தி வருகின்றது.

பின்னணி

1925 இல் ஹேக் நகரில் உத்தியோகபூர்வ சுற்றுலா பிரச்சார நிறுவனங்களின் சர்வதேச யூனியன் நிறுவப்பட்டது. இரண்டாவது உலக போருக்குப் பின்னர் இது உத்தியோகபூர்வ சுற்றுலா அமைப்புக்களின் சர்வதேச யூனியனாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், அதன் தலைமையகம் ஜெனிவாவுக்கு மாற்றப்பட்டது. இந்த அமைப்பின் உறுப்பினர்கள் இதனை அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு தாபனமாக மாற்றி அமைப்பதற்கான ஒரு தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்தனர். அதன் பிரகாரம் சுற்றுலாத் துறை தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் உலகளாவிய அடிப்படையில் செயற்படுவதற்கான அதிகாரம் அதற்கு அளிக்கப்பட்டது. மேலும், உலக சுகாதார நிறுவனம், யுனெஸ்கோ மற்றும் சர்வதேச, உள்நாட்டு விமான போக்குவரத்து அமைப்பு போன்ற நிறுவனங்களுடன் அது ஒத்துழைப்புடன் செயற்பட்டு வரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானம் 1974 இல் உத்தியோகபூர்வ சுற்றுலா அமைப்புக்களை கொண்டிருந்த 51 நாடுகளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இந்த நிறுவனத்தின் பெயர் உலக சுற்றுலா தாபனம் என மாற்றி அமைக்கப்பட்டது. அதன் முதலாவது பொதுச்சபைக் கூட்டம் 1975 மே மாதத்தில் மாட்ரிட்டில் இடம்பெற்றது. ஸ்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 1976 இல் தலைமையகம் அதன் செயலகம் மாட்ரிட் நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. உ.சு.தா 1976 இல் ஐநா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) ஒரு நிறைவேற்று முகவராக மாற்றி அமைக்கப்பட்டது. இது தொடர்பாக 1977 இல் ஐநா அமைப்புடன் ஓர் ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

உ.சு.தா வின் கட்டமைப்பும் அதன் முதன்மையான நிறுவனங்களும்

உ.சு.தா வில் தற்பொழுது 130 நாடுகளும் பிராந்தியங்களும் உறுப்புரிமை பெற்றிருப்பதுடன், மேலும் 350 இணை உறுப்பினர்களும் இருந்து வருகின்றனர். இதில் மூன்று வகையான உறுப்புரிமைகள் உள்ளன. முழு உறுப்புரிமை இறைமையுள்ள அனைத்து அரசுகளும் பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டு உறவுகளுக்கான பொறுப்புக்களை கொண்டிராத பிராந்தியங்களுக்கு இணை உறுப்புரிமை வழங்கப்படுகின்றது. பிரயாணம் மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றில் அல்லது விமானச் சேவைகள், ஏனைய போக்குவரத்துச் சேவைகள், உணவகங்கள், பிரயாண முகவர்கள் போன்ற சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு வர்த்தக நிறுவனங்களுக்கும் சங்கங்களுக்கும் இணை உறுப்புரிமை வழங்கப்படுகின்றது. இது அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு அரசாங்க அமைப்பாகவும் சுற்றுலாக் கைத்தொழில் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் கலந்துரையாடலுக்கான அரங்காக செயற்பட்டு வருகின்றது. பிரதானமாக உறுப்பினர்கள் வழங்கும் பங்களிப்பின் மூலமாகவே இந்த தாபனம் நிதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் தாபனம் பொதுச் சபை, நிறைவேற்றுக் குழு, பிராந்திய ஆணைக்குழுக்கள், கமிட்டிகள் மற்றும் செயலகம் முதலிய பிரதான அங்கங்களைக் கொண்டதாக இருந்து வருகின்றது. இந்த தாபனத்தின் உயர்மட்ட அமைப்பான பொதுச்சபை முழுமையான உறுப்பினர்கள், இணை உறுப்பினர்கள் ஆகியோரை பிரதிநிதித்துவம் செய்யும் வாக்களிக்கும் பேராளர்களைக் கொண்டிருப்பதுடன், அதன் சாதாரண அமர்வுகள் வரவு செலவுத் திட்டத்துக்கும் வேலைத் திட்டத்துக்கும் ஒப்புதல் வழங்குவதற்காகவும் சுற்றுலாத் துறை தொடர்பான மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் விடயங்களை விவாதிப்பதற்காகவும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது. இணை உறுப்பினர்களும் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அவதானிப்பாளர்களாக இக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர். நிறைவேற்றுக்குழு உ.சு.தா வின் ஆட்சி மன்ற சபையாக இருந்து வருவதுடன், அது செயலாளர் நாயகத்துடன் கலந்துரையாடி அதன் முடிவுகளையும் பரிந்துரைகளையும் செயற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இப்பேரவை ஆகக் குறைந்தது ஒரு வருடத்துக்கு இரு முறை கூடுவதுடன், இவ்வவைக்கு தெரிவு செய்யப்படும் பதவிக்காலம் நான்கு வருடங்களாகும். பொதுச்சபை அதன் உறுப்பினர்களுக்கு மத்தியிலிருந்து ஒரு தலைவரையும் இரு உப தலைவர்களையும் தெரிவு செய்து கொள்கின்றது.

ஆணைக்குழுக்கள் பொதுச்சபையின் துணை அமைப்புக்களாக கருதப்படுவதுடன், ஆபிரிக்கா மற்றும் அமெரிக்கா, கிழக்காசியா மற்றும் பசிபிக், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் தென்னாசியா ஆகிய பிராந்தியங்களுக்கென ஆணைக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்த ஆணைக்குழுக்கள் ஆகக் குறைந்தது வருடத்துக்கு ஒரு முறை கூடுவதுடன், அவற்றில் அப்பிராந்தியத்தைச் சேர்ந்த முழு நிறை உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். பிராந்தியத்தைச் சேர்ந்த இணை உறுப்பினர்கள் அவதானிப்பாளர்களாக பங்கேற்கின்றனர். இத் தாபனத்தின் செயலகம் செயலாளர் நாயகத்தின் தலைமையில் இயங்கி வருவதுடன், இச் செயலகத்தின் பணியாளரும் அதிகாரிகள் உ.சு.தா வின் வேலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கும் உறுப்பினர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் பொறுப்பாக இருந்து வருகின்றனர்.

உ.சு.தா உலகெங்கிலும் இருக்கும் அனைத்து நாடுகளுக்கும் சுற்றுலாத் துறையின் அனுகூலமான நிலைமையினை உச்சப்படுத்திக் கொள்வதற்கும் அதே வேளையில் சுற்றுலாத் துறையின் பாதகமான சமூகச் சூழல் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்கும் உதவி வருகின்றது. அதன் பிரதான பணி அரசாங்கங்கள் சுற்றுலாத் துறை தொடர்பான தமது பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உதவுவதாகும். எனினும், இத்தாபனத்தின் முக்கியமான குறிக்கோள் உலகின் மிகப் பெரிய கைத்தொழிலாக இருந்து வரும் சுற்றுலா மற்றும் பிரயாணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதாகும். நாடுகளுக்கிடையில் சமாதானத்தையும் புரிந்துணர்வையும் போஷித்து வளர்த்து வணிகத்தையும் பொருளாதார அபிவிருத்தி யையும் தூண்டிவிடும் ஒரு பணியை அது மேற்கொண்டு வருகின்றது.

உறுப்பு நாடுகள் தமது போட்டித் திறனை பல்வேறு வழிகளிலும் விருத்தி செய்துகொண்டு சுற்றுலா கைத்தொழிலில் முழுமையாக பங்கேற்பதற்கு இது உதவி வழங்கி வருகின்றது. இத்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை ஆறு பரந்த பிரிவுகளில் வகுக்க முடியும்:

- அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு.
- புள்ளிவிபரங்கள், பொருளாதார பகுப் பாய்வுகள் மற்றும் சந்தை ஆராய்ச்சி.
- சுற்றுச்சூழல் திட்டமிடல் மற்றும் நிதி.
- சுற்றுலா அபிவிருத்தியின் தரம்.
- மனித வள அபிவிருத்தி
- தொடர்பாடல் மற்றும் ஆவணப்படுத்தல்.

அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உசுதா நிதி வசதிகளை பெற்றுக்கொடுத்து உலகின் முன்னணி நிபுணர்களை கண்டறிந்து அனைத்து விதமான சுற்றுலா அபிவிருத்தி செய் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. அது சுற்றுலாத் துறையின் பொருளாதார முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் நிரூபித்து வருவதுடன், சுற்றுலா துறை தொடர்பான மிகவும் விரிவான புள்ளிவிவர தரவுகளையும் தொகுத்து வழங்குகின்றது. உறுப்பு நாடுகளின் வேண்டுகோளின் பேரில் வாடிக்கையாளர் தொகுதிகள் தொடர்பாக புள்ளிவிபர தரவுகளையும் அது வழங்குகின்றது. தொடரான பல வருடாந்த பிரசுரங்களுக்கு ஊடாக சுற்றுலா துறை தொடர்பான புள்ளிவிவரங்களும் பகுப் பாய்வுகளும் எதிர் கூறல்களும் முன்வைக்கப் படுகின்றன.

ஐநா புள்ளிவிபர ஆணைக்குழு 1993 இல் ஏற்றுக்கொண்ட தேசிய கணக்குகள் முறை, தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பான தேசிய கணக்கீட்டின் பகுப்பாய்வுத்திறனை விரிவாக்கும் பொருட்டு ஒரு புதிய கணக்கீட்டு முறையை சிபாரிசு செய்திருந்தது. உசுதா உலகெங்கிலும் இருந்து வரும் பிரதான அமைப்புக்களின் உதவியுடன் தேசிய பொருளாதாரங்களின் மீது சுற்றுலாத் துறை எடுத்து வரும் தாக்கத்தினை அளவிட்டுக் கொள்ளும் பொருட்டு சுற்றுலா கணக்கீட்டு முறையொன்றுக்கான உலகளாவிய நியம மொன்றை இப்பொழுது உருவாக்கி வருகின்றது. சுற்றுலாத்துறை தொடர்பாக இத்தகைய கணக்கீட்டு முறையொன்றை பிரயோகிப்பதன் மூலம் பல அனுகூலங்கள் கிட்டுகின்றன. அது சுற்றலாத் துறை தொடர்பான அனைத்துமடங்கிய தரவுத் தளமொன்றினையும் கட்டியெழுப்புகின்றது.

உசுதா வின் சுற்றுச்சூழல், திட்டமிடல் மற்றும் நிதித் துறை சுற்றுலாத் துறை தொடர்பான புதிய அபிவிருத்திகள் தேசிய மற்றும் கலாச்சார சுற்றாடல்களை பாதுகாக்கும் விதத்தில் பொருத்தமான விதத்தில் திட்டமிடப்பட்டு முகாமை செய்யப்படுவதனை உறுதி கொள்ளும் பொருட்டு உறுப்பு நாடுகளுடனும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடனும் மிகவும் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகின்றது. சுற்றுலா அபிவிருத்தியின் தரம் தொடர்பான உசுதா வின் பிரிவு, உறுப்பு நாடுகள் சுற்றுலா வசதிகளின் தரத்தை விருத்தி செய்து கொள்வதற்கும், உயர் அளவில் போட்டியை விருத்தி செய்து கொள்வதற்கும் இத்துறையில் நிலையான வளர்ச்சியை எடுத்து வருவதற்கும் உதவியை மேற்கொள்கின்றது. சுற்றுலாச் சேவைகளின் வர்த்தகத்தைப் பாதிக்கும் வழிமுறைகள் தொடர்பான ஒரு தரவுத் தளம், சுற்றுலாத் துறைக்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் அமைப்புக்கள் மற்றும் சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட சிறுவர் விபச் சாரத்தை கண்காணிக்கும் செயலணி போன்ற சிறப்புச் சேவைகளை இப்பிரிவு வழங்கி வருகின்றது. மேலும், இத்துறைகள் தொடர்பாக செயற்பட்டு வரும் சர்வதேச குற்றத்தடுப்பு போலிஸ் (இன்டபோல்) உலக சுகாதார நிறுவனம் மற்றும் உலக சுங்க அமைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்க ளுடன் உசுதா வின் ஒத்துழைப்பை எடுத்து வருவதற்கும் இப்பிரிவு பொறுப்பாக இருந்து வருகின்றது. வருங்காலத்தில் சுற்றுலாத் துறையின் தொழில்சார் வல்லுனர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் தேவைகளுக்கு பொருந்தக்கூடிய உயர் தரம் வாய்ந்த கல்வி மற்றும் பயிற்சி என்பவற்றை வழங்குவதே உசுதா வின் மனித வள அபிவிருத்திப் பிரிவின் குறிக்கோளாகும். இப்பிரிவு உறுப்பு நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சுற்றுலாத் துறை அதிகாரிகளுக்கென கல்வியாளர்களுக்கு கல்வியூட்டும் கருத்தரங்குகள், தொலைக்கல்வி பாட நெறிகள் முதலியவற்றை நடத்தி வருகின்றது. சுற்றுலாக் கைத்தொழிலின் முக்கியத்துவம் மற்றும் உலக சுற்றுலாத் தாபனத்தின் பங்குப் பணி என்பன தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டுவதே தொடர்பாடல் பிரிவின் குறிக்கோளாகும். 'WTO News' என்ற பெயரிலான வெளியீட்டுக்கு ஊடாகவும், உலகின் பிரதான சுற்றுலா வர்த்தக சந்தைகளில் பங்கேற்பதற்கூடாகவும் உறுப்பு நாடுகளுடன் தொடர்பாடல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இப்பிரிவு ஒரு வெளியீட்டு நிறுவனமாக இயங்கி வருவதுடன், வருடாந்தம் சுற்றுலாத் துறை தொடர்பாக 20-30 பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்பிரசுரங்களின் விற்பனை யின் மூலம் கிடைக்கும் வருமானங்கள் உசுதா வின் பொது நிதியத்தில் சேர்க்கப் படுகின்றன. மேலும், உசுதா உறுப்பினர் களுக்கும் உறுப்பினரல்லாதவர்களுக்குமென நிரந்தரமான ஆவணப்படுத்தல் நிலைய மொன்றையும் கொண்டுள்ளது. அந்த வகையில் அது சர்வதேச சுற்றுலாத் துறை தொடர்பான தரவுகளை வழங்கும் ஓர் உண்மையான தாபனமாக செயற்பட்டு வருகின்றது எனக் கூறலாம்.

உசுதா 1979 இல் உலக சுற்றுலா தினமொன்றை பிரகடனம் செய்தது. 1980 தொடக்கம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி உலக சுற்றுலா தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என அது தீர்மானித்தது. சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தின் மீதும் அதன் மானிட பொருளாதார மற்றும் கலாச்சார விழுமியங்களின் முக்கியத்துவத்தின் மீதும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒரு நாளாக இது இருந்து வரும். புதிய ஆயிரமாவது ஆண்டின் முதலாவது சுற்றுலாத் தினத்தின் (2000 ஆவது வருடத்தில்) தொனிப்பொருள் "தொழில் நுட்பமும் இயற்கையும் : 21ஆம் நூற்றாண்டின் உதயத்தில் சுற்றுலாத் துறை எதிர்நோக்கி வரும் இரு சவலல்கள்" என்பதாகும்.

உசுதா வின் நிறைவேற்றுக் குழுவின் (1997-2001) ஓர் உறுப்பினராக இலங்கை தெரிவு செய்யப்பட்டது. 1998 இல் நிறைவேற்றுக் குழுவின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு கிடைத்ததுடன், 1999 இலும் அது மீண்டும் தெரிவு செய்யப்பட்டது. நிறைவேற்றுக் குழுவின் தலைமைப் பொறுப்புக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்ட தன் மூலம் உலகெங்கிலும் குறிப்பாக சுற்றுலாத் துறை தொடர்பான ஏனைய அமைப்புக்களுக்கு மத்தியில் இலங்கைக்கு பரவலான பிரபல்யம் கிடைத்தது. இலங்கை இத்தாபனத்தின் ஸ்தாபிதத் துக்கும் வளர்ச்சிக்கும் கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கி வந்தி ருப்பதுடன், அதில் உறுப்புரிமையைப் பெற்றதன் மூலம் பல அநுகூலங்களையும் ஈட்டிக் கொண்டிருந்தது. உசுதா 1999 அக்டோபரில் "இலங்கையின் தென் மேற்கு கரையோரப் பிரதேசங்களில் சுற்றுலாத் துறை தொடர்பான உள்கட்டமைப்புக்களின் அபிவிருத்தி" என்ற பெயரிலான ஒரு தொழில்நுட்ப செய்திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியது. இச்செய்திட்டம் இலங்கையின் தென்மேற்குக் கரையில் அமைந்துள்ள சுற்றுலாப் பிரதேசங்களுக்கென சுற்றுச்சூழல் ரீதியில் ஏற்கத்தக்க, பொருளாதார சாத்திய மான பத்தாண்டுகால உள்கட்டமைப்பு விருத்தி திட்டமொன்றைத் தயாரிக்கும். இலங்கையின் சுற்றுலாத் துறை தொடர்பான பெருந்திட்டத்துக்கும் உசுதா வின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. ஐநா அபிவிருத்தி நிகழ்சித்திட்டத்தின் நிதி உதவியுடன் 1992-2001 பத்தாண்டு காலம் தொடர்பான இத்திட்டம் உசுதா வினால் தயாரிக்கப்பட்டது. அது பௌதீக மற்றும் சமூக, கலாச்சார சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுலாத் துறையில் நிலையான அபிவிருத்தி எடுத்து வரப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத் துறையும் சிறுவர் துஷ்பிரயோகமும்

பேராசிரியர் ஹரேந்திர டி. சில்வா
(தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை)

உலக சுற்றுலாத் துறை 1970 களிலும் 1980 களிலும் மிகவும் துரிதமாக வளர்ச்சி கண்டதனை அடுத்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உலகின் முதன்மையான சுற்றுலா தலங்களுக்கு சிறுவர்களை பாலியல் ரீதியாக பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் பெருந்தொகையில் செல்லத் தொடங்கினார்கள். இக்காலப் பிரிவின் போது சிறுவர் விபச்சாரம், சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் ஒரு முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. பல மேலைய நாடுகளில் 1980 களின் நடுப்பகுதி வரையும் சிறுவர் துஷ்பிரயோகம் மிகவும் முக்கியமான ஒரு சமூகப் பிரச்சினையாக கருதப்பட்டிருக்கவில்லை. அக்கால கட்டத்தில் சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்வது ஓரினச் சேர்க்கைக்கு இணையானதாக கருதப்பட்டு வந்ததுடன், சிறுவர் விபசாரத்தினை ஒரு சாதாரண பாலியல் நடத்தையாக ஏற்கச் செய்வதற்கும் இத்துறையினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் காரணமாக அக்கால கட்டத்தில் இந்நாடுகளில் சிறுவர் பாலியல் சுற்றுலா பகிரங்கமாக விளம்பரப்படுத்தப்பட்டது. நெதர்லாந்து மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் வெளியிடப்பட்ட ஓரினச் சேர்க்கை சுற்றுலா வழிகாட்டிகள் இலங்கை, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளை சுற்றுலாப் பயணிகள் ஓரினச் சேர்க்கை அனுபவத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய நாடுகளென பிரசித்தப்படுத்தின. மேலும், இந்நாடுகளில் சுற்றுலாப் பயணிகள் சிறுவர்களை எவ்வாறு பாலியல் தேவைகளுக்கென பயன்படுத்திக் கொள்ள முடியும் என இவர்கள் எடுத்துக் காட்டினர். ஒரு சில விமானச் சேவைகளையும் உள்ளடக்கிய சில சுற்றுலா முகவரகங்கள் இலங்கையில் சிறுவர் பாலியல் சுற்றுலா தொடர்பான விளம்பரங்களை பகிரங்கமாக மேற்கொண்டு வந்தன.

சிறுவர்களை தமது காம இச்சைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளும் நபர்கள் அடிப்படையில் வெள்ளைக்காரர்களாகவோ அல்லது வெளிநாட்டவர்களாகவோ இருந்து வர வேண்டியதில்லை. கண்டி நீதிமன்றத்தில் 1945 இல் விசாரணைக்கு வந்த கடுகண்ணாவை பார்சல் குண்டு கொலை வழக்கு சிறுவர் விபசாரம் என்ற விடயத்துக்கான ஒரு சிறந்த உதாரணமாகும். எஸ்.எஸ்.ஜயவர்தன என்ற ஒரு வைத்தியர் பார்சல் குண்டொன்றினை உபயோகித்து 14 வயது பாடசாலை மாணவனொருவனை கொலை செய்திருந்தார். (அநேகமாக இத்தகைய ஒரு முறை இலங்கையில் பயன்படுத்தப்பட்ட முதல் தடவையாக இது இருக்கலாம்). இக்குற்றச் செயலுக்கென கண்டி நீதிமன்றம் அந்நபருக்கு மரண தண்டனை விதித்தது. இவர் தனது சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யும் வழக்கம் கொண்டிருந்ததுடன், தனது சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் சிறுவர்களை உல்லாசமாக சவாரி அழைத்துச் செல்வதன் மூலம் தனக்கு வசப்படுத்திக் கொண்டார். அதற்கமைய அவர் அச்சிறுவர்களை தனது காம வலையில் சிக்கவைத்தார். பார்சல் குண்டு மூலம் கொலையுண்ட பிரஸ்தாப சிறுவன் ஆரம்பத்தில் இவ்விதம் ஜயவர்தனவின் வலையில் வீழ்ந்திருந்தான். ஆனால், பின்னர் அவன் ஜயவர்தனவை நிராகரித்தான். 1940 களில் சிறுவர் விபசாரம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பதங்கள் அவ்வளவு பிரபல்யம் பெற்றிருக்கவில்லை. அத்தகைய நடத்தைகள் ஓரினச் சேர்க்கை எனக் கருதப்பட்டு வந்தது. அத்தகைய ஒரு நிலைமையில் பிரஸ்தாப சிறுவன் அதில் ஒரு பங்கேற்பாளனாகவே கருதப்பட்டு வந்தான். அதனால் பாதிக்கப்பட்டவனாக கருதப்படவில்லை.

## இலங்கைச் சமுகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம்

பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள் ஆகியோராக உள்ள சுமார் 800 பேரிடம் முதலில் நாங்கள் அனாமதேய கேள்விக் கொத்தொன்றை வழங்கினோம். அவர்கள் ஆண்களில் 85 மாணவர்கள் (18%) பிள்ளைப் பருவத்திலிருந்து தாம் பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தனர். பெண்களில் 19 பேர் (4.5%) அவ்விதம் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டிருந்தனர். ஆனால், சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த ஒரு விரிவுரையின் பின்னர் கேள்விக் கொத்துக்களை பூர்த்தி செய்த குழுவினரில் 21% ஆண்களும் 11% பெண்களும் தாம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதனை ஏற்றுக்கொண்டனர். ஆண்களில் பெரும்பாலானவர்கள் உறவினர் ஒருவரினால் அல்லது அயலவர் ஒருவரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தனர். சகோதரர்கள், ஆசிரியர்கள் மற்றும் மதகுருமார் போன்றவர்கள் துஷ்பிரயோகங்களை மேற்கொண்ட ஏனைய தரப்பினர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர். வயது வந்த பெண்கள் 13 ஆண்பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்திருந்தனர். ஆனால், பெண்களில் எவருமே தம்மை துஷ்பிரயோகம் செய்தவர்கள் யார் என்பதனை குறிப்பிட்டிருக்கவில்லை. அவர்கள் பெரும்பாலும் நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவரினாலேயே இவ்விதம் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியிருக்க முடியும் என்பதனை இது காட்டுகிறது.

இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் குறித்த ஆய்வுகள் தொடர்பாகவும், கீழ்த்தட்டு சமூகக் குழுவினர் தொடர்பாகவும் மிகவும் பரவலாக இடம்பெற்று வருகின்றது என்பதனை எமது ஆய்வுகள் எடுத்துக் காட்டின. எமது ஆய்வில் ஈடுபடுத்தப்பட்ட மாதிரி பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் பட்டதாரி மாணவர்களுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தமையால் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து உரிய முறையில் கல்வியூட்டப்படும் சந்தர்ப்பங்களில் அநேகமானோர் இத்துஷ்பிரயோகம் குறித்து வெளியிடுவதற்கு முன்வரும் போக்கு உயர் அளவில் இருந்து வருகின்றது என்பதனை எமது ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியது. மேலும், எமது ஆய்வில் இளைஞர்களைப் பொறுத்தவரையில் பாலியல் துஷ்பிரயோகம் அசாதாரணமாக உயர் அளவில் காணப்பட்டது. ஆனால், இவ்வித இச்சைகளை நாடி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளினால் இவர்களில் எவரும் கெடுக்கப்பட்டிருக்க வில்லை. சுற்றுலாத் துறை காரணமாக இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மிகவும் பரவலாக இடம்பெற்று வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தபோதிலும், எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் சுற்றுலாப் பயணிகளால் கெடுக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை வீடுகளில் வைத்து துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது சார்பு ரீதியில் மிகவும் குறைவானதாகவே இருந்து வருகின்றது. சுற்றுலாப் பயணி ஒருவர் ஒரு சிறுவனை அல்லது சிறுமியை துஷ்பிரயோகம் செய்யும பொழுது அது வெளியில் தெரிய வருவதுடன், மக்களும் அதனை அறிந்து கொள்கிறார்கள். ஆனால், வீடுகளில் இடம் பெற்றுவரும் இத்தகைய துஷ்பிரயோகங்களை எவரும் எளிதில் பார்க்க முடியாது. எவ்வாறிருப்பினும், சுற்றுலாப் பயணிகளினால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் பட்டு வரும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்து வந்த போதிலும், வணிக ரீதியிலான பாலியல் துஷ்பிரயோகம் சிறுவர்கள் மீது மிக மோசமான தாக்கங்களை எடுத்து வருகின்றது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும், வக்கிர உணர்வுகளைக் கொண்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வலையில் வீழ்ந்துள்ள சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே உள்ளூர் நபர்களின் இச்சைகளுக்கு இரையாகி இருந்தவர்கள் என்பதனையும், அதனால், அவர்களை வசப்படுத்துவது மிகவும் எளிதானதாக இருந்து வந்துள்ளது என்பதனையும் எமது ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கையில் ஆண்பிள்ளைகள் அதிக அளவில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது ஏன்? பல சமூகக் காரணிகள் இந்நிலைமையை எடுத்து வருகின்றன எனக் கூறலாம். பாரம்பரிய இலங்கைச் சமூகத்தில் திருமணத்தின் போது பெண்ணின் கன்னித் தன்மை தொடர்பாக பெருமளவுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அதன் காரணமாக ஆண் பிள்ளைகளிலும் பார்க்க பெண் பிள்ளைகள் பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டு வருகின்றனர். திருமணத்தின் பின்னர் இரண்டாவது நாள் இடம்பெறும் சடங்குகளின் போது மணமகனின் தாயிடம் இரத்தக் கறை படிந்த ஒரு துணியைக் காட்டுவது இலங்கைச் சமூகத்தின் ஒரு பாரம்பரியமாக இருந்து வந்துள்ளது. (எனினும், இந்த வழக்கம் இப்பொழுது படிப்படியாக சமூகத்திலிருந்து மறைந்து செல்வதுடன், இது மணமகளுக்கு இழைக்கப்படும் ஓர் அவமானமாகவும் கருதப்பட்டு வருகின்றது). இத்தகைய சமூகப் பாரம்பரியங்கள் காரணமாக திருமணத்துக்கு முன்னதாக பாலுறவு பொதுவாக எமது சமூகத்தில் இடம்பெறுவது குறைவாகும். இதன் விளைவாக இளைஞர்களுக்கு தமது பாலுணர்வுகளுக்கான வடிகால்களாக அதிக அளவில் பாதுகாப்பினைப் பெறாமல் இருந்து வரும் சிறிய ஆண் பிள்ளைகளும் பூப்படையாத சிறுமிகளுமே கிடைக்கின்றனர். ஆண் பிள்ளைகள் வர்த்தக ரீதியில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு இரையாகி வருவது (இது சிறுவர் விபச்சாரம் என அழைக்கப் படுகின்றது) 1965 அளவிலேயே - அதாவது சுற்றுலாத் துறையில் பாரிய அளவில் விரிவாக்கம் ஏற்படுவதற்கு முன்னரேயே - பாலியல் ரீதியில் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டு நிகழ்திட்டத்தைச் சேர்ந்தவர்களினால் அறியப்பட்டிருந்தது. மேலைய நாடுகளில் வாழும் மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு சிறுவர்களை எளிதில் பெற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு கிடைப்பதாக இருந்தாலும் கூட அது செலவு கூடியதாகவே இருந்து வரும். ஆனால், இலங்கை, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ரீசேட்டுக்கள், பேனாக்கள் மற்றும் தொப்பிகள் போன்ற பொருட்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றனர். சமூகத்தில் நிலவிவரும் வறுமையே இதற்கான முக்கிய காரணமாகும். இந்தத் தொழிலின் மூலம் சிறுவர்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் குழுக்களும் சுற்றுலா ஏற்பாட்டாளர்களும் பாரிய அளவில் பணம் சம்பாதித்து வரும் அதே வேளையில், இச் சிறுவர்களின் பெற்றோர், ஹோட்டல்களில் வேலை செய்பவர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் போன்ற பரவலான பிரிவினரும் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர். சிறுவர்களுக்கு அநேகமாக இதன் மூலம் பணம் கிடைப்பதில்லை. ஒரு சிலர் "ஆண் பிள்ளைகள் கர்ப்பமடையப் போவதில்லை" எனக் கூறியோ அல்லது "கப்பல்கள் நீரில் அடையாளங்களை விட்டுச் செல்வதில்லை" எனக் கூறியோ இன்றும் கூட சிறுவர் விபச்சாரத்தினை நியாயப்படுத்த முயன்று வருகின்றனர். ஆனால், இதன் மூலம் நீண்ட கால ரீதியில் ஏற்படக் கூடிய உளவியல் தாக்கங்களை இவர்கள் உணர்வதில்லை. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் பின் விளைவுகள் அச்சிறுவர்களின் பிற்கால வாழ்க்கையில் பல்வேறுபட்ட உளவியல் ரீதியான ஒழுங்கீனங்களை எடுத்து வருகின்றன. சிறு வயதில் இவ்விதமான வக்கிரங்களுக்கு உள்ளாக்கப்படும் சிறுவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பின்னர் ஒழுக்கக் கேடு, விபச்சாரம், ஓரினச் சேர்க்கை போன்ற மனப் போக்குகளை காட்டுவதுடன், சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வேலையிலும் ஈடுபடுகின்றனர். இத்தகைய தாக்கங்கள் தனிநபரைப் பொறுத்தவரையிலும் சமூகத்தைப் பொறுத்த வரையிலும் பெருமளவுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவையாக இருந்து வருகின்றன. இது ஒரு விஷச் சுழலை உருவாக்குகின்றது. அதாவது, சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் பட்டிருப்பவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பின்னர் தாமும் அவ்விதம் சிறுவர்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களாக இருந்து வருகின்றனர். ஆனால், சிறு வயதில் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டிருந்த அனைவரும் பிற்கால வாழ்வில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களாக இருப்பதில்லை. சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வரும் சுமார் 70 சத வீதத்தினர் சிறுவர்களாக இருந்தபொழுது தாமும் அவ்விதம் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களாக இருந்து வந்துள்ளனர் என்பதனை எமது ஆய்வு எடுத்துக் காட்டியது.

விபச்சாரத்தில் ஈடுபட்டு வரும் சிறுவர்களும் இக்குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்து வருவதாக கருதப்படுகின்றது. ஏனெனில், சிறுவர் விபச்சாரிகள் என்ற முறையில் அவர்களும் இதற்கான பொறுப்பினை ஓரளவுக்கு ஏற்க வேண்டும் என கூறப்படுகின்றது. இக்குற்றச் செயலில் பங்கேற்கும் ஒருவர் என்ற முறையில் சிறுவர்களுக்கு அதற்கான பொறுப்பு இருந்து வருவதில்லை. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வரைவிலக்கணம் அதனை தெளிவுபடுத்துகின்றது: "தாம் விளங்கிக் கொள்ளாத அல்லது தமது பூரண சம்மதத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்காத பாலியல் ரீதியிலான நடவடிக்கைகளில் சிறுவர்களை அல்லது வளரிளம் பருவத்தினரை ஈடுபடுத்துதல்". இதன் காரணமாக இச்சிறுவர்கள் "பாலியல் ரீதியில் சுரண்டப்பட்ட சிறுவர்கள்" என அழைக்கப்பட்டு வருகின்றனர். சர்வதேச தொழில் தாபனம் இதனை சிறுவர் உழைப்பு தொடர்பான மிகவும் அபாயகர மான ஒரு வடிவமாக வகைப்படுத்தி யுள்ளது.

இலங்கையில் சிறுவர்கள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான ஆவணங்களை முதன்முதலில் அரசு சாரா அமைப்புக்களைச் சேர்ந்தவர் களும் சமூகவியலாளர்களும் தயாரித்தனர். அத்தகைய அறிக்கைகள் தொழில்சார் ரீதியிலான கூட்டங்களில் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்டு வந்தன. ஆனால், இவை அனைத்தும் சிறந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவை தவிர மருத்துவத் துறை தொடர்பான எழுத்தாக்கங்களில் இப்பிரச்சினை தொடர்பான எத்தகைய ஆவணங்களும் இருந்து வரவில்லை. டிப்பென்ட் என்பவர் (1980) விரிவான முறையில் ஆவணப் படுத்தலைக் கொண்டிருந்த அறிக்கை யொன்றை தயாரித்தார். இவ்வறிக்கை மலிவான சிறுவர் விபச்சாரத்துக்கான மூலமொன்று என்ற முறையில் இலங்கை பிலிப்பைன்சுக்கு மட்டும் இரண்டாவதாக இருந்து வருவதாக சுட்டிக் காட்டியது. இது எட்டு வயது தொடக்கம் ஆண் பிள்ளைகளுக்கு நிலவி வரும் கிராக்கியை எடுத்துக் காட்டியதுடன் வறுமை, அநாதை நிலை மற்றும் சீர்குலைந்த குடும்ப வாழ்க்கை முதலிய காரணிகள் இதற்கு பங்களிப்புச் செய்து வருவதாக குறிப்பிட் டிருந்தது. இலங்கையில் 1980 இல் சுமார் 2000 சிறுவர்கள் வணிக ரீதியில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட் டிருப்பதாக டிப்பென்ட் மதிப்பிட்டுள்ளார். சிறுவர் விபச்சாரம் மிகவும் தீவிரமான உணர்திறன் கொண்ட ஒரு பிரச்சினையாக இருந்து வருவதாகவும், அது சுற்றுலாத் துறையின் மீது பாதகமான தாக்கத்தை எடுத்து வர முடியும் என்றும் அக்காலப் பிரிவில் அதிகாரிகள் கருதினர் (செனவிரத்ன, 1997). எவ்வாறிருப்பினும், யுனிசெப் அமைப்பு மற்றும் சர்வோதய போன்ற பல அரசு சாரா அமைப்புக்களிட மிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் வந்த அழுத்தங்கள் காரணமாக அரசாங்கம் 1987 இல் "இள வயதுப் பிரிவினர் ஒழுக்கக் கேடான நோக்கங்களுக்காக சுரண்டப் படுவதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் சட்டம்" என்ற பெயரில் ஒரு சட்டத்தை சமரப்பித்தது. இந்தச் சட்ட நகலுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த போதிலும், அது அச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இச்சட்டம் இன்றைய கால கட்டத்துக்கு பொருத்தமானதல்ல என சுற்றுலாத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் கருதியமையே இதற்கான காரணமாகும். நாட்டில் இடம்பெற்று வந்த கலவர நிலைமைகள் காரணமாக சுற்றுலாத் துறையில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சியை எடுத்துக் காட்டி அவர் தனது முடிவை நியாயப் படுத்தினார். வணிக ரீதியில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு வரும் எண்ணிக்கை தொடர்பாக பல்வேறு அரசு சாரா அமைப்புக்களும் பல்வேறு விதமான புள்ளிவிபர தரவுகளை முன்வைத்துள்ளன. ஆகக் கூடிய அளவில் சுமார் 30,000 சிறுவர்கள் இவ்விதம் சுரண்டப்பட்டு வருவதாக ஒரு சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

சிறுவர்களை தமது இச்சைகளுக்காக பயன் படுத்திக் கொள்ளும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நபர்கள் எப்பொழுதும் நீண்ட தலைமயிரையும் தாடியையும் கொண்ட அசிங்கமான நபர்களாக இருந்துவருவ தில்லை. நல்ல கவர்ச்சியான தோற்றம் கொண்ட பெருமளவுக்கு உதவும் மனப்பான்மை கொண்ட நபர்களாகவும் அவர்கள் இருந்து வர முடியும். எளிதில் சிறுவர்களை சந்திக்கக் கூடிய தொழில் துறைகளில் அத்தகைய நபர்கள் வேலைவாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆசிரியர்கள், அனாதை இல்ல காப்பாளர்கள், சிறுவர் விடுதி ஊழியர்கள், பாடசாலை வேன் அல்லது பஸ் சாரதிகள் போன்ற தொழில்களை உதாரணமாக குறிப்பிடலாம். ஆனால், இங்கு முக்கியமான ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூற வேண்டும். அதாவது, இத்தகைய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் நபர்களாக இருந்து வரவில்லை. அவர்களில் ஒரு சிறு விகிதத்தினர் மட்டுமே சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வெளிநாட்டவர்கள் கையாளும மற்றொரு தந்திரம் இங்குள்ள விதவைகளை அல்லது விவாக ரத்து செய்திருக்கின்ற பெண்களை சட்டபூர்வமாக திருமணம் செய்து, சமூக ரீதியில் மதிக்கத்தக்க ஒரு நபர் என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதாகும். அந்நிலையில் அவர்கள் சிறுவர்களை மிக உளிதில் அணுக வாய்ப்புக் கிடைக்கின்றது. இப் பெண்களுக்கு 'மனைவி' என்ற அந்தஸ்தில் இருப்பதற்காக பெரும்பாலும் ஒரு சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆனால், இலங்கைப் பெண்களை மணம் முடித்திருக்கும் ஒவ்வொரு வெளிநாட்டவரையும் இந்த கண்ணோட்டத்தில் நாங்கள் நோக்கக் கூடாது என்ற விடயத்தையும் இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது. சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வெளிநாட்டவர் கள் பொதுவாக பெருமளவுக்கு உதவி செய்பவர்களாகவும் இருந்து வருகின்றனர். அவர்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் வாழும் பெருந்தொகையான மக்களுக்கும் தொழில்சார் வல்லுனர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள். இதன் காரணமாக இவர்கள் தமக்கு கிடைக்கும் குறுங்கால ஆதாயத்தை இழக்க வேண்டி நேரிடும் என்ற அச்சத்தில் இத்தகைய முறைகேடான நடவடிக்கைகள் குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரிவிப்பதற்கு அல்லது நடவடிக்கை மேற்கொள்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். மேலும், இந்த வெளிநாட்டு நபர்கள் பிள்ளைகளுக்கு உணவு, உடை மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றை வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு பெருமளவுக்கு உதவி வருகின்றனர். இத்தகைய உதவி இல்லாதிருந்தால் இச் சிறுவர்கள் இவற்றை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்க மாட்டாது. இச்சிறுவர்களின் பெற்றோ ருக்கும் இந்நபர்களால் பண உதவியும் பொருள் உதவியும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த உதவியைப் பயன்படுத்தி அவர்கள் வீடுகளை கட்டலாம், அல்லது புதுப்பிக்கலாம். சிறுவர்களுக்கான வெளிநாட்டு பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுவதுடன், ஒரு சில சிறுவர்கள் தத்தெடுத்தல் என்ற போர்வையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப் படுகின்றனர். ஒரு சில நபர்கள் அரசு சாரா அமைப்புக்கள், அனாதை இல்லங்கள் மற்றும் மருத்துவ செய்திட்டங்கள் முதலிய அமைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் சமூக சேவை நடவடிக்கைளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், பெருந்தொகை யான வெளிநாட்டவர்கள் உண்மையிலேயே பரோபகாரிகளாக இருந்து வருவதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வாழும் வறிய குடும்பங்களுக்கு பலவிதமான உதவிகளையும் வழங்கி வருகின்றனர். சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வெளிநாட்டு நபர்கள் தமது சொந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு வருமான உருவாக்க செய்திட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கைக்கு தற்காலிகமாக விஜயம் செய்யும வெளி நாட்டவர்களுக்கு சிறுவர்களை வழங்கும் சிறுவர் விபச்சாரக் கும்பல்களுடன் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம். மேலும், சிறுவர்களை அல்லது வயது வந்தவர் களை வைத்து ஆபாசப் படங்களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளிலும் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்க முடியும். இலங்கையில் மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் ஆபாசப் படங்களை சிறுவர் விபச்சார தொழிலில் ஈடுபட்டிருக்கும் கும்பல்க ளிடையே பல ஆயிரக்கணக்கான ரூபாவுக்கு விற்பனை செய்யலாம்.

இலங்கையில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யும் வெளிநாட்டவர்கள் தொடர்பான செய்திகளும் அவர்களுக்கெதிரான நீதிமன்ற நடிவக்கைகளும் அண்மைக் காலத்தில் பெருமளவுக்கு அதிகரித்து வந்துள்ளன. ஒரு சுவிஸ் பிரஜை மீதும் ஒரு ஜேர்மனி பிரஜை மீதும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு அவர்கள் (பழைய சட்டத்தின் கீழ்) இலங்கைச் சிறைச் சாலைகளில் தலா 18 மாத தண்டனையை அனுபவித்தனர். 1995 இல் தண்டனைச் சட்டக் கோவைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் கீழ் சிறுவர் விபச்சாரத்திற்கான குறைந்த பட்ச தண்டனை 10 வருட சிறைவாசமாகும். அண்மையில் ஒரு நோர்வே பிரஜை இலங்கையில் இக்குற்றத்துக்கென 14 வருட சிறைத் தண்டனையைப் பெற்றார். இலங்கையில் இழைக்கப்பட்ட இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பாக சுவிட்சர்லாந்தில் இரு நபர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட்டு ஒருவருக்கு 4 வருட சிறைத் தண்டனையும் மற்றவருக்கு 6 வருட சிறைத் தண்டனையும் வழங்கப் பட்டது. இவை அனைத்தும் சிறுவர்கள் வணிக ரீதியான பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதனை தடுக்கும் பொருட்டு நாடுகளுக்கு இடையில் இடம் பெற்றுவரும் ஒத்துழைப்பை எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை அரசாங்கத் துக்கும் அரசுசாரா அமைப்புக்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு இல்லாதிருந் திருக்குமானால் இத்தகைய வழக்குகள் சாத்தியமாகியிருக்க முடியாது. குற்றஞ் சாட்டப்பட்டு பிணையில் இருக்கும் பொழுது நாட்டிலிருந்து தப்பிச் சென்று சுவிட்சர்லாந்தில் வசித்து வருவதாக கருதப்படும் ஒரு நபருக்கு அந்நாட்டில் சிறைத் தண்டனையை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெளிநாட்டு அமைச்சுக்கு ஊடாக சுவிஸ் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது சர்வதேச சிறுவர் விபச்சாரக் கும்பல்களிடையே எச்சரிக்கை உணர்வை தூண்டி விட்டுள்ளது. அவர்கள் வெளியிடும் ஸ்பாடகஸ் என்ற சஞ்சிகை (1995-96 - 24 ஆவது பதிப்பு) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "ஆண்களுக் கிடையிலான ஓரினச் சேர்க்கை நடவடிக்கைகள் அவர்களுடைய வயது என்னவாக இருந்தாலும் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 365 மற்றும் 365 அ என்பவற்றினால் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான தண்டனை 10 வருடம் வரையிலான சிறைவாசமாகும். இது தொடர்பான சட்டங்கள் சமீப காலம் வரையில் மிகவும் அரிதாகவே அமுல் செய்யப்பட்டு வந்துள்ளன. ஆனால், இப்பொழுது அவை அடிக்கடி பிரயோகிக்கப்பட்டு வருவதுடன், இது தொடர்பாக நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் தீவிரமாக அதிகரித்து வருகின்றது''. மேலைய நாடுகளிலிருந்து செல்லும் ஓரினச் சேர்க்கைப் பிரியர்களான சுற்றுலாப் பயணிகள் மற்றும் இருபால் புணர்ச்சி சுற்றுலா பயணிகள் ஆகியோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வரும் தீவிர அதிகரிப்பின் விளைவாகவே இந்நிலைமை தோன்றியுள்ளது. இலங்கையில் ஓரினச் சேர்க்கை ஓர் குற்றச் செயலாக இருந்து வந்த போதிலும், இதுவரையில் சம்மதம் தெரிவிக்கும் வயது வந்த நபரொருவருடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட எந்தவொரு வெளிநாட்டவருக்கெதிராகவும் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தையும் வலியுறுத்துவது அவசிய மாகும். எனவே, இந்த சஞ்சிகை சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யும் நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளையே இங்கு குறிப்பிடுகின்றது என்பது தெளிவாகும். சர்வதேச ஓரினச் சேர்க்கை வழிகாட்டுதல் அமைப்பின் மிகப் பிந்திய வெளியீடு இலங்கை குறித்த ஒரு பகுதியைக் கொண்டிருக்கவில்லை. இது இந்த வகையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது குறைந்து வருவதனையே சுட்டிக் காட்டுகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப் பட்டு வரும் நீதிமன்ற நடவடிக்கைகளின் தாக்கம் இந்நிலைமைக்கு வழிகோலியிருக்க முடியும்.

சிறுவர் விபச்சாரத்துடன் சம்பந்தப்பட்ட சுற்றுலாத் துறை இலங்கையை அச்சுறுத்தி வந்த ஒரு முக்கிய பிரச்சினையாகவும் சுற்றுலா துறைக்கு அபகீர்த்தியை எடுத்து வந்த ஒரு பிரச்சினையாகவும் இருந்து வந்துள்ள போதிலும், அண்மைக் காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் குறைவடைந்து வரும் ஒரு போக்கு தோன்றியிருப்பதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையிலும் அதேபோல ஒத்துழைப்பு வழங்கும் வெளிநாடுகளிலும் இத்தகைய நபர்களுக் கெதிராக மிகவும் தீவிரமான விதத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது இதற்கு பங்களிப்பு செய்திருக்க முடியும். அதிகாரிகள் முன்னர் இந்த விடயம் குறித்து பேசுவதனை தவிர்த்து வந்ததுடன், அவ்விதம் பேசுவது இலங்கையின் சுற்றுலாத் துறையின் மீது பாதகமான தாக்கங்களை எடுத்து வரும் என்றும் அச்சம் தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்களுடைய இந்தத் தயக்கம் பெரும் சேதத்தை விளைவித்திருப்பதுடன், இலங்கையின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்களை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் செய்பவர்களை மட்டுமன்றி அவர்களுக்கு அனுசரணை வழங்கும் கும்பல்களையும் கண்காணித்து கைது செய்யும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் உதவி வழங்குவது மிக முக்கியமாகும். மேலும், வீடுகளில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படும் பிரச்சினையை கவனத்தில் எடுப்பதும், சுற்றுலாத் துறை நடவடிக்கைகள் பரவலாக இடம்பெற்று வரும் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சிறுவர்களுக்கான கல்வி வசதிகளை விருத்தி செய்து இடையில் பள்ளிக் கல்வியை விட்டுச்செல்பவர்களுக்கான தொழில் பயிற்சி வசதிகளை வழங்குவதன் மூலமும் இவர்கள் தவறான வழியில் செல்லாமல் தடுத்துக் கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில்: தற்போதைய போக்குகளும் பொருளாதாரத்துக்கான பங்களிப்பும்

டப். கே. அதுல குமார
எம். எஸ். எம். அஸ்லம்
(சப்ரகமுவ பல்கலைக்கழகம்)

இலங்கை இந்தியாவுக்கு அருகே அமைந்திருக்கும் வெப்ப வலயத்தைச் சேர்ந்த ஒரு சிறிய தீவாக இருந்து வருவதுடன், அது எண்ணற்ற பல கவர்ச்சிகரமானவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் மொத்த நிலப்பரப்பு 65,610 சதுர கிலோ மீட்டர்களாகும். இலங்கை கண்ணைக் கவரும் கடற்கரைகளையும், பசுமைப் போர்வைகளையும், புராதன மலைகளையும் அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்கக்கூடிய எண்ணற்ற பல கவர்ச்சி அம்சங்களையும் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது. அது கலாச்சாரம், வழக்காறுகள் என்பவற்றைக் கொண்ட ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், இலங்கை மக்களின் விருந்தோம்பல் பண்பு தனித்துப் பிரபல்யம் பெற்றிருக்கின்றது. இங்கு வாழும் மக்கள் நட்புணர்வுடன் கூடிய முகத்தில் புன்னகை பூக்கும் மக்களாக நன்கு அறியப்பட்டுள்ளனர். எனவே, இலங்கை பன்னெடுங்காலமாக வெளிநாட்டவர்களை தன்பால் கவர்ந்திழுத்து வந்துள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் சுற்றுலாக் கைத்தொழில் ஒரு புதிய கருதுகோளாக இருந்து வரவில்லை. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டும் கிழக்கத்தைய மற்றும் மேற்கத்தைய நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பயணங்களில் இலங்கை அமைந்திருக்கின்றது. பொருட்கள் சேவைகளின் வெளிநாட்டு வணிகர்கள் இலங்கையினூடாக பயணம் மேற்கொண்டனர். இலங்கையினூடாக சர்வதேச வர்த்தக இணைப்புக்கள் இடம்பெற்று வந்துள்ளன என்பதற்கான ஆதாரங்களும் காணப்பட்டு வருகின்றன. எவ்வாறிருப்பினும், 1930 களிலேயே சர்வதேச சுற்றுலாத் துறை உரிய அங்கீகாரத்தைப் பெற்றது. இலங்கை சுற்றுலா பணியகம் 1935 இல் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், இலங்கையில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதுடன் சம்பந்தப்பட்ட அதன் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டவையாகவே இருந்து வந்தன. 1960 களின் பின்னர் உலகெங்கிலும் சுற்றுலாக் கைத்தொழிலில் ஓர் எழுச்சி ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் இலங்கை அரசாங்கம் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தையும் குறிப்பாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அது வழங்கக்கூடிய பங்களிப்பையும் உணரத் தொடங்கியது. 1965 ஆண்டில் சுற்றுலாத் துறை இலங்கையில் அதிகாரபூர்வமாக ஒரு முக்கிய துறையாக உருவெடுத்திருந்தது. பொதுவாக 1965 ஆம் ஆண்டே இலங்கையில் நவீன சுற்றுலாத் துறை தோன்றிய வருடமாக கருதப்பட்டு வருகின்றது. அவ்வாண்டிலேயே சுற்றுலாத் துறையை மேம்படுத்தி அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் இலங்கை சுற்றுலா சபை ஸ்தாபிக்கப்பட்டது.

அதன் பின்னர் சுற்றுலாத் துறை இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரத் துறையாக எழுச்சி கண்டது. இலங்கை சுற்றுலா சபை தயாரித்துள்ள சுற்றுலாத் துறை தொடர்பான பத்தாண்டு கால (1992-2001) பெருந்திட்டம் பின்வரும் குறிக்கோள்களையும் இலக்குகளையும் சாதித்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது:

1. 2001 இல் விமானச் சேவைகள் மூலம் ஆகக் கூடிய அளவில் 874,000 சர்வதேச சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்த்து வருதல். இது 1991 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் (317,000) பார்க்க 175 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

2. சுற்றுலாப் பயணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினை (பயணச்செலவு நீங்கி) மெய் நியதிகளில் இரட்டிப்பாக (43 அமெரிக்க டொலர்களிலிருந்து 2001 இல் 84 அ.டொ. களாக) அதிகரித்தல்.

3. சுற்றுலாத் துறை மூலமான அந்நியச் செலாவணி வருமானங்களில் 350 சதவீத அதிகரிப்பினை (மெய் நியதிகளில்) எய்தி வருதல். அதாவது, 1991 இல் 156 மில்லியன் அ.டொ. களாக இருந்து வந்த வருமானங்களை 2001 இல் 706 மில்லியன் அ.டொ. களாக அதிகரித்தல். இந்த அதிகரிப்பில் 70 சதவீதம் நாட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ளப்படுவதுடன் அது ஏனைய துறைகளின் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கு உதவும்.

4. ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை 1997 இல் 9629 அறைகளாக இருந்து 2001 இல் 18,952 அறைகளாக இரண்டு மடங்கினால் அதிகரித்துக் கொள்ளல்.

5. சுற்றுலாத் துறையில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கையில் 155 சதவீத அதிகரிப்பினை எய்தி வருதல். அதாவது, இந்த எண்ணிக்கையை 1990 இல் 54,000 ஆக இருந்து 2001 இல் 136,000 ஆக அதிகரித்துக் கொள்ளல்.

6. அரசாங்க வரவு செலவுத் திட்டத்துக்கான சுற்றுலாத் துறையின் நேரடி பங்களிப்பில் 500 சதவீத மெய் அதிகரிப்பொன்றினை எய்தி வருதல். இது 1990 இல் ரூ.983 மில்லியனாக இருந்து வந்தது. 2001 இல் ரூ.5,171 மில்லியனாக அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

சுற்றுலாத் துறை தொடர்பான அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் 1966 இல் இலங்கை சுற்றுலா சபை ஸ்தாபிக்கப்பட்டதனை அடுத்து ஒன்றன் பின் ஒன்றாக பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இத்துறையை முன்னேற்றுவதற்கென பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டு வந்துள்ளன. சுற்றுலாத் துறையின் ஒட்டுமொத்த செயற்பாடு, அபிவிருத்தி மற்றும் அதன் மூலம் பொருளாதாரத்துக்கு வழங்கப்பட்டு வரும் பங்களிப்பு ஆகியவற்றை எளிதில் இனங்கண்டு கொள்ள முடியும். எனினும், மாலைதீவு, கென்யா போன்ற நாடுகளில் சுற்றுலாத் துறையில் ஏற்பட்டு வந்திருக்கும் அபிவிருத்தியுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இத்துறையில் இலங்கை எய்தியிருக்கும் அபிவிருத்தி மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வேறு சில நாடுகள் இத்துறையில் இலங்கையைப் பார்க்கிலும் சிறந்த செயலாற்றுகையைக் காட்டி வருகின்றன. உள்நாட்டு நெருக்கடி, சந்தைப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் குறைபாடுகள் மற்றும் நாட்டின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கம் முதலிய காரணிகளால் இலங்கையில் சுற்றுலாத் துறை அபிவிருத்தி பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. எனினும், பெருந்திட்டத்தின் அமுலாக்கத்தினை அடுத்து இவற்றில் ஒரு சில குறைபாடுகள் நிவர்த்தி செய்து வைக்கப்பட்டன. குறிப்பாக 1995 இன் பின்னர் சுற்றுலாக் கைத்தொழில் துறை இப்பெருந்திட்டத்தில் முழுமையாக கவனம் செலுத்தியதுடன், இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுத்து அதன் மூலம் வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் பொருட்டு பல மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1966 இல் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 18,959 ஆகும். இது 1970 இல் 46,247 ஆக அதிகரித்திருந்ததுடன், 1971 இல் 36,654 ஆக வீழ்ச்சி கண்டிருந்தது. பிரதானமாக நாட்டில் ஏற்பட்ட இளைஞர் கலவரம் மற்றும் உலக பொருளாதார மந்தம் என்பன இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருந்தன. 1973 இல் மீண்டும் சகஜ நிலை தோன்றியதை அடுத்து சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இந்த ஏறுமுகமான போக்கு தொடர்ந்தும் நிலவி வந்ததுடன், 1982 இல் பயணிகளின் எண்ணிக்கை 407,230 ஆக அதிகரித்திருந்தது. இவ்வாண்டின் போது சுற்றுலா கைத்தொழில் துறை மிகச் சிறந்த செயலாற்றுகையை பெற்றிருந்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக நாட்டில் 1983 இல் இடம்பெற்ற உள்நாட்டு கலவரங்களின் விளைவாக சுற்றுலாத் துறை மிகக் கடுமையான பின்னடைவை எதிர்கொண்டதுடன், இப் பின்னடைவு நிலை 1989 வரையில் நீடித்தது. அதன் பின்னர், சுற்றுலா பயணிகளின் வருகையில் சகஜ நிலை தோன்றியதுடன், பயணிகளின் எண்ணிக்கை யில் படிப்படியாக அதிகரிப்பு ஏற்பட்டு வந்தது. 1994 இல் அதி உச்ச மட்டமாக 407,511 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்தனர். 1996 இல் பயணிகள் எண்ணிக்கையில் மீண்டும் வீழ்ச்சி ஏற்பட்டு அது 302,265 என்ற மட்டத்தை எட்டியது. சுற்றுலாத் துறை தொடர்பான பெருந்திட்டம் தோல்வி அடையப் போகின்றது என்ற பொதுவான ஒரு உணர்வு நிலவி வந்தது. ஆனால், அதிர்ஷ்டவசமாக சுற்றுலாத் துறை அமைச்சு மீளமைப்பு செய்யப்பட்டு, விவேகபூர்வமான சுற்றுலா கொள்கைகள் பின்பற்றப்படுவதனை அடுத்து நிலைமையில் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டது. இதனை அடுத்து 1999 இல் பயணிகள் எண்ணிக்கை 436,440 ஆக அதிகரித்தது. பெருந்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள இலக்குகளை குறித்த காலப் பிரிவுக்குள் நிறைவேற்றிக் கொள்வது சாத்தியமில்லாது போனாலும் கூட, 1998-99 காலப்பிரிவின் போது பயணிகள் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனை இப்போக்கு காட்டுகின்றது. இது தொடர்ந்து நிலவி வருமானால் 7 அல்லது 8 வருட காலப் பிரிவுக்குள் இத்துறை தொடர்பாக திட்டமிடப்பட்டிருக்கும இலக்குகளை சாதித்துக் கொள்ள முடியும்.

| வருடம் | இலங்கைக்கு வந்த சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை |
|---|---|
| 1966 | 18 969 |
| 1967 | 23 666 |
| 1968 | 28 272 |
| 1969 | 40 204 |
| 1970 | 46 247 |
| 1971 | 39 654 |
| 1972 | 56 047 |
| 1973 | 77 888 |
| 1974 | 85 011 |
| 1975 | 103 204 |
| 1976 | 110 971 |
| 1977 | 153 665 |
| 1978 | 192 592 |
| 1979 | 250 164 |
| 1980 | 321 780 |
| 1981 | 370 742 |
| 1982 | 470 230 |
| 1983 | 337 530 |
| 1984 | 317 734 |
| 1985 | 257 456 |
| 1986 | 230 106 |
| 1987 | 182 620 |
| 1988 | 182 662 |
| 1989 | 184 732 |
| 1990 | 297 888 |
| 1991 | 317 703 |
| 1992 | 393 669 |
| 1993 | 392 250 |
| 1994 | 407 511 |
| 1995 | 403 101 |
| 1996 | 302 225 |
| 1997 | 366 165 |
| 1998 | 381 063 |
| 1999 | 436 440 |

சந்தைப் போக்குகள் தொடர்பான ஒரு பகுப்பாய்வு சுற்றுலாத் துறை செயல் முனைப்பு மிகுந்த, சிக்கல் மிக்க சூழலொன்றுக்குள் இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. எனவே, இச்சந்தைப் போக்கு போட்டியாளர்களின் மேம்பாட்டு உத்திகள், நாட்டின் வருமான உருவாக்கம், வாழ்க்கை நிலைமைகளுடன் சம்பந்தப்பட்ட ஏனைய காரணிகளில் ஏற்படும் தளம்பல் நிலை, சுற்றுலாப் பயணிகள் புறப்படும் நாடுகள் மற்றும் வந்து சேரும் நாடுகள் என்பவற்றில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றம், மேம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்தல் செலவுகள் போன்ற பல்வேறு காரணிகளினாலும் மாற்றம் கண்டு வருகின்றது. இக்காரணிகளே இலங்கை சுற்றுலா கைத்தொழிலின் வளர்ச்சியை நிர்ணயிப்பதாக இருந்து வருகின்றன. இலங்கைக்கான சுற்றுலா பயணிகளின் சந்தை மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது. அவையாவன:

***ஆரம்ப சந்தை*** : ஜெர்மனி, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஜப்பான் மற்றும் இந்தியா.

***இரண்டாம் நிலைச் சந்தை*** : இத்தாலி, நெதர்லாந்து, ஸ்கன்டிநேவியா, அவுஸ்திரியா, சுவிட்சர்லாந்து, தென் கொரியா, தாய்வான், ஹொங்ஹொங், தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் மாலை தீவுகள்.

சந்தர்ப்ப சந்தைகள் : ஸ்பெயின், கிரீஸ், கிழக்கைரோப்பா, மலேசியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், ஐக்கிய அமெரிக்கா, கனடா, மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யா.

இலங்கைக்கு முதன்மையாக சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் ஆரம்பச் சந்தையைச் சேர்ந்த நாடுகளிலிருந்து கணிசமான அளவில் பயணிகள் வருகின்றனர். இலங்கை சுற்றுலா சபை சிறந்த சந்தைப்படுத்தல் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டால் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியப்பாட்டினை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்பு எமக்குக் கிட்டும். சந்தர்ப்ப சந்தைத் தொகுதியைச் சேர்ந்த நாடுகளிலும் வருங்காலத்தில் நாங்கள் சுற்றுலாச் சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும். ஆனால், நிதி வளங்களின் பற்றாக்குறை யின் காரணமாக போதிய அளவில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள் ளப்பட்டு வரவில்லை. இந்த சந்தைப் பிரிவுகளைச் சேர்ந்த நாடுகளில் 1995 வரையில் ஜேர்மனியே எமது முதன்மை யான சந்தையாக இருந்து வந்தது. ஆனால், அதன் பின்னர் ஐக்கிய இராச்சியம் முதன்மை ஸ்தானத்தை கைப்பற்றிக் கொண்டது. சந்தையில் இவ்விதம் தளம்பல் நிலை ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய்திருக்க முடியும். 1999 இல் ஜேர்மனி சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் மீண்டும் ஒரு முறை அதிகரிப்பு ஏற்பட்டிருந்து.

சுற்றுலா பயணிகளின் வருகைப் போக்கின் மீது செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு முக்கியமான காரணி சுற்றுலா பயணங் களின் நோக்கமாகும். ஆரம்பத்தில் கடற்கரைகளும் கரையோரப் பிரதேசங் களுமே சுற்றுலா பயணிகளுக்கான பிரதான கவர்ச்சி மையங்களாக இருந்து வந்தன. அண்மைக் காலத்தில் சுற்றுலாத் துறை தொடர்பான சேவைகளை பன்முகப் படுத்தும் ஒரு போக்கு தோன்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பயணிகள் வருகை - நாடு அடிப்படையில் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
| ஜேர்மனி | 65,226 | 85,443 | 95,430 | 93,528 | 79,798 | 45,075 | 45,075 | 59,816 | 74,058 |
| ஐக்கிய இராச்சியம் | 31,011 | 34,602 | 42,474 | 47,766 | 63,552 | 52,095 | 62,997 | 66,432 | 80,919 |
| இத்தாலி | 18,897 | 25,575 | 18,267 | 18,069 | 18,378 | 11,988 | 14,424 | 15,867 | 19,815 |
| பிரான்ஸ் | 36,801 | 40,227 | 34,779 | 30,522 | 30,996 | 21,480 | 25,392 | 26,874 | 34,458 |
| இந்தியா | 20,352 | 25,944 | 32,433 | 44,142 | 47,488 | 42,822 | 47,010 | 37,356 | 42,315 |
| ஜப்பான் | 23,403 | 28,797 | 20,421 | 19,497 | 18,180 | 11,724 | 13,374 | 13,785 | 16,332 |
| நெதர்லாந்து | 11,244 | 17,541 | 15,387 | 12,219 | 14,274 | 10,995 | 15,957 | 22,977 | 29,670 |

அதாவது, உயிரினவியல் சூழல் சுற்றுலா, சாகச சுற்றுலா, விளையாட்டுகள், ஆயுர்வேத சிகிச்சை முறை மற்றும் கலாச்சாரம் போன்ற கூறுகள் இப்பொழுது முக்கியத்துவம் பெற்று வருகின்றன. அண்மைக் காலத்தில் இயற்கையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா தொடர்பாக உயர் அளவில் கிராக்கி தோன்றியுள்ளது. இலங்கையில் அபரிமிதமான வெப்பவலய மழைக் காடுகளும் சிங்கராஜ வனம் போன்ற எமது இயற்கை மரபுரிமைகளும் இருந்து வருவதனால் சந்தையின் இப்பிரிவினரை கவர்ந்திழுக்கக் கூடிய வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.

பொருளாதாரத்துக்கான பங்களிப்பு

சுற்றுலாத் துறை பொருளாதாரத்தின் வேறு எந்த துறையைப் பார்க்கிலும் சிறந்த முறையில் பல்வேறு வழிகளில் பொருளாதாரத்துக்கும் சமூகத்துக்கும் பங்களிப்பினை நல்கி வருகின்றது. வேலை வாங்ப்புக்களின் உருவாக்கம், அரசாங்க வருமான உருவாக்கம் அந்நியச் செலாவணி சம்பாத்தியம், பிராந்திய அபிவிருத்தி மற்றும் வருமானப் பகிர்வு என்பன சுற்றுலாத்துறை இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் மிக முக்கியமான பங்களிப்புக்களாக இருந்து வருகின்றன.

சுற்றுலா துறை மூலமான வேலைவாய்ப்புக்கள்

| வருடம் | நேரடி வேலை வாய்ப்புகள் | மறைமுக வேலை வாய்ப்புகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1970 | 5 138 | 6 940 | 12 078 |
| 1971 | 6 397 | 8 040 | 15 037 |
| 1972 | 7 040 | 9 500 | 16 540 |
| 1973 | 7 134 | 10 780 | 17 914 |
| 1974 | 8 551 | 11 550 | 20 101 |
| 1975 | 10 148 | 13 700 | 23 848 |
| 1976 | 11 752 | 15 900 | 27 652 |
| 1977 | 13 716 | 18 250 | 32 236 |
| 1978 | 15 404 | 20 795 | 36 199 |
| 1979 | 18 472 | 24 937 | 43 409 |
| 1980 | 19 878 | 28 022 | 47 900 |
| 1981 | 23 023 | 32 232 | 55 255 |
| 1982 | 26 776 | 37 486 | 64 262 |
| 1983 | 23 374 | 31 234 | 54 608 |
| 1984 | 24 541 | 34 357 | 58 898 |
| 1985 | 22 723 | 31 810 | 54 533 |
| 1986 | 22 285 | 31 199 | 53 484 |
| 1987 | 20 338 | 28 473 | 48 811 |
| 1988 | 19 960 | 27 944 | 47 904 |
| 1989 | 21 958 | 30 741 | 52 699 |
| 1990 | 24 964 | 34 950 | 59 914 |
| 1991 | 26 878 | 37 629 | 64 507 |
| 1992 | 28 790 | 40 306 | 69 096 |
| 1993 | 30 710 | 42 994 | 73 704 |
| 1994 | 33 956 | 47 532 | 81 494 |
| 1995 | 35 068 | 49 095 | 84 163 |
| 1996 | 31 963 | 44 248 | 76 711 |
| 1997 | 34 006 | 47 608 | 81 614 |
| 1998 | 34 780 | 48 692 | 83 472 |

சுற்றுலா கைத்தொழில் துறை இலங்கையின் ஓரளவுக்கு தேர்ச்சி பெற்ற மனித வளத் திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது. ஹோட்டல்கள், போக்குவரத்து, தங்குமிட வசதி, கேளிக்கை, பிரயாண முகவரகங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட சேவைகள் போன்ற பெருந்தொகையான ஏனைய கைத்தொழில்களும் சேவைகளும் சுற்றுலா கைத்தொழில் துறையுடன் நேரடியாக பிணைக்கப்பட்டுள்ளன. கட்டடவாக்கம், விவசாயம் மற்றும் தயாரிப்பு கைத்தொழில் போன்ற வேறு பல கைத்தொழில்கள் சுற்றுலாத் தொழில் துறையுடன் மறைமுகமாக பிணைக்கப்பட்டுள்ளன. மிகச் சிறந்த மனித வள ஆற்றல்களையும் தாழ்ந்த மூலதன வளத்தினையும் கொண்டிருக்கும் இலங்கையைப் போன்ற ஒரு நாடு பரந்த வீச்சிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியாது. ஆனால், குறைந்த அளவில் மூலதனமும் தொழில்நுட்பமும் தேவைப்படும் சுற்றுலாக் கைத்தொழில் போன்ற பெருமளவுக்கு மனித வளங்களில் தங்கியிருக்கும் ஒரு கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதில் எத்தகைய பிரச்சினைகளும் இருந்து வரவில்லை. சுற்றுலா கைத்தொழில் துறையின் கடந்த கால செயலாற்றுகையும் இன்றைய போக்குகளும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்திலும் மனித வள திட்டமிடலிலும் சுற்றுலாத் தொழில் துறை மிகுந்த முக்கியத்துவத்தை கொண்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. 1970 தொடக்கம் சுற்றுலா கைத்தொழில் துறையில் உருவாக்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை இடையறாது அதிகரித்து வந்துள்ளது. ஆனால், 1982 க்கு பிற்பட்ட காலப் பிரிவின் போது நாட்டில் இடம் பெற்று வந்த உள்நாட்டு கலவரங்கள் காரணமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தீவிரமான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், 1998 அளவில் இக் கைத்தொழில் துறை மீட்சி நிலையை எட்டியிருந்திருப்பதுடன், அது 34,780 நேரடி வேலை வாய்ப்புக்களையும் 48,692 மறைமுக வேலைவாய்ப்புக் களையும் உருவாக்கியிருந்தது.

பிராந்திய அபிவிருத்தி

சுற்றுலாக் கைத்தொழில் பிராந்திய அபிவிருத்திக்கு மிக முக்கியமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. ஒரு நாடு அதன் கவர்ச்சி அம்சங்களையும் கேளிக்கை வசதிகளையும் அபிவிருத்தி செய்து சுற்றுலா கவர்ச்சி மையங்களை உருவாக்க வேண்டுமானால் அது உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவது அவசியமாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விமான நிலையங்கள், துறைமுகங்கள், பாதைகள், தங்குமிட வசதிகள், நீர் விநியோகம், மின்சாரம், தொலைத்தொடர்பு, சுகாதார சேவைகள் மற்றும் கடைத்தொகுதிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலமே சுற்றுலாப் பயணிகளை தம்பால் கவர்ந்திழுக்க முடியும். அவ்வாறு அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொழுது பிராந்திய அபிவிருத்தி தானாகவே ஏற்படுகிறது. இது கிராமப் பகுதிகளிலும் சாதகமான தாக்கங்களை எடுத்து வருவதுடன் அப்பிரதேசங்கள் சுற்றுலாத் துறைக்கான பொருள்களை வழங்கும் இடங்களாக வளர்ச்சி அடைகின்றன. இதற்கான மிகச் சிறந்த உதாரணம் கண்டலம பிரதேசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வருமானப் பகிர்வு

இலங்கைச் சமூகத்துக்கிடையே வருமானப் பகிர்வில் ஏற்பட்டு வரும் ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதில் சுற்றுலாத் துறை வகித்து வரும் பங்கு நாட்டின் பொருளாதார முகாமையில் மிக முக்கியமான ஒரு கூறாக இருந்து வருகின்றது. சுற்றுலாத் துறை வேறு கைத்தொழில்களைப் போலன்றி விமானச் சேவைகள், விமான நிலையம், சுமை தூக்குபவர்கள், பயண முகவரகங்கள், வழிகாட்டிகள், ஹோட்டல்கள், சுற்றுலா பொருட்களை வழங்கும் ஏனைய வழங்குனர்கள் போன்ற பல்வேறு தரப்பினரிடையே வருமான பகிர்வினை எடுத்து வருகின்றது. சுற்றுலா கைத்தொழிலின் பின்னோக்கிய இணைப்புக்களும் முன்னோக்கிய இணைப்புக்களும் வருமானப் பகிர்வை மேம்படுத்துகின்றன. ஆடைக் கைத்தொழில் மற்றும் பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் போன்றவை வருமானத்தை பங்குதாரர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஒரு சில வழங்குனர்களுக்குமிடையில் மட்டுமே பகிர்ந்து கொள்கின்றன. மாறாக, சுற்றுலாத் துறையின் மூலம் கிட்டும் வருமானங்களை நாட்டின் பரந்த சமூகப் பிரிவினர் தமக்குள் பகிர்ந்து கொள்கின்றனர்.

### அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம்

அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தை பொறுத்தவரையில் சுற்றுலாத் துறை இலங்கைப் பொருளாதாரத்தில் ஆடை ஏற்றுமதிகளுக்கு அடுத்ததாக இரண்டாவது ஸ்தானத்தை பெற்றுள்ளது. உண்மையிலேயே சுற்றுலாத் துறை நாட்டின் கட்புலனாகாத அந்நியச் செலாவணி சம்பாத்திய மூலமொன்றாக இருந்து வருகின்றது. 1960 களில் நிலவி வந்த அந்நியச் செலாவணி உரித்து சான்றிதழ் முறை (பீக்ஸ் முறை) இதற்கான ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். அந்நியச் செலாவணி சம்பாத்தியத்தின் மூலம் கிட்டும் அனுகூலங்கள் காரணமாக மக்கள் சுற்றுலாத் துறையில் முதலீடுகளை மேற் கொள்ளத் தொடங்கினார்கள். சுற்றுலாத் துறையின் மூலம் 1998 இல் இலங்கை 14,816 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை சம்பாதித்திருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது இது ரூ.1835.7 மில்லியன் அதிகரிப்பை காட்டியது. எனினும், இந்த வருமானத்தின் பெரும் பகுதி சுற்றுலா கைத்தொழிலுக்கு தேவையான உபகரணங்கள், மதுபானம் மற்றும் ஏனைய உள்ளீடுகள் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கென செலவு செய்யப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்திகளை எம்மால் அதிகரிக்கக் கூடியதாக இருந்தால் அதன் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு வரும் அந்நியச் செலாவணியை சணிசமான அளவில் எம்மால் சேமித்துக் கொள்ள முடியும்.

சுற்றுலாத் துறை அதனுடன் சம்பந்தப்பட்டுள்ள கைத்தொழில்களை மேம்படுத்துவது மட்டுமன்றி ஏனைய உள்ளூர் கைத் தொழில்களுக்கும் மறைமுகமாக உதவி வருகின்றது. சுற்றுலா பயணிகள் உணவு, தங்குமிடம் மற்றும் ஏனைய சேவைகள் என்பன தொடர்பாக பணத்தைச் செலவிட்டு வருகின்றனர். இத்தகைய செலவுகள் தவிர நினைவுப் பொருட்களை கொள்வனவு செய்தல் ஏனைய மேலதிக சேவைகள் என்பவற்றின் மீதும் அவர்கள் பணத்தை செலவு செய்கின்றனர். உதாரணமாக, பத்திக் ஆடைகள். இரத்தினக் கற்கள், மர வேலைப்பாடுகள், பித்தளைப் பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் போன்றவற்றை அவர்கள் வாங்குகிறார்கள். இத்தொழில்களுக்கு சுற்றுலா பயணிகள் வழங்கி வரும் அனுசரணை இலங்கையின் உள்ளூர் கைத்தொழில்களின் மேம்பாட்டுக்கு ஊக்குவிப்பினை வழங்கி வருகின்றது. இன்று ஒரு சில உள்ளூர் கைத்தொழில்கள் பெருமளவுக்கு சுற்றுலா கைத்தொழிலின் மீதே தங்கியிருந்து வருகின்றன. பாரிய அளவிலான கைத்தொழில்கள் மட்டுமன்றி தெங்குப் பொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் சிறு பண்ணை உற்பத்திகள் போன்ற சுய தொழில் அடிப்படையிலான கைத் தொழில்களும் சுற்றுலா துறையின் மூலம் தூண்டுதலை பெற்று வருகின்றன.

சுற்றுலா துறையின் மூலம் கிடைத்த வருமானம் (1990 ~ 1998)
(ரூ. மில்லியன்)

| வருமான மூலம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஹோட்டல்கள், உணவகங்கள் | 20.2 | 8.4 | 76.7 | 80.2 | 78.3 | 79.5 | 59.6 | 116.0 | 143.6 |
| பயணமுகவரகங்கள் | 28.0 | 15.8 | 40.1 | 20.73 | 26.2 | 28.0 | 26.4 | 29.1 | 58.8 |
| கடைகள் | 2.0 | 2.5 | 10.1 | 9.2 | 10.0 | 10.8 | 9.3 | 12.1 | 14.4 |
| தரையிறங்கும் வரி | 99.0 | 123.4 | 177.1 | 196.1 | 203.8 | 201.6 | 151.1 | 183.1 | 190.5 |
| கலாச்சார முக்கோணம் | 44.7 | 69.6 | 102.3 | 149.6 | 176.1 | 168.7 | 121.2 | 186.0 | 225.0 |
| தாவரவியல் பூங்காக்கள் | 4.3 | 6.2 | 9.6 | 10.3 | 19.6 | 25.2 | 16.8 | 21.8 | 26.7 |
| விலங்குக் காட்சிச் சாலைகள் | 4.4 | 6.4 | 9.3 | 10.3 | 11.0 | 11.4 | 14.4 | 15.1 | 18.8 |
| தேசிய பூங்காக்கள் | 1.2 | 1.7 | 3.4 | 13.5 | 29.4 | 38.5 | 27.8 | 34.5 | 41.2 |
| அருங்காட்சியகங்கள் | 0.9 | 0.8 | 1.0 | 1.2 | 1.2 | 1.2 | 0.6 | 0.7 | 0.7 |
| மொத்தம் | 204.7 | 234.8 | 429.6 | 431.1 | 556.1 | 564.9 | 427.2 | 608.4 | 719.8 |

மூலம் : இலங்கை சுற்றுலா சபை

### அரசாங்க வருமானம்

அரசாங்கம் அதன் வருமானங்களை பல்வேறு வழிகளிலும் அதிகரித்து வருகின்றது. பொதுவாக ஏனைய கைத் தொழில்கள் வரிகளின் மூலம் அரசாங்க வருமானத்துக்கு பங்களிப்புச் செய்து வருகின்றன. ஆனால், சுற்றுலா துறையின் மூலம் இவ்விதம் பங்களிப்பு செய்யப்பட்டு வரும் வருமானம் ஏனையவற்றின் பங்களிப்புக்களைப் பார்க்கிலும் பெருமளவுக்கு உயர்வானதாக இருந்து வருகின்றது. இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை 1990-1998 காலப் பிரிவின் போது சுற்றுலா துறையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் அரசாங்கத்துக்கு பங்களிப்பு செய்யப்பட்டு வந்த வருமானங்களை எடுத்துக் காட்டுகின்றது. 1990 இல் 204.7 மில்லியன் ரூபாவாக இருந்து வந்த இந்த பங்களிப்பு 1998 இல் 719.8 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தமையை இந்த அட்டவணை காட்டுகின்றது. சுற்றுலாத் துறையின் மூலமான வருமானங்களை பெருமளவுக்கு அதிகரித்துக் கொள்ளக்கூடிய உள்ளார்ந்த வாய்ப்பினை இலங்கை கொண்டுள்ளது. இதற்கென உறுதியான அபிவிருத்தித் திட்டங்கள் பொருத்தமான விதத்தில் திட்டமிடப்பட்டு அமுல் செய்யப்படுவது அவசியமாகும்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் தமது பயணத்தின் போது பல்வேறு கவர்ச்சி மையங்களுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். இலங்கையின் சிறப்பம்சங்களையும் பயணிகளின் அக்கறைக்குரிய கவர்ச்சி இடங்களையும் எடுத்துக் காட்டும் சந்தைப்படுத்தல் உத்திகளை நாங்கள் சரிவர மேற் கொண்டால் ஏனைய நாடுகளுடன் எம்மால் எளிதில் போட்டிபோடக் கூடிய நிலை ஏற்படும். பாரம்பரியமான மேற்கைரோப்பிய சந்தைகளை மட்டுமன்றி தூர கிழக்கு நாடுகள், செல்வ வளமிக்க பசுபிக் நாடுகள் என்பவற்றிலும் சந்தை வாய்ப்புக்களை நாங்கள் கண்டறிய வேண்டும். இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் எந்த ஒரு உத்தியினதும் அடிச்சரடாக அமைய வேண்டிய அம்சம் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பான அக்கறையாகும். இது இப்பொழுது இலங்கையின் நற்பெயருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. எனவே, இலங்கையில் சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் மேற்கூறப்பட்ட வழிமுறைகளை உள்ளடக்கக்கூடிய விதத்தில் குறுங்கால மற்றும் நீண்ட கால கொள்கை திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு தொழிலொன்றின் பரவல் மற்றும் சந்தையாற்றல் என்பவற்றை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அவசியமான சந்தைப்படுத்தல் திறன்கள்

அனோமா கொலன்னஹுறபிட்டிய,
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
வணிகக் கல்வித்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

## அறிமுகம்

சிறு தொழில்துறை பொதுவாக வளர்ச்சி அடைந்த நாடுகளிலும் அதே போல வளர்முக நாடுகளிலும் ஒரு முக்கிய துறையாக இருந்து வருவதுடன், அது அபிவிருத்தியின் மீது சாதகமான தாக்கங்களை எடுத்து வரும் ஒரு முக்கியமான காரணியாகவும் உள்ளது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி குறித்து நோக்கும்போது இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமைக்கும் தற்பொழுது காணப்படும் நிலைமைக்குமிடையில் முக்கியமான பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த மாற்றம் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்பான ஒரு மாற்றமாகவே இருந்து வருகின்றது. சுதந்திரத்தை அடைந்த காலப் பிரிவின்போது மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் 40 சதவீதத்துக்கு விவசாயத் துறை பங்களிப்பு வழங்கி வந்தது. இன்று அது 18 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. அதேவேளையில், ஆரம்ப காலத்தில் சுமார் 20 சதவீதம் அளவில் இருந்து வந்த கைத்தொழில் துறையின் பங்களிப்பு இப்பொழுது 30 சதவீதம் வரையில் உயர்ந்து சென்றுள்ளது. இது இலங்கையின் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் கைத்தொழில்மயமாக்கல் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. படிப்படியாக இடம்பெற்றுவரும் இந்த கைத்தொழில் மயமாக்கல் முயற்சிக்கு அரச தரப்பிலிருந்தும் முழுமையான ஆதரவு கிடைத்து வருகின்றது என்பதனை கைத்தொழில் கொள்கை தொடர்பான அண்மைக் கால மாற்றங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதாவது, 1978 தொடக்கம் 1995 வரையில் நாட்டின் கைத்தொழில் கொள்கையில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்களை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக 1995 இல் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கைத்தொழில்மயமாக்கல் கொள்கை சிறுதொழில் துறை குறித்து சிறப்பாக கவனம் செலுத்தியிருந்தது. அது பின்வரும் குறிக்கோள்களை கொண்டிருந்தது.

1. கைத்தொழில் அடித்தளத்தை விரிவாக்குதல், பன்முகப்படுத்துதல் மற்றும் சர்வதேச மட்டத்தில் பராமரித்து வருதல்.
2. பௌதிக மற்றும் மனித வளங்களை செயல்திறனுடன் கூடிய விதத்தில் முகாமை செய்தல்.
3. கிராமப் பிரதேசங்களிலும் நகரப் பிரதேசங்களிலும் தொழில் வாய்ப்புக்களையும் வருமான மட்டங்களையும் உருவாக்குதல்.
4. ஏற்றுமதி மேம்பாடு.
5. கைத்தொழில்களை பிராந்திய ரீதியில் பரவலாக்குதல்.

இக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கென பல்வேறு வகையிலான உத்திகள் வகுக்கப்பட்டிருந்தன. இவற்றில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில் துறையை விரிவாக்குவதற்கு வசதிகளை வழங்குதல், சிறு தொழில்களுக்கும் பாரிய அளவிலான தொழில்களுக்கு மிடையில் தொடர்புகளை உருவாக்குதல் என்பன முக்கிய உத்திகளாக இருந்து வந்தன. எனவே, அண்மைக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் சிறு தொழில் முயற்சிகளுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை பொறுத்தவரையில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி நேரிட்டுள்ளது. சிறு தொழில் முயற்சியாளர்கள் நீண்ட கால அடிப்படையில் சந்தையில் நிலைத்து நிற்க முடியாமை, குறுங்காலத்தில் ஏற்படும் வீழ்ச்சி எனப் பரவலான முறையில் இரு அபாயங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சிறு தொழில் முயற்சியாளர்களின் சந்தைக் கட்டமைப்பே இதற்கான முக்கிய காரணியாகும். அவர்களில் நான்கில் மூன்று பங்கினர் விற்பனைக் கருதுகோளை அடிப்படையாகக் கொண்டே சந்தைக்குள் பிரவேசிக்கின்றனர். அதன் காரணமாக, ஒருபுறம் அவர்கள் தமது சந்தையை நீண்ட காலம் தக்க வைத்துக் கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. மறுபுறம் குறுங்கால அடிப்படையிலும் அவர்கள் வீழ்ச்சி நிலையை எதிர்கொள்கின்றனர். இதனை கருத்தில் கொண்டு சிறுதொழில் முயற்சியாளர்களுக்கும் மிகப் பொருத்தமானது எனக் கருதப்படும் சந்தைப்படுத்தல் கருதுகோள் ஒன்றை எடுத்து விளக்குவதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

## சிறுதுறை வணிகம் யார்?

வணிக முயற்சிகளை வகைப்படுத்துவதில் சந்தையின் குறிப்பிட்ட அளவுக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு பிரிவினர் என சிறு வணிகப் பிரிவினரை எம்மால் வகைப்படுத்த முடியும். இந்தப் பிரிவினை திட்டவட்டமாக வரையறை செய்வது ஒரு கஷ்டமான காரியமாகும். முகாமைத்துவ வல்லுனர்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில் முயற்சிகளுக்கு வியாக்கியானம் வழங்குவதன் மூலம் சிறு தொழிற்துறைக்கு வரைவிலக்கணம் வழங்குவது சிரமமானதாகும். ஏனெனில், சிறுதொழில் முயற்சிகளில் 95% க்கும் மேற்பட்டவை தனிப்பட்டவருக்கு சொந்தமான தொழில்களாக இருந்து வருகின்றன. அந்த நிலையில், அத்தொழில் முயற்சியின் உற்பத்தி முகாமையாளராகவும் சந்தைப்படுத்தல் முகாமையாளராகவும் ஆளணி முகாமையாளராகவும் நிதியியலாளராகவும் தனி ஒருவரே செயற்பட்டு வருகின்றார். அதன் காரணமாக அந்த உரிமையாளரின் கருத்துக்களே அத்தொழில் முயற்சியினில் வியாபித்துள்ளன. சிறு தொழில் துறைக்கு வரைவிலக்கணம் வழங்க முடியாமல் இருந்தாலும் அதனை எடுத்து விளக்க முடியும் என்பதே நவீன கருத்தாக இருந்து வருகின்றது.

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மிகச் சமீபத்திய வியாக்கியானத்தில் 1ம் வருடாந்த ஊழியர்களின் எண்ணிக்கை 10 தொடக்கம் 19 வரையில் காணப்படும் தொழில் முயற்சிகள் சிறு தொழில் முயற்சிகளாக வகைப்படுத்தப்பட்டிருப்பதுடன், 5 தொடக்கம் 9 வரை ஊழியர்களைக் கொண்டிருக்கும் தொழில்கள் மிகச் சிறு தொழில்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுதொழில் முயற்சி என்பதனை மிக முக்கியமான ஒரு பொருளாதார கருதுகோளாக எடுத்து விளக்க முடியும். சிறு தொழில் முயற்சியாளர்கள் பெரும்பான்மையோர் குறுங்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலான சந்தைகளிலேயே தங்கியிருந்து வருகின்றனர். ஒரு சில சிறுதொழில் முயற்சியாளர்களே நீண்ட கால அடிப்படையிலான சந்தை வாய்ப்புக்களை பெற்று வருகின்றனர். 1971 இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட போல்ட்டன் கமிட்டி அறிக்கை சிறுதொழில் துறை பொருளாதாரத்தின் ஆரோக்கியத்துக்கு உகந்த ஒரு கருதுகோள் எனக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், இன்று சிறுதொழில் துறை முக்கியமான சில பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது. நீண்ட கால அடிப்படையில் சந்தை வாய்ப்பு இல்லாதிருப்பது இதில் முக்கிய பிரச்சினையாக உள்ளது. மறுபுறத்தில், இத்துறை பெற்றிருந்த சந்தைப் பங்கும் ஒரு வீழ்ச்சிப் போக்கை காட்டி வருகின்றது. இத்தகைய நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்கென கோட்பாட்டு ரீதியிலாகிலும் ஒரு செயன்முறை அடையாளம் காணப்படுவது அவசியமாகும்.

ஒரு சிறு தொழில் முயற்சியை ஆரம்பித்து அபிவிருத்தி செய்வதுடன் முக்கியமாக ஐந்து கட்டங்கள் சம்பந்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதனை நாங்கள் வர்த்தக துறையின் சுழல் வட்டம் என குறிப்பிட முடியும். எந்த ஒரு வர்த்தக முயற்சி தொடர்பாகவும் இந்தக் கருதுகோளை நாங்கள் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

1. தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னரான கட்டம்.
2. தொழிலை ஆரம்பிக்கும் கட்டம்
3. தொழிலை நிலைநிறுத்தும் கட்டம்.
4. தொழிலுக்கு வலுவூட்டி அதனை வேரூன்றச் செய்யும் கட்டம்
5. தொழிலை நவீனமயமாக்கும் கட்டம்.

ஆனால், அனைத்து சிறு தொழில் முயற்சிகளும் இந்த வட்டத்துக்கு ஊடாக ஐந்து கட்டங்களிலும் பயணிக்கும் என எம்மால் கூற முடியாது. தொழிலின் இயல்பு, புதிய துறைகளில் பிரவேசிக்கக் கூடிய அதன் வாய்ப்பு முகாமைத்துவ அடித்தளம் மற்றும் சந்தைப்படுத்தும் திறன்கள் என்பன இந்த ஐந்து கட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. சிறு தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவை தொடர்ந்தும் சிறு அளவினைக் கொண்டவையாகவே இருந்து வருவதுடன், அதற்கு அப்பால் தமது எல்லைகளை விஸ்தரித்துக் கொள்வதற்கு அவை விரும்புவதில்லை என்றும் கருதப்படுகிறது. சந்தையை விருத்தி செய்து கொள்வதன் மூலம் தமது தொழில்துறையை விருத்திசெய்து கொள்ளும் விஷயத்தில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை என்பதே இதன் பொருளாகும். அவ்வாறில்லாவிடில், தமது தொழிலில் மேலும் விருத்தி நிலையை எடுத்து வரும் ஆற்றல் அவர்களிடம் காணப்படவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. எந்த ஒரு சிறு தொழில் முயற்சியாளரும் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் தனது தொழில் முயற்சியை ஒரு பெரிய தொழில் முயற்சியாக வளர்த்துக் கொள்வதற்கு விரும்புவார் என்றும் கூறப்படுகின்றது. அதன் மூலம் தமக்கு கிடைக்கக்கூடிய உயர் இலாபங்களை விட்டுக்கொடுப்பதற்கு அவர்கள் விரும்புவார்கள் எனக் கூற முடியாது. நிலைமை அவ்வாறாயின் சிறுதொழில் துறையினர் தமது தொழிலை மேம்படுத்திக் கொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதே உண்மையாகும். எனவே, இவ்விதம் அவர்கள் ஆற்றல் அற்றவர்களாக இருந்து வருவதற்கு வழிகோலியுள்ள காரணங்களை கண்டறிவதன் மூலம் இந்த தேக்க நிலையிலிருந்து விடுபட்டு வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டியிருக்கும் நடவடிக்கைகளை எம்மால் இனங்கண்டு கொள்ள முடியும். சிறு தொழில் துறையினர் இவ்விதம் பின்தங்கியிருப்பதற்கு உள்ளீடுகளை பயன்படுத்துவதில் சரியான முறையில் முகாமைத்துவம் இடம்பெறாமல் இருப்பதும் உரிய விதத்தில் சந்தைப்படுத்தல் இடம்பெறாதிருப்பதும் காரணமாகும் என முகாமைத்துவ வல்லுனர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வேறொரு விதத்தில் கூறுவதாயின் சிறு தொழிற்துறையில் பொருத்தமான முகாமைத்துவ நுட்பங்களையோ அல்லது சந்தைப்படுத்தல் நுட்பங்களையோ அவதானிக்க முடியாதுள்ளது.

சிறு தொழில்களின் அபிவிருத்தியில் சந்தைப்படுத்தலே உயிர் நாடியாக இருந்து வருகின்றது என பேர்ன்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார். இந்த உயிர்நாடியின் இயக்கம் சரிவர நிகழாவிடின் அந்த தொழிலின் தொடர்ச்சியான இயக்கத்துக்கு எம்மால் உத்தரவாதமளிக்க முடியாது. இந்த கருதுகோளின் பிரகாரம் ஒரு தொழிலை துவக்குவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் நவீனமயமாக்குவதிலும் சந்தைப்படுத்தலின் மூலம் அதற்கு அளப்பரிய ஒரு பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. இதனை சிறுதொழில்துறைக்கு மட்டுமன்றி ஏனைய அனைத்து விதமான தொழில் துறைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு கருதுகோளாக நாங்கள் இனங்கண்டு கொள்ள முடியும். இதன் பிரகாரம் ஒரு தொழிலை ஆரம்பிப்பது தொடர்பான எண்ணம் தோன்றுவதிலிருந்து அதனை நவீனமயப்படுத்துவது வரையிலான அனைத்துக் கட்டங்களிலும் உபயோகித்துக் கொள்ளக்கூடிய சந்தைப்படுத்தல் கட்டங்களை கீழ்க்காணும் விதத்தில் அடையாளம் கண்டுகொள்ள முடியும். எந்த ஒரு தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கான ஒரு முன் மாதிரியாக அதனை பயன்படுத்திக் கொள்ள முடியும். சிறு தொழில்கள் தொடர்பாக இந்த நான்கு கட்டங்களையும் இனங்காண்பதில் தொழில் உரிமையாளர் முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது.

1. தொழிலைத் துவங்குவதற்கு முன்னரான கட்டத்தில் சந்தைப்படுத்தல்.
2. தொழிலை நிலைநிறுத்துவதற்காக சந்தைப்படுத்தல்
3. தொழிலுக்கு வலுவூட்டுவதற்கும் வளர்ச்சியை எடுத்து வருவதற்குமான சந்தைப்படுத்தல்
4. தேர்ச்சி மற்றும் நவீனத்துவம் என்பவற்றிற்கான சந்தைப் படுத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டிருந்த நான்கு கட்டங்களும் சிறுதொழில் முயற்சிகள் தமது சந்தையை விருத்தி செய்து கொள்வதற்கென உகந்த முன்மாதிரிகளாக இருந்து வருகின்றன. அத்தகைய சந்தைப்படுத்தல் உத்திகளை உபயோகித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை பின்வருமாறு எடுத்து விளக்க முடியும்.

### தொழிலை துவங்குவதற்கு முன்னரான கட்டத்தில் சந்தைப்படுத்தல்

தொழில் தொடர்பான எண்ணம் உருவாகி அதனை ஆரம்பிக்கும் வரையில் உள்ள காலப் பிரிவினை இந்த முதல் கட்டமாக குறிப்பிட முடியும். ஒரு சில தொழில்கள் தொடர்பாக இக்காலப்பிரிவு ஓரிரு மாதங்களாகவும் வேறு சில தொழில்கள் தொடர்பாக பல வருட காலமாகவும் இருந்துவர முடியும். அது தொழிலை ஆரம்பிப்பவரின் எண்ணப் போக்குகள், நடவடிக்கைகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு பல காரணங்கள் இருந்துவர முடியும். ஆனால், பொதுவாக அவர்கள் சாதனைகளை நிகழ்த்துவதில் தமக்குள்ள விரும்பம், தனிப்பட்ட அனுபவங்கள், சுயதொழில் மீதான இயல்பான ஈடுபாடு, அறிவு மற்றும் ஆற்றல்கள் என்பவற்றின் அடிப்படையில் தொழில்களில் ஈடுபடுவதற்கு தூண்டப் படுகிறார்கள். இவற்றை உள்ளிழுக்கும் காரணிகள் எனக் குறிப்பிட முடியும். அதேபோல வேலையில்லாத் திண்டாட்டம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் இழப்பு என்பவற்றினால் ஏற்படும் விரக்தி நிலை வாழ்க்கைப் போக்கில் ஏற்படும் திடீர் அதிர்ச்சிகள் போன்ற காரணங்களினாலும் மக்கள் தொழில்களில் ஈடுபடுவதற்கு தூண்டப்படுகிறார்கள். இவற்றை உந்தித் தள்ளும் காரணிகள் எனக் குறிப்பிட முடியும். இவற்றை கவனத்தில் எடுக்கும் பொழுது நபர் ஒருவர் ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கான காரணத்தை மூன்று அடிப்படை சந்தர்ப்பங்களுக்கூடாக இனங்கண்டுகொள்ள முடியும். இயல்பான நிர்ப்பந்தம், அந்த நபருக்குள் காணப்படும் வளர்ச்சி யடைய வேண்டும் என்ற எண்ணம், துணிச்சல் மற்றும் சூழல் காரணிகள் என அவற்றை விளக்கலாம்.

இயல்பான நிர்ப்பந்தம் என்பது பெருமளவுக்கு தொழில் முயற்சியாளரின் தனிப்பட்ட அனுபவம், தொழில் அனுபவம் தனித்துவமான குணாதிசயங்கள் மற்றும் கல்வி மட்டம் என்பவற்றிலேயே தங்கியிருந்து வருகின்றது. இவற்றின் வேகத்தின் மூலம் அந்நபரின் சுய தொழிலில் ஈடுபடும் ஆற்றல் அல்லது ஆற்றலின்மை நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆரம்ப காரணிகள் நபர் ஒருவர் சந்தைப்படுத்தும் திறன் ஒன்றினை வளர்த்துக் கொள்வதற்கும் அது தொடர்பாக மேலும் கல்வியை பெறுவதற்கும் வலுவான ஓர் அத்திவாரத்தை வழங்குகின்றது. அதற்கூடாக சுயதொழில் முயற்சியில் அவர் சிறந்த சந்தைப்படுத்தல் சூழலொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான ஆற்றலொன்றையும் போட்டியையும் சந்தை இடையூறுகளை எதிர்த்து சமாளிப்பதற்கான ஆற்றலையும் பெற்றுக் கொள்கிறார். மேலும், நுகர்வோரின் நடத்தை தொடர்பான ஒரு தெளிவையும் அவர் பெற்றுக் கொள்கிறார். அதன் மூலம் தொழிலை தொடங்குவதற்கான ஆற்றல் அவருக்கு கிட்டுகின்றது. அதேபோல அவர் தனக்குள்ள உள்ளார்ந்த ஆற்றல்களை தெளிவாக புரிந்து கொள்வதுடன், தொழில் துறைகள் விவகாரங்களையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். ஒரு வணிகர் என்ற முறையில் பொதுவான வணிக செயற்பாடுகள், தரக் கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள், பொதிப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் மற்றும் ஏற்றுமதித் துறையின் போக்குகள் என்பவற்றையும் தாம் பிரவேசிக்க விரும்பும் தொழில்துறையில் இயங்கிவரும் சிறு வணிகர்கள் குறித்தும் அவர்களுக்குள்ள ஆற்றல்கள் குறித்தும் அவர் ஆராய வேண்டும். மூன்றாவதாக, தனது தொழில் முயற்சியை ஒரு வெற்றிகரமான பொருளாதார நடவடிக்கையாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு தன்னிடம் இருக்கும் இரு திறன்களை அவர் மிகவும் தெளிவான முறையில் மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும்:

1. சந்தையில் நிலவிவரும் கேள்விக்கு ஏற்ற வித்தில் ஒரு பண்டத்தை அல்லது ஒரு சேவையை வழங்குவதற்கான ஆற்றல்.
2. இலாபமீட்டும் அதேவேளையில் நுகர்வோரை தம்மிடம் தக்கவைத்துக் கொள்ளும் ஆற்றல்.

இந்த இரு ஆற்றல்களிலும் இரண்டாவது ஆற்றல் தொடர்பாக முக்கியமாக அதிக அளவில் கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. ஏனெனில், சிறுதொழில் துறை தொடர்பாக நிலவி வரும் பொதுவான கருத்து, சிறுதொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திச் செயற்பாடுகளில் வெற்றியடைந்தபோதிலும் சந்தைப்படுத்தலில் தோல்வியை தழுவிக் கொள்கிறார்கள் என்பதாகும். மேலும், சிறு தொழில் முயற்சியாளர் தான் இயங்கும் பொருளாதார சூழல் குறித்து கவனஞ் செலுத்தி, குறிப்பிட்ட தொழிலில் முதலீடு செய்ய வேண்டிய மூல தனத்தின் அளவு குறித்தும் மூலதனத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய மார்க்கங்கள் குறித்தும் வெற்றியீட்டுவதற்கு தொழிலை எந்த எந்தத் துறைகளில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்தும் அலசி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

அடிப்படை வர்த்தக திட்டம் முதலில் உருவாக்கிக் கொள்ளப்பட வேண்டும். மேலும், பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் புத்தாக்கங்கள் குறித்தும் சந்தையின் இயல்பு குறித்தும் சந்தையின் பூகோள இயல்பு குறித்தும் அவர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. சந்தைப்படுத்தல் செயற்பாட்டின் போது மிகச்சிறந்த பொருத்தமான சந்தைப்படுத்தல் தொகுப்பு எது என்பதனையும் அவர் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இவற்றுக்கு ஊடாக தொழிலின் குறிக்கோள்களை வெற்றிகரமாக பயனுள்ள விதத்தில் சாதித்துக் கொள்வதற்கென வளங்களை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவது எப்படி என்பதனையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய உத்திகளுக்கு ஊடாக குறிப்பிட்ட தொழிலின் வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். இந்த நிலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பன சந்தையில் வெற்றிகரமாக போட்டியிடுவதற்கான ஆற்றலையும் தடைகளை தாண்டிச் செல்லும் ஆற்றலையும் கொண்டிருக்கும்.

### தொழிலில் நிலைத்து நிற்பதற்கான சந்தைப்படுத்தல்

ஒரு தொழில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அத்தொழிலை தொடர்ந்து நடத்திச் செல்வது தொடர்பாக ஓரளவுக்கு நம்பகத் தன்மை ஏற்பட்ட போதிலும், அத்தொழில் படிப் படியாக கடுமையான போட்டியொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலமை ஏற்படுகின்றது. அந்தப் போட்டியை சிறுதொழில் முயற்சியாளரால் எதிர்கொள்ள முடியாது போனால் அவர் சந்தைப்படுத்தல் கருதுகோள் தொடர்பாக கவனம் செலுத்த நேரிடும். இந்தச் சூழ்நிலையில் அவர் சந்தைப் போட்டி தொடர்பாகவும் நுகர்வோர், வழங்குனர்கள் தொடர்பாகவும் சந்தையிலுள்ள பிரதியீட்டு பொருள்கள் தொடர்பாகவும் புத்தாக்கங்களின் பிரவேசம் தொடர்பாகவும் விடயங்களை நன்கு அறிந்து கொள்வது மிக முக்கியமாகும். அதேபோல சந்தையில் இருந்து வரும் குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு கேள்வியை முன்வைக்கும் சிறுசிறு குழுக்கள் தொடர்பாகவும் அறிந்திருப்பது அவசியமாகும். மேலும், நுகர்வோர் திருப்தி என்ற கருதுகோளின் அடிப்படையில் சந்தையின் தேவைகளை நிறைவு செய்து வைப்பதற்கு முன்வருவதும் மிக முக்கியமாகும். இரண்டாவதாக, சந்தையில் பிரவேசிப்பதற்கான உத்திகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.. அதன்கீழ் தனது உற்பத்தி பண்டங்களின் தரம் சந்தையில் அவற்றுக்கு நிலவிவரும் கிராக்கி மற்றும் விலை என்பன தொடர்பாக திட்டவட்டமான உத்திகளை அவர் வகுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதற்கூடாக ஒரேநேரத்தில் நுகர்வோர் திருப்தியையும் இலாபத்தையும் சாதித்துக் கொள்ளக்கூடிய நிலை தோன்றுகின்றது. இது சந்தையில் நிலைத்திருப்பது தொடர்பாக முக்கியமாக செல்வாக்குச் செலுத்திவரும் ஓர் உத்தியாக இருந்து வருகின்றது. அதே வேளையில், தற்பொழுது தம் வசமுள்ள நுகர்வோரைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்கான வழிவகைகளையும் அவர் கண்டறிய வேண்டும். அதேவேளையில், சந்தையில் புதிய போட்டியாளர்களின் பிரவேசம் குறித்து விழிப்புடன் இருந்து வருவது அவசியமாகும். புதிய போட்டியாளர்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் பொருட்டு பொருத்தமான உத்திகளை வகுத்து செயற்பட வேண்டும். அதன்பின் தான் இலக்காக கொண்டிருக்கும் சந்தையின் குறிப்பிட்ட பிரிவினரை உள்ளடக்கக் கூடிய விதத்தில் விநியோக முறையொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். முடியுமான வரையில் நேரடி விநியோக முறைகளில் கவனம் செலுத்துவதும் இடைத் தரகர்களை குறைந்தபட்ச மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கும். புதிதாக தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும்பொழுது விநியோக செயற்பாட்டில் பல சிக்கல்கள் தோன்றுவது இயல்பாகும். அதாவது, வணிகர்களிடையே உற்பத்திப் பண்டம் தொடர்பாக விளக்கமின்மை இருந்து வரும் சந்தர்ப்பங்களிலேயே இத்தகைய சிக்கல்கள் ேோன்றுகின்றன. குறிப்பாக சிறிய மூலதனத்துடன் இயங்கி வரும் சிறு வணிகர் ஒருவர் இன்றைய சந்தைச் சூழ்நிலையில் பிரமாண்டமான அளவில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் பின்னணியில் தனது சிறிய சந்தைப் பங்கினை பாதுகாத்து கொள்வது ஒரு சிரமமான காரியமாகவே இருந்து வருகின்றது. ஒட்டுமொத்த சந்தை கட்டமைப்பிலும் இந்தநிலைமை பொதுவாக நிலவி வருகின்றது. இத்தகைய நெருக்கடி நிலையிலிருந்து விடுபட்டு தமது சந்தைப் பங்கினை பாதுகாத்து கொள்வதற்காக வளைந்து கொடுக்கும் தன்மை யுடன் சிறுதொழில் முயற்சியாளர்கள் இயங்கிவர வேண்டி யுள்ளது. நுகர்வோர் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் அனுசரித்துச் செல்லக்கூடிய முறையில் சந்தை உத்திகளை வகுத்துக் கொள்வது மிக முக்கியமாகும்.

### சந்தைக்கு வலுவூட்டுவதற்கும் அதனை வளர்த்தெடுப்பதற்கு மான சந்தைப்படுத்தல்

இதுவரையில் தனக்குரிய சந்தைப் பங்கினை பேணிப் பாதுகாத்து முன்னேறி வந்துள்ள சிறு தொழில் முயற்சியாளர் சந்தைக்கு வலுவூட்டிக் கொள்வதற்கும் அதனை வளர்த்தெடுத்துக் கொள்வதற்கும் மூன்றாவது தடவையாகவும் சந்தைப்படுத்தலை உபயோகித்துக் கொள்ள முடியும். ஆரம்ப கட்டத்தில் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் சிறு தொழில் முயற்சியாளரைப் பொறுத்த வரையில் இது ஒரு சிரமமான காரியமாக இருந்து வர மாட்டது. தன்னைச் சூழ உருவாகியிருக்கும் நுகர்வோரை தொடர்ந்தும் தன்னிடம் தக்கவைத்துக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளுக்கூடாக தொழிலை மேலும் வேரூன்றச் செய்ய முடியும். இச்சந்தர்ப்பத்தில் தனது தொழில்துறையில் காணப்படும் ஆற்றல்களையும் சந்தையில் காணப்படும் ஆற்றல்களையும் சந்தையில் காணப்படும் சந்தர்ப்பங்களையும் பொருத்தமான விதத்தில் இணைத்து தொழிலில் காணப்படும் பலவீனங்களை அடையாளம் கண்டு அதற்கூடாக போட்டி நிலைமைகளை தவிர்த்து முன்னோக் செல்வதற்கு அவர் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

சிறிய தொழில் முயற்சியொன்று வளர்ச்சி நிலையை எட்டுவது எப்படி என்பதனை கவனத்தில் எடுககும் பொழுது அடிப் படையில் உற்பத்தி அல்லது சேவை அபிவிருத்தி, தர மேம்பாடு போட்டியிடும் ஆற்றல் சந்தைப்படுத்தும் திறன்கள் படிப்படியான வளர்ச்சி மற்றும் இடையறாத வளர்ச்சி என்பவற்றை முக்கியமான கட்டங்களாக நாங்கள் கருதமுடியும். எனவே, இந்தக் கட்டம் வரும்வரையில் தொழில் முயற்சியின் பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் செயல்திறனுடன் கூடிய விதத்தில் ஆக்கபூர்வமான விதத்தில் நெறிப்படுத்தி, எசல்வது அவசியமாகும். அதன்மூலம் பெற்றுக்கொண்டுள்ள சந்தைப் பங்கினை மேலும் பலப்படுத்தி அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

### சந்தையின் தேர்ச்சிநிலை மற்றும் சீர்திருத்தம் என்பவற்றுக்கான சந்தைப்படுத்தல்

நன்கு வேரூன்றியிருக்கும் ஒரு தொழிலுக்கான சந்தை வாய்ப்பினை மேலும் வளர்த்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பமாக இக்கட்டத்தை இனங்காண முடியும். ஒரு நிறுவனம் சந்தையில் உச்ச மட்ட வளர்ச்சியை எட்டும் ஒரு கட்டமாக இது இருந்து வருகின்றது என குறிப்பிட முடியும் இச்சந்தர்ப்பம் தோன்றும் பொழுது ஒரு சிறுதொழில் முயற்சி மேலும் சந்தையை வளர்த்துக் கொள்வதற்கும் தனக்கு கிடைத்துள்ள சந்தையை தக்கவைத்துக் கொள்வதற்கும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயன்முறையை மேற்கொள்வதற்காக ஆளணியினரை பணியில் அமர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதேபோல தனது முக்கிய நுகர்வோர் குழுவினருடன் தாம் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளும் இச்சந்தர்ப்பத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கட்டத்தில் சிறுதொழில் முயற்சியாளர் தனக்கு தற்பொழுது கிட்டியிருக்கும் சந்தைப் பங்கினை அவ்வாறே தக்கவைத்துக் கொள்வதா அல்லது சந்தையை மேலும் வளர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதா என்ற முடிவினை திட்டவட்டமாக மேற்கொள்ள வேண்டும். தற்பொழுது தமக்கு கிட்டியிருக்கும் சந்தைப் பங்கினை மாத்திரம் தக்கவைத்துக் கொள்வதற்கு முன்வருவது இக்கட்டத்தில் மேற்கொள்ளக்கூடிய மிகச் சிறந்த சந்தை உத்தியாக இருந்து வருகின்றது என நாம் கருத வில்லை. அந்த நிலையில் சந்தையில் ஏற்படும் அச்சுறுத்தல் களை தவிர்த்துக் கொள்வதற்கென பொருத்தமான உத்திகளை சிறுதொழில் முயற்சியாளர் மேற்கொள்வது அவசியமாகும். தற்போதைய உற்பத்தி பண்டங்களில் சிறு சிறு மாற்றங்களை எடுத்து வருவதன் மூலமும் தரத்தினை மேம்படுத்தி வருவதன் மூலமும் தாம் இலக்காக் கொண்டிருக்கும் சந்தையை பாதுகாத்துக் கொள்வதற்கும் விலை குறைப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு ஊடாக இலக்கு சந்தையை மேலும் விரிவாக்கிக் கொள்வதற்கும் முயற்சிக்கலாம். போட்டியை போலவே இலக்காகக் கொண்டிருக்கும் நுகர்வோரின் தேவைகளிலும் ஒரு மாற்றம் ஏற்பட முடியும். அதன் காரணமாகவும் போட்டி தீவிர மடையலாம். சந்தையை விருத்தி செய்து கொள்வதற்காக சிறுதொழில் முயற்சியாளர் பின்வரும் உத்திகளை உபயோகித்துக் கொள்ள முடியும்:

1. புதிய உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்தல்.
2. தற்போதைய உற்பத்திப் பண்டங்களில் விருத்தி நிலையை எடுத்து வருதல்.
3. புதிய சந்தைகளில் பிரவேசித்தல்.

இத்தகைய உத்திகளை இனங்கண்டு பின்பற்ற முடியாத நிலையில் குறிப்பிட்ட தொழில் முயற்சி சந்தையில் தேக்க நிலையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட முடியும். இது சிறுதொழில் முயற்சியாளரின் சந்தைப் பங்கு இழக்கப்படுவதன் முதல் கட்டத்தை குறிக்கும். சந்தையை மேலும் தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சிக்கு உசிதமான ஓர் உத்தியாக ஏற்றுமதியைக் குறிப்பிட முடியும்.

ஏற்றுமதி உத்தியை உபயோகிக்கும் போக்கின் பிரகாரம் சிறு தொழில் முயற்சியாளர்களை பின்வரும் கட்டங்களின் கீழ் அடையாளம் கண்டுகொள்ள முடியும்:

1. மிகவும் தோல்வி அடைந்த நிலையில் இருந்து வரும் ஏற்றுமதியாளர்கள் தமது விற்பனைகளில் ஒரு சிறு பிரிவை மட்டும் ஏற்றுமதி செய்வதன் மூலம் ஒட்டுமொத்த சந்தை வாய்ப்புக்களையும் தவிர்ப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

2. சந்தையில் நிலவி வரும் ஏற்றுமதி வாய்ப்புக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சந்தையைக் கைப்பற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுபவர்கள்.

3. சந்தையில் காணப்படும் ஏற்றுமதி வாய்ப்புக்களை மிகவும் [illegible] முறையில் பயன்படுத்திக் கொள்பவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






The Contents of Economic Review may be quoted or reproduced with due acknowledgment

Price 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover Design & Print by
KALAMAZOO
SYSTEMS LIMITED